KALKI
2006 ரூ.8.00
பக்கங்கள்

கல்கி

குடும்பத்துடன் களிக்க...



கும்பாபிஷேக குளறுபடி!

– கலக்கத்தில் காஞ்சி



இமயத்தை மிஞ்ச
மலைகள் இல்லை...
சாரதா'ஸ் புடவையை
மிஞ்ச எதுவும் இல்லை.
SS-119
SK-303
சாரதா'ஸ்
சுப முகூர்த்த பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்
45,என்.எஸ்.பி. ரோடு, திருச்சி-2. போன்:2702077.
தன்பில்டிங், 827, மவுண்ட்ரோடு (தேவிதியேட்டர் எதிரில்
சென்னை-2, போன்:28521177.

இம்சை அரசன் 23ம் புலிகேசி!

இம்சை அரசன் 23ம் புலிகேசிக்கு... 123ம் இம்சை அரசி லஜ்ஜாவதி எழுதிக் கொள்வது. இங்கு நலம். அங்கும் நலமே! உமது பெயரிட்ட படத்தை மக்கள் வெள்ளத்துக்கிடையே கண்டு களித்ததும் ஓடோடி வந்து உமக்கு மடல் எழுதுகிறேன்.

நாளைய வரலாறு திரும்பி ஷுக்விடும் அளவுக்கு நவரசங்களையும் பிழிந்து நகைச்சுவைச் சாறு பருகத் தந்திருக்கிறீர். என்னே ஒரு சொல்லாற்றல், என்னே ஒரு ஆளுமை! படத்தின் ஒவ்வொரு சட்டத்திலும் (ஃப்ரேமிலும்) உமது ராஜ்ஜியம்தான்! உம்மை சரியாக ஆட்டுவித்த இயக்குநர் சிம்புதேவனுக்கும் பாராட்டுகள் உரித்தாகுக.

கதை என்னவோ பழையக் கள்ளுதான். ஆனால் ட்ரீட்மெண்ட் புதுசு.

நீர் பண்ணும் சேட்டைகள் ச்சோ ஸ்வீட். வரிக்கு வரி காமெடி பண்ணாமல் சம்பவங்கள் வழியாக மட்டுமே நகைச்சுவைத் தோரணங்கள். கொல்லனாக வரும் மனோ.பாலாவின் தொழில் நேர்த்தியால் தியேட்டரின் செங்கற்களும் சிரித்துச் சிரித்து விரிசல் விட்டுவிடுகின்றன. அண்டை நாட்டு மன்னனுக்கு எதிராக ஜம்பமாகப் போருக்குக் கிளம்பி பின்பு பட்டென்று அவனிடம் சரணாகதி ஆவதும் உமது கையாலாகாத்தனத்தை மெச்சி, கரடி உமிழ்நீர் தெளிப்பதும்... 'நினைத்து நினைத்துச் சிரித்தேன்' என்று பாடலாம்.

பாடல்கள் பழைய படங்களின் ஜெராக்ஸ் காப்பி. ஆனால் பின்னணி இசையில் சபேஷ் முரளி கலக்கியிருக்கிறார்கள். கலை இயக்குநர் கிருஷ்ணமூர்த்திக்குச் சுற்றிப்போட வேண்டும். புகைப்படங்களிலும் ஓவியங்களிலும் மட்டுமே பார்த்த கோட்டைகளை (கூடவே அந்தப்புரங்களையும்) கண்முன் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறார்.

ஜாதிச் சண்டை மைதானம் புதிய டெக்னிக். போகிற போக்கில் பெப்சி - கொக்கோ கோலாவையும் ஒரு வாரு வாரியிருக்கிறீர்கள். படம் முடிந்து சிரித்து முடித்து எழும் சமயத்தில் பத்துக் கட்டளைகள் என்கிற பெயரில் நீர் ஒரு ப்ளேடு போட்டது ஏனோ? படத்தில் இன்னமும் கொஞ்சம் நகைச்சுவையைக் கூட்டியிருக்கலாம் என்பது சர்வ ரசிகர்களின் கருத்து.

ரௌடியிஸம், கள்ளக் காதல் படங்களுக்கு மத்தியில் குடும்பம் குட்டியுடன் கண்டுகளிக்க ஒரு தமிழ்ப் படம் என்பதே ஒரு சரித்திர சாதனைதான்!




சவாலே சமாளி!
சட்டத்துறை

"முதலிடம் கொடுக்கும் முதல்வர்!"

• ஜ. பெரியசாமி

"தமிழ், தமிழ் என்று வாய் கிழிய கூச்சல் போடுகிறார்கள் தி.மு.கவினர். ஆனால் சட்டத்துறையில் மத்திய, மாநில சட்டங்களைத் தமிழில் மொழிபெயர்த்தது மட்டுமல்லாமல், சட்டப் புத்தகங்களையும் தமிழில் மொழிபெயர்த்தது அம்மா ஆட்சியில்தான்" என்று எடுத்தவுடன் டாப் கியரில் பேச ஆரம்பித்தார், கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் சட்டத்துறை அமைச்சராக இருந்த ஜெயக்குமார்.

"சட்டக் கல்வி படிக்க விரும்பிய மாணவ, மாணவிகள் இடம் கிடைக்காமல் வெளி மாநிலங்களுக்குப் படை எடுத்தது அந்தக் காலம். அ.தி.மு.க ஆட்சியில், நான்கு சட்டக் கல்லூரிகளில் உள்ள இடங்களை நூறுசதம் அதிகப்படுத்தினோம். தவிர, செங்கல்பட்டில் புதிய சட்டக் கல்லூரியும் அமைக்கப்பட்டது. இதற்கெல்லாம் உச்சகட்ட சாதனையாக மதுரையில் உயர்நீதிமன்றக் கிளை செயல்படத் துவங்கியது. நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்ட மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கு மட்டும் 100 கோடி செலவழிக்கப்பட்டது. லோக் அதாலத் என்ற மக்கள் நீதிமன்றங்கள் மூலம் இரண்டரை லட்சத்துக்கும் மேற்பட்ட வழக்குகள் முடித்து வைக்கப்பட்டன. வழக்கறிஞர்கள் நல நிதியாக ஒரு கோடி ஒதுக்கப்பட்டது. சென்னை, மதுரை உயர்நீதிமன்றங்கள் ஓரளவு கணினிமயம் ஆக்கப்பட்டன. ஆனால் முழுவதும் செய்ய ஏழரைக் கோடி தேவை. மத்திய அரசிடம் உதவி கேட்டோம். அதேபோல தமிழகத்தில் பல நீதிமன்றக் கட்டடங்கள் கட்ட 206 கோடி ரூபாய் செலவில் 61 திட்டங்கள் போட்டோம். இதற்கும் மத்திய அரசிடம் நிதி கேட்டோம். பல கடிதங்கள் எழுதியும் இந்தத் திட்டங்களுக்கு நிதி



கொடுக்கப்படவில்லை. மத்திய அரசை தன் பைக்குள் வைத்திருக்கும் முதல்வரால் தமிழக அரசு கேட்ட நிதியை மத்திய அரசிடம் பெற்று, இந்தத் திட்டங்களை நிறைவேற்ற முடியுமா?" என்று கேட்டார் ஜெயக்குமார்.

"சட்டத்துறை என்று மட்டுமல்ல; எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும், 'அதைச் செய்தோம் இதைச் செய்தோம்' என்று பெருமையடித்துக் கொள்கிறார்கள் முந்தைய ஆட்சியாளர்கள். ஆனால் உண்மையில் எந்தத் துறையிலும் வேலைகள் சரிவர நடக்கவில்லை என்பதே உண்மை" என்று ஜெயக்குமாருக்கு கவுன்ட்டர் கொடுக்கிறார் தி.மு.க ஆட்சியில் சட்டத் துறை அமைச்சராக இருக்கும்

ஐ.பெரியசாமி.

"மத்திய அரசுடன் மோதும் போக்கைக் கடைப்பிடித்ததால் அங்கிருந்து கிடைக்கும் உதவியும், நிதியும் தமிழகத்துக்கு வருவதில் தாமதமும், கிடைக்காத நிலையும்தான் ஏற்பட்டன. இதனால் தமிழகத்துக்கு நஷ்டம். இப்போது அவர் சொல்வதுபோல நீதிமன்றக் கட்டடங்களுக்காக 206 கோடியும் உயர்நீதிமன்ற கணினிமயத்துக்கு ஏழரைக் கோடியும் மத்திய அரசிடம் கேட்டதும், இது வரை என் கவனத்துக்கு அதிகாரிகளால் கொண்டு வரப்படவில்லை. மத்திய அரசில் எந்தக் கோரிக்கை நிலுவையில் இருந்தாலும், அதைப் பெற்றுத் தருவதற்கு முதல்வர் முதலிடம் கொடுப்பார். எனவே முந்தைய ஆட்சியாளர்கள் கவலைப்படத் தேவையில்லை.

நீதித்துறை குறித்து மாவட்டத்தில் உள்ள நீதிபதிகளிடம் யோசனைகள் கேட்டிருக்கிறோம். புதிய நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்படும். அதேபோல நீதித்துறைக்கான கட்டடங்களும் கட்டித் தரப்படும். முந்தைய ஆட்சியாளர்கள், சட்டத்தை வளைத்து, தாங்கள் தப்பித்துக்கொள்ளும் வழிகளில் கவனம் செலுத்தினார்களே தவிர, உண்மையாக சட்டத் துறையும் நீதித் துறையும் மேம்பாடு அடைய எந்த முயற்சியும் எடுக்கவில்லை" என்று சர்ச்சையுடன் பேசி முடித்தார் பெரியசாமி.

- கௌசி

படங்கள்: **ராஜன்**

• ஜெயக்குமார்



கல்கி

ஒவ்வொரு இதழும் உங்கள் பொக்கிஷம்

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் : லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

உதவி ஆசிரியர் :
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்
ச. கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-

வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.



தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு பத்திரிகைகளுக்கு தனிப் பேட்டி எதுவும் கொடுக்காமல் தவிர்த்து வந்த வைகோவைச் சந்தித்தோம். கேரளாவில் ஒரு வாரம் தங்கி ஆயுர்வேத சிகிச்சை எடுத்து வந்திருந்தவரிடம் உற்சாகம் கொப்பளிக்கிறது.

தி.மு.க. கூட்டணியில் இருந்திருந்தால் ம.தி.மு.க. இன்னமும் கூடுதலாக இடங்கள் பெற்றிருக்கும் என்று சொல்லப்படும் கருத்து பற்றி...

''அடிப்படையான ஒரு விஷயம் என்னவென்றால் ம.தி.மு.க. அழிக்கப்பட வேண்டுமென்று தி.மு.க. தலைமை கருதுவதுதான். இப்படிப்பட்ட எண்ண ஓட்டம் இருப்பவர்களுடன் கூட்டு சேர்ந்தால் நிச்சயம் நம்ப வைத்து கழுத்தறுப்பார்கள்; உள்ளடி வேலைகள் செய்து எங்கள் வேட்பாளர்களைத் தோற்கடித்திருப்பார்கள். கொடுக்கும் தொகுதிகளின் எண்ணிக்கை மட்டும் ஒரு பிரச்னை அல்ல. எந்தெந்தத் தொகுதிகள் என்பதிலும் பிரச்னை வரும். இதிலெல்லாம் எங்களுக்கு முன் அனுபவம் இருக்கிறது. ஒரே வரியில் சொல்வதென்றால் எங்கள் சுயமரியாதையையும், தன்மானத்தையும் பாதுகாத்துக் கொள்ளவே அ.தி.மு.க. அணியில் இணைந்தோம்.''

நீங்கள் ஜெயலலிதா மற்றும் திருமாவளவன் ஆகியோர்

“ஆறு ஆட்டம்

ஒரே மேடையில் பல இடங்களில் பிரசாரம் செய்திருந்தால் வெற்றி வாய்ப்பு கூடுதலாகி இருக்குமே.

"எங்கள் பிரசாரம் சரியாக திட்டமிட்டபடிதான் நடந்தது. ஒவ்வொரு பகுதியிலும் நாங்கள் பிரசாரம் செய்தது மக்களைச் சென்றடைந்தது. தி.மு.க. அணி நூலிழையில்தான் வெற்றி பெற்றிருக்கிறது. இது ஒன்றும் பெருமைப்படத்தக்க வெற்றியல்ல. ஆளும் கட்சி சிறுபான்மையாக இருப்பது தமிழ்நாட்டிலேயே இதுதான் முதல் முறை. இது தவிர, பல தொகுதிகளில் நாங்கள் மிகக் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்திருக்கிறோம். முன்னேறிய நாடுகளான அமெரிக்கா, ஜப்பான், சிங்கப்பூர் போன்ற நாடுகளில்கூட வோட்டுப் பதிவில் மின்னணு இயந்திரங்கள் பயன்படுத்தவில்லை. ஆனால் நாம் பயன்படுத்துகிறோம். இந்த மின்னணு வோட்டுப் பதிவு இயந்திரம் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது. கண்ணிமைக்கும் நேரத்தில் பல தவறுகள் நடக்க வாய்ப்பு உண்டு. ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும், 40, 50, கள்ள வோட்டுகள் பதிவாகியிருக்கின்றன. அ.தி.மு.க. அணி தோற்கடிக்கப்பட வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு பணிகள் நடந்தன. இவற்றையெல்லாம்விட முக்கியமாக, தி.மு.க. தரப்பிலிருந்து கங்கை வெள்ளம் போல் பணம் பாய்ந்தது. தி.மு.க. வரலாற்றில் இதுபோன்று எந்தத் தேர்தலிலும் பணத்தை அள்ளி விட்டதில்லை. இப்படிப்பட்ட சூழலில் நாங்கள் ஆறு தொகுதிகளை வென்றது தி.மு.க.வுக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது. ஆறு படை வீடு, அறுசுவை உணவுபோல இந்த வெற்றி அமைந்திருக்கிறது."

இரண்டு மாத கால தி.மு.க. ஆட்சி பற்றி உங்கள் கருத்து...

"ஆறு மாதங்கள் வரை இந்த அரசின் மீது எந்த விமர்சனத்தையும் நான் வைக்க விரும்பவில்லை. ஆனால் இரண்டு விஷயங்களைப் பற்றி மட்டும் சொல்ல விரும்புகிறேன். தி.மு.க. ஆட்சியில் ஐந்து அதிகார மையங்கள் இருக்கின்றன. எந்த உத்தரவு, எங்கிருந்து வருகிறது என்று தெரியாமல் அமைச்சர்களும் அதிகாரிகளும், குழப்பத்தில் இருக்கிறார்கள். மற்றொன்று ஜனநாயகம் பற்றி வாய்கிழிய பேசும் தி.மு.க. என் வீட்டுக்கு முன் வந்து கலாட்டா செய்து, கொலை மிரட்டல் விட்டபோது தி.மு.க.வினர்மீது, நான் ஆதாரபூர்வமாக புகார் கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதுதான். மேலும், காஸ் ஸ்டவ், கலர் தொலைக்காட்சி, இரண்டு ஏக்கர் நிலம் என்னாச்சு? கலர் தொலைக்காட்சி எல்லோருக்கும் என்றார்கள். இப்போது சமத்துவபுரம் மக்களுக்கு



"புலிகளைச் சந்திக்கும் தைரியமும் திராணியும் எனக்கு உண்டு!"

மாதத்தில் காணும்!"

முதலில் என்கிறார்கள். ஆறு மாதங்கள் பொறுத்திருந்து பாருங்கள். அரசு ஆட்டம் காணும். மக்களின் அதிருப்தி உச்சத்தைத் தொடும். இதுபோன்று நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளைக் கொடுத்ததற்காக நொந்துபோகப் போகிறது தி.மு.க. இதுதவிர தனிப் பெரும்பான்மையில்லாத சிறுபான்மை அரசாக இருப்பதால் அரசுக்கு என்றைக்கும் ஆபத்து."

ரத்தன் டாடாவை தயாநிதி மாறன் மிரட்டினார் என்று தேர்தலுக்கு முன்பு பரபரப்பாகக் குற்றம் சாட்டினீர்கள். ஆனால் ரத்தன் டாடா இப்போது மாறனைச் சந்தித்துப் பேசியிருக்கிறாரே!

"ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்களைத் தொழிலதிபர்கள் அனாவசியமாகப் பகைத்துக்கொள்ள மாட்டார்கள். டாடா நிறுவனத்தை மிரட்டி 33 சதம் பங்குகளை வாங்க முயற்சி நடந்தது உண்மை என்பதில் நான் உறுதியாய் இருக்கிறேன். ரத்தன் டாடா மாறனைச் சந்தித்திருக்கலாம். ஆனால் 'எங்களை யாரும் மிரட்டவில்லை' என்று அவர் சொல்லவில்லையே!"

ம.தி.மு.க.வில் பலர் திருப்தியில் இருப்பதாகவும், விரைவில் முக்கியப் பிரமுகர்கள் பலர் விலகிவிடுவார்கள் என்றும் செய்தி அடிபடுகிறதே!

"ம.தி.மு.க.வை யாராலும் பிளக்க முடியாது. உடைக்கவும் முடியாது. ஏனென்றால் இது தியாகத்தால் கட்டப்பட்ட வீடு. இங்கு சுயநலமோ, லாப நோக்கமோ இல்லை."


குறிப்பாக உங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் விரக்தியில் இருப்பதாகச் சொல்கிறார்களே!

"அப்படி எதுவும் இல்லை. பத்திரிகைகள் பரபரப்புக்காகவும், தி.மு.க. தூண்டிவிட்டும் அப்படி எழுதுகின்றன. தமிழகமெங்கும் செயல்வீரர்கள் கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது. எல்லா முன்னணிப் பிரமுகர்களும் கலந்து கொண்டு வருகிறோம்."

விஜயா தாயன்பன் மற்றும் சிலர் தி.மு.க.வுக்குத் தாவி விட்டார்களே!

"சிலருக்குள் சில சபலங்கள். இதனால் எந்தப் பாதிப்பும் கிடையாது. களைகள் நீங்கின. எந்தப் பலனையும் எதிர்பாராமல் உழைத்துக் கொண்டிருக்கும் லட்சக்கணக்கான தொண்டர்களை நினைத்துப் பார்த்து என்னைத் தேற்றிக் கொள்கிறேன்."

"டாடா நிறுவனத்தை மிரட்டியது உண்மை!"



என்.எல்.சி. விவகாரத்தில் கலைஞர் நடந்துகொண்ட விதம் குறித்து என்ன சொல்கிறீர்கள்?

"சுத்த கபட நாடகம். 2002-ல் வாஜ்பாய் அரசு இதேபோல் முடிவெடுத்தபோது கலைஞர் எதுவும் சொல்லவில்லை. அந்த முடிவை ரத்து செய்ய வைத்தது நான்தான்

அதேபோல 2006 ஜனவரியில் என்.எல்.சி. பங்கு விற்பனை பற்றி நிதியமைச்சர் சொன்னபோதும் கலைஞர் வாயைத் திறக்கவில்லை. உண்மைகள் இப்படியிருக்க, அமைச்சரவையிலிருந்து விலகுவதாகப் பூச்சாண்டி காட்டியதெல்லாம் தொழிலாளர்களை ஏமாற்றத்தான்."

சமீபத்தில் கேரளா சென்றிருந்தபோது அங்கு நீங்கள் விடுதலைப் புலிகளைச் சந்தித்ததாக வதந்தி வந்ததே...

"சந்திக்க அவசியம் நேர்ந்தால் வெளிப்படையாகச் சந்திக்கும் தைரியமும், திராணியும் எனக்கு உண்டு. ஒளிவு மறைவாக எதுவும் செய்யமாட்டேன்."

> "ஒளிவு மறைவாக எதையும் செய்ய மாட்டேன்!"

சமீபத்தில் புதுவையில் உள்ளாட்சித் தேர்தல்களில் உங்கள் அணி பலத்த அடி வாங்கிவிட்டதே!

"உள்ளாட்சித் தேர்தல் என்பது உள்ளூர் அரசியல் கட்சியின் பலத்தையும், சில வேளைகளில் உள்ளூர்ச் சூழல்களையும் சார்ந்து அமையும். புதுவை, தமிழக அரசியல் தட்பவெப்பநிலையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. ஆனால் தமிழ்நாட்டில் நாங்கள் நிச்சயம் வெற்றி பெறுவோம்."

மூன்றாவது அணி அமையும் வாய்ப்பு உண்டா?

"நிச்சயம் அமைய வாய்ப்பு உண்டு. 89 மற்றும் 96-ல் அமைந்ததே! ஆனால் அது எப்படி அமையும், எப்போது அமையும் என்பதையெல்லாம் யூகிக்க முடியாது. திடீரென உருவாகும் ஓர் அரசியல் சூழல், பல மாறுதல்களைக் கொண்டு வரும்."

- ப்ரியன்

படங்கள் : ஸ்ரீஹரி

ரொம்ப ரொம்ப சாஃப்ட்,
அப்படியே வாயில் கரைஞ்சிடுது!



- - - - - - - - - - - - - - - - ✂ - - cut here -

Rs. 5/-* off
ஒவ்வொரு 1 kg பேக்கிலும்

அன்னபூர்ணா ஃபார்ம் ஃப்ரெஷ் ஆட்டாவி
செய்த மென்மையான சப்பாத்திகளுக்கு இப்

கத்தரித்த இந்த விளம்பரத்துடன், பிராண்டட் ஆட்டா காலி
வாருங்கள், அன்னபூர்ணா ஆட்டா 1 கிலோ பேக்கிற்கு

புதிய அன்னபூர்ணா ஃபார்ம் ஃப்ரெஷ் ஆட்டா வாங்கி, உங்கள் கு

*Dear Consumer, please bring any empty branded atta pack (1kg or above) along with this ad for availing a discount of Rs.5/- upon purc
Dear Retailer, please give the consumer a discount of Rs.5/- in exchange of this ad and a used empty pack of 1kg & above of any atta bra



Annapurna
FARM FRESH
ஒரு சூடான சலுகை!
வானாலும் கொண்டு
படி பெறுங்கள்.
ளுக்கு மிக மென்மையான சப்பாத்திகளை செய்து கொடுங்கள்.

நடிகர் சங்கத் தேர்தல்: ஒதுக்கப்படுகிறதா தி.மு.க.?

நடிகர்கள் சம்பந்தமான விழா, பஞ்சாயத்து, மீட்டிங் என்று எதுவாக இருந்தாலும் சரி... கண்டிப்பாக ஆஜராகிவிடும் நடிகர் நெப்போலியன், இந்த மாத இறுதியில் நடக்கவிருக்கும் நடிகர் சங்கத் தேர்தலில் போட்டியிடாமல் சைலண்டாக ஒதுங்கியிருக்கிறார். என்னாச்சு நெப்ஸுக்கு...? படப்பிடிப்பு முடிந்து திரும்பியிருந்தவரிடம் கொஞ்சம் போட்டு வாங்கினோம்...

"இவ்ளோ நாள் சினிமா, அரசியல் ரெண்டுலயும் கொஞ்ச கொஞ்சம்தான் நேரம் ஒதுக்க முடிஞ்சது. ஆனா இனிமே அரசியல்லயே முழு மூச்சா இறங்கலாம்னு முடிவெடுத்திருக்கேன். அதனாலதான் தேர்தல்ல போட்டியிடல. ஏற்கெனவே ஆறு வருஷம் பொறுப்புல இருந்துட்டேன். நாங்க எல்லாரும் சேர்ந்து நிறைய பணிகள் செய்ததால சங்கம் கடன்ல இருந்து மீண்டு இப்போ ரொம்ப நல்லா இருக்கு. இனிமே யார் தலைவரா வந்தாலும் நல்லபடியா சங்கத்தை நடத்தலாம். அதனாலதான் இளைஞர்கள், புதியவர்களுக்கு வழிவிட்டு இந்த முடிவை எடுத்திருக்கேன். அதுக்காக சங்கம் தொடர்பான விஷயங்கள்ல இருந்து ஒதுங்கிப் போய்ட்டேன்னு சொல்ல முடியாது. எப்போ வேணும்னாலும் போய்க் கணக்கு கேட்பேன். கருத்தைச் சொல்லுவேன். அதுக்கு எனக்கு ரைட்ஸ் இருக்கு" என்றவரிடம், 'சரத்குமார் அணியில் போட்டியிட உங்களுக்கு விருப்பமில்லை என்றும், விஜயகாந்தும் அவரும் ரகசிய கூட்டணி அமைத்துவிட்டதால் பயந்துவிட்டீர்கள் என்றும் சொல்கிறார்களே...' என்றோம்.





முகத்தைச் சுருக்கியவர், "சரத் அணியில போட்டியிடறதுல எனக்கு ஒண்ணும் பிரச்னை இல்லையே. அவரு வேற கட்சியா இருக்கலாம். நான் வேற கட்சியா இருக்கலாம். ஆனா, இங்க எல்லாரும் நடிகர்கள். அந்த நினைப்போடதான் இருக்கோம்; இருக்கணும். அதேபோல சங்கத்துக்குள்ள ரகசிய கூட்டணிக்கு எல்லாம் வேலையே இல்ல. அரசியல்ல முழுநேரத்தையும் செலவிடணும்ங்கறதுக்காகத்தான் தேர்தல்ல நிக்கலயே தவிர, யாருக்கும் பயந்து நான் ஒதுங்கிடல."

அரசியலில் இருப்பவர்கள் சங்கப் பதவிக்கு வரக்கூடாது என்கிறாரே நாசர்?

"வாஸ்தவம்தான். அவரு சொல்றபடி பார்த்தா, முழுநேர அரசியல்வாதி ஒருத்தர் நடிகர் சங்கத்துக்குள்ள பொறுப்புக்கு வர்றது தப்பு. ஆனா நாங்க யாருமே அரசியல்வாதிங்க கிடையாதே. எல்லாருமே அடிப்படையில நடிகர்கள். எங்களுக்குப் பிடிச்ச கட்சியில உறுப்பினரா இருக்கோம், அவ்ளோதான். எங்களோட எந்த நடவடிக்கையும் அரசியலைக் கொண்டு வரல. ஒரு தடவை மட்டும் விஜயகாந்த் நடிகர் சங்கத்துல வச்சு, பத்திரிகைகாரங்ககிட்ட

அவரோட கட்சி, கொடி பத்தி பேசினாரு. அது தப்புன்னு நானே கண்டனம் தெரிவிச்சிருக்கேன். நிறைய பேர் எதிர்ப்பு தெரிவிச்சாங்க. அதன்பிறகு அந்த மாதிரி சம்பவம் நடக்கல. அதனால எங்களைப் போன்றவங்க சங்கப் பொறுப்புக்கு வர்றது தப்பே இல்லை."

அரசியல் பின்புலம் இல்லாமல் சங்கத்திற்கு எந்த நலப்பணியும் நடக்காதா?

"நிறைய பேர் இப்படி தவறா புரிஞ்சுக்கறாங்க. சங்கத்தோட பணிகளுக்கு அரசாங்கத்தோட பின்புலமும், ஆதரவும்தான் வேணுமே தவிர, அரசியல் கட்சிங்க தேவையில்லை."



படம் : ஸ்ரீஹரி

– கொந்தளிக்கிறார் நெப்போலியன்

சங்கக் கூட்டங்கள் முறையாக நடக்கவில்லை, பணிகள் ஏதும் சிறப்பாக நடைபெறவில்லை என்றெல்லாம்கூட குறை கூறுகிறாரே நாசர்?

"கமிட்டி மீட்டிங்குக்கே ஒழுங்காக வராதவர் நாசர். மூணு தடவைக்கு மேல தொடர்ச்சியா கமிட்டி மீட்டிங்ல கலந்துக்காம இருந்தா செயற்குழு உறுப்பினர் பதவியிலிருந்தே நீக்கலாம். ஆனா, நாசரும் நம்மள்ல ஒருத்தராச்சேன்னு அதை நாங்க யாரும் பெரிசா கண்டுக்கல. சமீபத்துல நடந்த மீட்டிங்குக்கு நாசர் வந்தார். அந்த மீட்டிங் ஆரம்பிச்சது 11 மணிக்கு. ஆனா, நாசர் 11.45க்கு வந்து கடைசி வரிசையில உட்கார்ந்துட்டு, அங்கிருந்து கேள்வி கேட்கறார். நியாயமா அவர் கேள்வியே கேட்கக்கூடாது. அவரும் எங்ககூட மேடையில உட்காரணும். அவரையும் சேர்த்து எங்ககிட்ட உறுப்பினர்கள் கேள்வி கேட்கணும். இந்த நடைமுறையே அவருக்குத் தெரியல. இவ்ளோ நாள் சும்மா இருந்துட்டு, இப்போ திடீர்னு ஏன் குற்றம் சொல்றார்னு தெரியல. யார் மேல கோபம்னு புரியல."

நடிகர் சங்கத்தில் பெரும்பான்மையாக இருந்த தி.மு.க. இப்போது முற்றிலுமாக ஓரங்கட்டப்பட்டுவிட்டது போலத் தெரிகிறதே?

"யார் சொன்னது? அதெல்லாம் இல்லை. நான் பதவியில இல்லையே தவிர சங்கத்துக்குள்ளேதான் இருக்கேன். அதேமாதிரிதான் சந்திரசேகர், தியாகு எல்லாருமே. தேர்தல்ல நிக்கறவங்கள்ல நிறைய பேர் அ.தி.மு.க.காரங்களா இருக்கறதால அப்படித் தெரியலாம். மத்தபடி நாங்க எல்லாரும் அப்படியேதான் இருக்கோம்."

- ஆர்.முத்துக்குமார்

அஸின், நயன் தாரா, பாவனா என்று த்ரிஷாவை நாக்-அவுட் பண்ண எத்தனை அண்டை மாநிலப் பறவைகள் வந்தாலும் இன்னமும் நாட்-அவுட் பேட்ஸ்வுமனாகவே தாக்குப் பிடித்து வருகிறார் த்ரிஷா. விக்ரமுடன் 'பீமா', சிரஞ்சீவியுடன் 'ஸ்டாலின்', ஜெயம் ரவியுடன் 'சம்திங் சம்திங்' என்று கைவசம் மெகா படங்கள். 'தசாவதார'மும் 'போக்கிரி'யும்கூட இந்த லிஸ்டில் சேர்ந்திருக்க வேண்டுமே என்றால், வேகமாகத் தலையாட்டுகிறார்.

"சிவாஜிக்கு வந்த புரளிதான் போக்கிரிக்கும். ரெண்டு படங்களிலும் யாரும் என்னை நடிக்கக் கூப்பிடலை. அதுவுமில்லாம ஆதியில விஜய்யோடு நடிச்சுட்டு அடுத்த படத்துக்கும் நானே நடிக்கணும்னு ஆசைப்பட்டா நல்லாவாயிருக்கும்? ஆனா தசாவதாரம் படத்துக்காகக் கேட்டது உண்மைதான். அது கமலோட மைல்ஸ்டோன் படம். எனக்கும் செம கேரக்டர். எல்லாம் எனக்குச் சாதகமா அமைஞ்சும் கால்ஷீட் கையைக் கடிச்சுடுச்சு. இதுமாதிரி தமிழ் சூப்பர் ஸ்டார்களோட நடிக்க முடியாட்டியும் ஆறுதல் பரிசா தெலுங்கு சூப்பர் ஸ்டார் சிரஞ்சீவியோட நடிக்க வாய்ப்பு கிடைச்சிருக்கு. அவருக்கு தமிழ்நாட்டு மேலே அபாரப் பற்று. 'நானெல்லாம் கே.பி. கையில குட்டு வாங்கினவன் தெரியுமா'ன்னு அப்பப்போ சிலிர்த்துப்பார்."

அஸின், நயன்தாரா எல்லாம் உங்களுக்கு நாக்-வுட் கொடுக்கத் தயாராயிட்டாங்க போல?

"அதெப்படி? ஒரு விஷயத்த நான் தெளிவு படுத்தறேன். என்னால தமிழ், தெலுங்குன்னு சேர்த்து வருஷத்துக்கு அதிகபட்சமா ஆறு படங்கள்தான் செய்ய முடியும். ஒரு இண்டஸ்ட்ரின்னா நாலு முன்னணி நடிகைகள் இருக்கத்தான் செய்வாங்க. நான் நடிக்கிற படங்களோட லிஸ்ட்டைப் பாருங்க. எனக்கான முக்கியத்துவம் ஏதாவது குறைஞ்சிருக்கா?"

இளம் நடிகர்கள் எல்லாம் மாமன் மச்சான் ரேஞ்சுக்கு ஒத்துமையா இருந்து ஸ்டார் கிரிக்கெட் எல்லாம் ஆடறாங்க. நடிகைகள்ல அப்படியெதும் காணோமே?

"அதான் அப்பப்போ ஸ்டார் நைட்ல ஒண்ணு சேர்றோமே! எனக்கு குஷ்பு, ஜோதிகா, ரீமாசென், ஸ்ரேயா எல்லாம் உயிர் ஸ்நேகிதிகள். எஸ்.எம்.எஸ்.ஸுல அடிக்கடி சாட் பண்ணிட்டே இருப்போம். நயன் தாரா, அஸின்னு சில நடிகைகள் மட்டும்தான் அவ்வளவா நெருக்கமாகலை."

நீங்க இன்னும் நாட்-அவுட்டா இருக்கீங்களே...

"குஷ்பு அடைஞ்ச உயரத்தை இன்னமும் யாராலும் தொட முடியலை. திறமை இருந்தா மட்டும் போதாதுங்க. படம் பிச்சுகிட்டுப் போகணும். நீங்க வர்ற பாட்டுல மக்கள் மயங்கணும். நடிக்க வரும்போதே தரம் பிரிச்சுப் பார்க்காம கிடைச்ச நல்ல வாய்ப்புகளை நழுவ விடக்கூடாது. நம்ம பேர் நிலைச்ச பிறகு நாம நினைக்கிற படங்கள்ல தாராளமா நடிக்கலாம். த்ரிஷா என்ன சொல்றது, அனுபவ ஆசிரியர் எல்லா பாடங்களையும் சமர்த்தா கத்துக் கொடுத்துடுவாரு."

எப்பவும் ஒரே மாதிரி இளமையான வேடங்கள். போரடிக்கலையா?

"வயசிருக்கே. அவார்டு படங்களை நிதானமா பண்ணலாம். சமீபத்துல ஃபனாங்கிற இந்திப் படம் பார்த்தேன். யப்பா... அதுல கஜோல் பண்ணின கேரக்டர்ல எவ்வளவு ஜீவனிருக்கு தெரியுமா? அது மாதிரி நானும் கட்டாயம் பண்ணுவேன்."

தமிழ் நடிகைகள் சமூகப் பிரச்னைகளைப் பத்திப் பேச பயப்படறாங்களே?

"ஹலோ... குஷ்பு இருக்கிறதை மறந்துட்டீங்களா? அவங்க எந்தப் பிரச்னை பத்தியாவது பேச பயப்பட்டிருக்காங்களா? லக்ஷ்மி - ஜெயா டி.வி.யில பிச்சு உதர்றாங்களே! தமிழ் நடிகைகளை லேசா நினைச்சுடாதீங்க. என்ன, பிஸியா நடிக்கும்போது சினிமாவைத் தவிர வேறெதிலும் கவனம் செலுத்தமாட்டோம். என் ரசிகர் மன்றம் நல்ல காரியங்கள் செய்து வர்றதும் சமூகத்துக்கான பங்

களிப்புதானே!"

நடிகைகளுக்கு ரசிகர் மன்றங்கள் தேவையா?

"நானும் இதே கேள்வியைத்தான் என் ரசிகர் மன்றத்தை ஆரம்பிச்ச ஜெஸ்சிகிட்டே கேட்டேன். 'ஏம்மா நாங்க எல்லாம் அஞ்சு வருஷம் நீடிச்சாலே பெரிய விஷயம். எதுக்கு இந்த ஆர்ப்பாட்டம் எல்லாம்'னு. ஆனா அவங்களுக்கு என் பேர்ல நல்ல காரியங்கள் பண்ண விருப்பம். என் படம் ரிலீஸ் ஆகிற அன்னைக்கு ரத்ததான முகாம் நடத்தறாங்க. அடுத்ததா அநாதை குழந்தைகளை வளர்க்க விரும்பறாங்க. 'தயவுசெய்து பாலாபிஷேகம், கட்-அவுட் போன்ற அமளிதுமளிகளை மட்டும் பண்ணிடாதீங்க'ன்னு வேண்டியிருக்கேன்."

கல்யாணம்... காட்சி...?

"இப்போதான் நல்ல படங்கள் கிடைச்கட்டு இருக்கு. அதை நான் அவ்வளவு லேசுல விட மாட்டேன். ஆனா கண்டிப்பா லவ் மேரேஜ்தான். அம்மாவே 'நல்ல பையனா பார்த்துக்கோ'ன்னு சொல்லிட்டாங்க."

-ச.ந.கண்ணன்



"கண்டிப்பா லவ் மேரேஜ்தான்!"



கல்கி



2006 ஜூலை 23
விய ஆடி 7
மலர் : 64
இதழ் : 51

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.

பசியில் துடிப்பவனுக்குப் பஞ்சு மிட்டாய்!


"இது லஷ்கரின் வேலைதான்" என்று அரசு தரப்பு அடித்துச் சொல்ல, அவ்வமைப்பைச் சேர்ந்த டாக்டர் அப்துல்லா கஜ்னாவி அதை மறுத்து, மும்பை ரயில் குண்டு வெடிப்புகளைக் கடுமையாக கண்டனம் செய்திருக்கிறார். இதே நாளில் காஷ்மீரில் சுற்றுலா பயணிகளைக் குறிவைத்து கைக்குண்டுகள் வீசப்பட்டதில் எட்டுப் பேர் மரணமடைய, சுமார் நாற்பது பேர் படுகாயமுற்றனர். இந்தப் படுகொலைக்கும் "நாங்கள் காரணம் அல்ல" என்று கஜ்னாவி அறிவித்துவிட்டார்.


உண்மையை நிரூபிப்பது எளிய காரியமல்ல என்றாலும், குற்றவாளிகள் நாளாவட்டத்தில் பிடிபட்டு, தண்டனை அடையவே செய்வார்கள்.

இந்தியாவில் ஓடும் அத்தனை வாகனங்களுக்கும் எல்லா பொது இடங்களுக்கும் எல்லா நேரமும் சிறப்புப் பாதுகாப்பு அளிப்பது என்பது நடக்காத காரியம். இதை நன்றாகத் தெரிந்து வைத்துக்கொண்டுதான் இப்பேர்ப்பட்ட அசுர கொடுமைகளைச் செய்கின்றனர் பயங்கரவாதிகள். அசுர கொடுமையிலும் கோழைத்தனம் மிகுந்த இக்கொடுமையை எவ்வளவு கண்டனம் செய்தாலும் தகும்.

குடியரசுத் தலைவர் தகுந்த முறையில் கடும் கண்டனம் தெரிவித்திருப்பது சற்றே ஆறுதல் அளிக்கிறது. பிரதமரும் இதர தலைவர்களும் கண்டித்துள்ளனர்.

இத்தகைய கயமையில் இஸ்லாமிய பயங்கரவாத அமைப்புகள் ஈடுபடுவதனால் ஹிந்து அமைப்புகளும் பொறுமை இழந்து படிப்படியாக வன்முறைக்குத் தூண்டப்படுகின்றன என்பதே கொடூரமான உண்மை.





இந்தச் சூழ்நிலை நம் நாட்டுக்குப் பெரும் கேடு விளைவிக்கும் என்பதுடன், இரு மதங்களின் கோட்பாடுகளையும் சிதைத்து, அவற்றின் உன்னதமான நோக்கங்களை மறைத்தும் விடும்.

மிக துரதிர்ஷ்டவசமாக, மதத் தலைவர்களைக் கொண்டு இதற்கு ஒரு தீர்வு காண முடியாத அளவுக்குப் பிரச்னை முற்றியிருக்கிறது. அரசியல் தீர்வு ஒன்றுதான் வழி. அரசு இயந்திரத்தை முடுக்கிவிட்டு, உளவுத்துறையை மேலும் பலப்படுத்தி, சிறப்புப் பயிற்சி அளித்து, உளவாடலைப் பரவலாக்குவதன் மூலம், இத்தகைய பயங்கரங்கள் நிகழ்வதை ஓரளவு குறைக்க முடியும். இன்று பயங்கரவாதம் உலகளாவிய அளவில் பரவியிருப்பதால், சர்வதேச போலீசுடன் நெருங்கிய தொடர்புகொண்டு செயலாற்ற வேண்டும்.

மறுபுறம், பேச்சுவார்த்தைகள் மூலம் ஒப்பந்தங்கள் செய்துகொண்டு, அமைதிக்கு முயற்சி செய்வதே நீண்டகால அடிப்படையிலான தீர்வாக அமையும். இந்தப் பேச்சு வார்த்தைகளிலும், கௌரவம் பாராமல் ஓரளவு விட்டுக்கொடுத்தால் மட்டுமே ஒரு சுமூகமான தீர்வைப் பெற முடியும்.

பிரதமர் காஷ்மீரில் பேச்சுவார்த்தைக்கு முயன்றபோது, ஹுரியத் அமைப்பு அதில் பங்கேற்கவே மறுத்துவிட்டது. இப்படிப்பட்ட பேச்சுவார்த்தை நிகழ்த்தி பயனே இல்லை.

இஸ்லாமிய பயங்கரவாதம் - காஷ்மீர் பிரச்னை - பாகிஸ்தானின் தூண்டுதல் என்கிற முத்தரப்பு பின்னல், இன்று பலம் பெற்றுள்ளது. இதனைப் பகுதி பகுதியாக அணுகாமல், முழுமையாக அணுகி தீர்வுகாண வேண்டும்.

முதலில் பஸ் ஓட்டுவோம்; அப்புறம் ரயில் விடுவோம்; பிறகு எல்லைப்புறத்தில் ஆஸ்பத்திரி அமைப்போம்; நல்லெண்ண தூதர்களை வரவேற்போம் என்பதெல்லாம் பசியில் துடிப்பவனுக்குப் பஞ்சு மிட்டாய் வழங்குவது போலாகும்.

ஹிந்து - முஸ்லிம் நல்லுணர்வு பெருகவும் அரசு வழிவகை செய்ய வேண்டும். இதற்கென ஒரு தனி அமைச்சகத்தையே கூட உருவாக்கலாம்.

ராமஜன்ம பூமியில் ராமர் ஆலயத்துக்கு இரும்புக் கவசம் பொருத்த அரசு உத்தர விட்டுள்ளது. இஸ்லாம் அமைப்பினரோ இதை எதிர்க்கின்றனர். இப்படிப்பட்ட வெளிப் படையான அச்சமும் அச்சுறுத்தலும் நிலவினால் அமைதி எங்கேயிருந்து பிறக்கும்? பரஸ்பர நம்பிக்கையும் விட்டுக் கொடுத்தலும் வளரும் வகையில் அரசு அமைதி முயற்சிகள் மேற்கொள்ளட்டும். ●

எட்டு மாதம் சுமந்து பெற்ற அம்மா, இரண்டு வருடம் பாலூட்டி வளர்த்த பெரியம்மா, முப்பது வருட அனுபவம் கொண்ட டாக்டர், இவர்கள் யார் சொல்லியும் கேட்காத மாரியப்பன் மூன்று நாளைக்கு முன்பு ஊருக்கு வந்திருந்த ரம்யா சொன்னதும் செவிமடுத்தான். பத்து வருடமாகக் குடித்துக் கொண்டிருந்த கணேஷ் பீடியை விட்டுவிடுவதாக ரம்யா கையில் அடித்து சத்தியம் செய்தான்.

மாரியப்பனின் குடிசையும் ரம்யாவின் பாட்டி வீடும் எதிரெதிரில் இருந்தன. டவுனில் இருந்து வந்த முதல்நாள், ரம்யா பாட்டியின் பழங்கட்டிலில் படுத்தவாறு புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள். எதிரிலிருந்த குடிசைக்குள்ளிருந்து 'குபுகுபு'வென புகை பரவிக் கிளம்புவதைப் பார்த்துத் திகிலானாள். வெயில் தாங்காமல் குடிசையே தீப்பற்றி எரியப் போகிறதோவென அஞ்சியவள், ஃபயர் சர்வீசுக்குப் போன் செய்ய எழுந்தாள். அவள் வளர்ந்த டவுனில் அப்படித்தான் தொட்டதிற்கெல்லாம் ஃபயர் சர்வீஸ், அவசர போலீஸ் என்று கூப்பிட்டு விடுவார்கள்.

வீட்டிக்குள்ளிருந்த பாட்டியிடம், "பாட்டி இங்க டெலிபோன் பூத் எங்க இருக்கு?" என்று கேட்டாள். பாட்டி, "எதுக்குடியம்மா... உங்கம்மாவுக்குப் போன் போட்டு 'பத்திரமா வந்து சேர்ந்துட்டேன்'னு சொல்லப் போறியா?" என்று கேட்டாள். "ஐயோ அதில்ல பாட்டி... வெளில வந்து பாரு, எதிர்ல ஒரு குடிசை தீப்பிடிக்கப் போகுது!" என்று ரம்யா அவசரமாகச் சொல்லவும் பாட்டி ஓடிவந்து பார்த்தாள்.

பிறகு அலட்சியமாக, "இதுதானா... இது மாரியப்பனோட வேலை. அவனும் இன்னும் நாலஞ்சு பேரும் பீடி குடிச்சுட்டு இருப்பானுக! இப்பவாவது பரவாயில்லை, சாயங்காலம் ஊர்ச்சாவடில போய் பாரு... ஊரே மூச்சடைச்சு சாகற அளவுக்கு ஊதித் தள்ளுவானுங்க" என்றாள்.

மறுநாள் மாரி டவுசருக்குள் இருந்து பீடியை எடுத்து பற்ற வைக்கப் போன சமயத்தில் ரம்யா அவன் முன்பு போய் நின்றிருந்தாள். "மாரி ஸார்... நான் உங்க வீட்டுக்கு எதிர்ல இருக்கிற குப்பாயம்மா பாட்டி வீட்டுக்கு வந்திருக்கேன். பாட்டி உங்களைப் பத்தி நிறையச் சொன்னாங்க... பீடியைக் குடிச்சு ஏன் உங்க உடம்பைக் கெடுத்துக்கறீங்க?"

இந்தக் கேள்வியை நீங்களோ, நானோ மாரியிடம் கேட்டிருந்தால், "எங்காசுல நான் குடிக்கிறேன். நீங்க யாரு கேள்வி கேட்க?" என்று விட்டு உடனே பீடியைப் பற்ற வைத்து புகையைப் பரவவிட்டு விரட்டியிருப்பான். ரம்யா பெயருக்கு ஏற்றவாறு ரம்யமான பெண் என்பதாலும், மாரி ஆண் என்பதாலும் அப்படி நடக்கவில்லை.



"குப்பாயம்மா வீட்டுக்கு வந்திருக்கீங்களா... இதுக்கு முன்னாடி உங்களைப் பார்த்ததே இல்லையே?"

"அதைப்பற்றி அப்புறமா சொல்றேன், முதல்ல உங்களால பீடிய விடமுடியுமா முடியாதா சொல்லுங்க?"

"விட்டுர்லாம்... ஆனா ரொம்ப

காதல் மகுடி!

கோடாங்கிப்பட்டி புகழேந்தி



வருஷப் பழக்கம். அதான் கொஞ்சம் யோசனையா இருக்குது!"

"எத்தனை வருஷப் பழக்கமாயிருந்தாலும் மனசு வெச்சா எல்லாம் முடியும்... முதல்ல இதைவிடணும்னு மனதார விரும்புங்க. மனச வேற எங்காவது திசை திருப்பி விடுங்க... பாட்டு கேளுங்க, புக்ஸ் படிங்க, சோஷியல் சர்வீஸ் பண்ணுங்க, காலையில நேரமே எழுந்து வாக்கிங் போங்க... இதையெல்லாம் செஞ்சா மனசு உற்சாகமாகும்... பீடி குடிக்கிற ஞாபகமே வராது. அப்புறம் முக்கியமான விஷயம், வீட்ல உள்ளவங்க கிட்ட அன்பா நடந்துக்கங்க. அம்மாவைக் கண்டபடி திட்டாதீங்க, உங்களை வளர்க்க எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பாங்க? நீங்க பீடி குடிக்கிறத விட்டா அவங்க ரொம்ப சந்தோஷப்படுவாங்க! இனிமேல் பீடி குடிக்க மாட்டேன்னு ப்ராமிஸ் பண்ணுங்க!"

ரம்யா ஊதிய மகுடியில் மாரிக்குள் இருந்த பாம்பு சுருண்டு படுத்துவிட்டது. ரம்யாவின் கைமேல் தன் கையை வைப்பதற்காகவே பீடியை விடலாம் என்று நினைத்தவன், சொரசொரப்பான கையை வழுவழுப்பான ரம்யாவின் கையில் பதித்துச் சத்தியம் செய்தான்.

ரம்யா சத்தியம் வாங்கிவிட்டு, "நான் இன்னும் ரெண்டு மாசத்துக்கு இங்கதான் இருக்கப் போறேன். நாளைல இருந்து தெருவுல திரியற பசங்களுக்கெல்லாம் ட்யூஷன் எடுக்கப் போறேன். நீங்க எனக்கு உதவியா கூட இருக்கணும்... இருப்பீங்களா? என்று கேட்டாள். மாரி சரியென்று தலையாட்டினான்.

அதன்பிறகு மாரியப்பன் ரொம்பவே மாறிவிட்டான். ரம்யா கைகாட்டினால் அரபிக் கடல் வரைக்கும் நடக்கத் தயாராக இருந்தான். வெள்ளோட்டமாக ஊருக்கு மேற்கில் இருந்த குளத்து வரைக்கும் போய்விட்டுத் திரும்பியவன்,

6.45 சக்தி பஸ்ஸில் ஏறி ஒட்டன்சத்திரம் போய் இறங்கினான். டேப் ரிகார்டரும் ஸ்பீக்கர்களும் வாங்கியபின் யோசித்தபடி டப்பாங் குத்துப் பாடல் கேசட்டையும் மறக்காமல் வாங்கி முடித்தபோது மணி இரவு 11.00. 10.45 ஆர்.எம்.டி.சி போய் விட்டிருந்தது. ஆட்டோ பிடித்து ஊரில் வந்து இறங்கினான். ஸ்பீக்கர்களை வீட்டுக் கூரையின் மேல் கட்டிவிட்டு, கிணற்றுத் தவளை, பனைமரத்து வண்டுக்கெல்லாம் கேட்கும்படியான சத்தத்தில் பாட்டைப் போட்

டான்.

'மாமரத்துத் தோப்புக்குள்ள
மறைமுகமா சந்திப்போம்.
தென்னந் தோப்புக்குள்ள
தெனந்தோறும் சந்திப்போம்...'

என்று பாடல் பாடிக் கொண்டிருந்த போது மாரி, ரம்யா பாட்டைக் கேட்டு விட்டுத் தன்னோடு நெருங்கி வருவாள் என்று கனவில் லயித்துக் கிடந்தான். ரம்யாவின் பாட்டி வந்து 'ரேடியோவ நிறுத்துடா மாரி... ரம்யா சொல்லி விட்டா!' என்றதும் மாரி பதறிக்கொண்டு ரம்யாவிடம் ஓடினான். "நீங்கதான பாட்டுக் கேட்டா பீடிய விடமுடியும்னு சொன்னீங்க... காலைல வாக்கிங் போய் விட்டுத்தான் வந்தேன். பீடிய நேத்தே விட்டுட்டேன்... பாட்டு நல்லா இருக்குங்களா?" என்றான். ரம்யா, "மண்ணாங்கட்டி... பாட்டா இது? கம்பங்காட்டுல ஒதுங்கலாம், சோளக்காட்டுல சேரலாம்னு அசிங்கம் பிடிச்ச பாட்டு! அதுவும் ஊருக்கே கேட்கற மாதிரி சவுண்டுல... பாட்டுன்னா அமைதியா தென்றல் வீசற மாதிரி இதமா இருக்கணும். ஜேசுதாஸ் பாட்டு இருந்தா போடுங்க" என்று அனுப்பி விட்டாள். மாரி மறுபடியும் பஸ்ஸில் போய் ஜேசுதாஸ் கேசட்டுகள் வாங்கி வந்து போட்டான்.

ரம்யாவை அழைத்துக்கொண்டு மேட்டாங்காட்டுக்குப் போய், பனைமரத்தில் ஏறி நுங்கு வெட்டிக் கொடுத்தான். வரும் வழியில் கிணற்றைப் பார்த்தவள், "நீச்சல் பழக்கித்தா மாரி" என்று சொல்ல, எங்கோ ஓடியவன் கயிற்றுடன் வந்தான். கயிற்றை இடுப்பில் கட்டிவிட்டுப் பிடித்துக் கொண்டு நீச்சல் பழக்கினான். அதே கயிற்றை வேப்ப மரத்தில் கட்டி தூரியாட்டி விட்டான். ஊர்க் காடுகளில் வெள்ளரிப் பிஞ்சுகள் திருடிக்கொண்டு வந்து தின்னக் கொடுத்தான். அவன் தந்தை ரம்யா ஆசையாய்த் தின்றுகொண்டிருந்த ஒரு மத்தியான வெயில் நேரத்தில், அவன் குறைமாதத்தில் பிறந்ததையும் பசி தாங்காதவனை அம்மாவும் பெரியம்மாவும் சேர்ந்து மாற்றி மாற்றி பாலூட்டி வளர்த்ததையும் சொன்னான்.

சாயங்காலங்களில் ரம்யாவோடு சேர்ந்து தெருப்பிள்ளைகளுக்கு டுடோரியல் காலேஜ் அனுபவத்தில் ட்யூஷன் எடுத்தான்.

கோடை விடுமுறை முடிந்து ரம்யா கிளம்பிய நாளில், கோடை வெயில் மட்டும் முடியாமலே இருந்தது. அவளை பஸ் ஏற்றிவிடப் போன மாரியப்பனுக்கு உடல் முழுவதும் வியர்த்திருந்தது. அவ்வளவு புழுக்கத்திலும் 'இந்தக் கோடை வருடம் முழுவதும் நீடிக்கக் கூடாதா' என ஏங்கினான். வியர்வையில் நனைந்து மை விரவிக் கொண்டிருந்த காகிதத்தை ரம்யாவிடம் நீட்டினான். ரம்யா அதை வாங்காமலே, "அதுல என்ன இருக்குன்னு தெரியும் மாரி... நான் எல்லோரோடவும் பழகற மாதிரிதான் உங்ககிட்டயும் பழகினேன். நீங்க தப்பா புரிஞ்சுக்கிட்டா அதுக்கு நான் பொறுப்பில்லை. பஸ் வருது... நான் போறேன். அடுத்த வருஷம் வந்தா பார்க்கலாம்!" என்று சொல்லி விட்டு பஸ் ஏறிப் போய்விட்டாள்.

மண் புழுதியைக் கிளப்பிவிட்டுப் போய்க்கொண்டிருந்த பஸ்ஸின் முதுகை, அது மறையும்வரை பார்த்துக்கொண்டிருந்தவன், பஸ் ஸ்டாப்பில் இருந்த பெட்டிக்கடைக்குப் போனான். "ஒரு கட்டு கணேஷ் பீடி கொடுங்க" என்று சத்தமாகக் கேட்டான். ○

"கையைக் கொடுங்க டாக்டர்!"
"எதுக்கு சார்?"
"நீங்கதானே ஊசி போட்டதும் கையைத் தேய்ச்சுவிடச் சொன்னீங்க!"
- ஆர். தங்கராஜு




GOKULAM

CALIBRE COMICS

For Wholesome Development...

JULY 15 - AUGUST 15 2006


Dacoit Billa





LEO - THE SKINNY LION

JOEY`S POUCH!



and much more!

Rs. 12/-
64 pages



‘இயக்குநர் பேரரசின் அடுத்த படம் விஜய்க்குத்தான்’ என்று எல்லோரும் எதிர்பார்த்திருக்க, அவரோ தடாலடியாக சமீபத்திய அரசியல் சுனாமியான விஜயகாந்துடன் கைகோத்து ‘தர்மபுரி’ என்கிற டைட்டிலில் படம் ஆரம்பித்து விட்டார். இப்போது நாலாபக்கமும் பரபரப்பு!

பேரரசுவை வளைத்துப் பிடித்து ‘தர்மபுரி’ தொடர்பான கேள்விகளை வீசினோம். விஜயகாந்தின் அரசியல் செல்வாக்கை உயர்த்தத்தானே தர்மபுரி என்று டைட்டில் வைத்தீர்கள் என்றால் பலமாக மறுக்கிறார்.

‘‘நானும் செய்திகள் படித்தேன். வன்னியர் பெல்ட்டை வளைத்துப் பிடிக்கவே இந்த டைட்டில் என்றெல்லாம் செய்திகள் ஏகத்துக்கும் இட்டுக் கட்டப்படுகின்றன. நாங்கள் என்ன தேர்தல் பிரசாரப் படமா எடுக்கிறோம்? இது எல்லாருக்குமான பொழுதுபோக்குப் படம். அரசியல் வேறு; சினிமா வேறு என்பதைக் கேப்டனும் நன்றாகவே அறிந்து வைத்திருக்கிறார். படத்தில் விஜயகாந்த் எந்த அரசியல்வாதியையும் திட்டமாட்டார். அரசியல் வசனங்களும் இருக்காது’’ என்று உத்தரவாதம் கொடுத்தவரிடம் ‘விஜயகாந்த் நடிப்பதற்கு முன்பே இந்தக் கதைக்கு தர்மபுரி என்றுதான் டைட்டில் வைத்தீர்களா?’ என்றால் யோசித்துப் பதிலளிக்கிறார்.

“சி.எம். ஆன பிறகே கேப்டன் நடிப்புக்கு முற்றுப்புள்ளி வைப்பார்!”


‘‘ஒருநாள் ஏ.எம். ரத்னம் சார் என்னை

விஜயகாந்தை முதல்வராக்கும் தர்மபுரி!

அழைத்து 'விஜயகாந்த் கால்ஷீட் இருக்கிறது. படம் பண்ணலாமா?' என்றார். கரும்பு தின்னக் கூலியா? உடனே ஒப்புக்கொண்டேன். என்னிடம் ஏற்கெனவே கதை ரெடியாக இருந்தது. விஜயகாந்த்துக்காக கொஞ்சம் கதையில் மாற்றம் செய்து தர்மபுரி என்று தலைப்பிட்டேன். இதோ தீபாவளிக்காக சுடச்சுட ரெடியாகி வருகிறது'' என்கிறார் பேரரசு.

சரி கதை? அதையும் கோடிட்டுக் காண்பித்தார். ''எனக்கு லேடிஸ் ஆடியன்ஸ் அதிகம். எனவே, படத்தில் ஆபாசம் இல்லாமல் பார்த்துக் கொள்வேன். என் படங்களிலும் குத்துப்பாட்டுகள் இருக்கும். ஆனாலும் அதில் ஆபாசம் இருக்காது. 'திருப்பாச்சி' சாங்கில் சாயாசிங் அம்மன் அருள் வந்து ஆடுவாங்க. 'சிவகாசி'யில் நயன்தாராவுக்கு காஸ்ட்யூம் சேலைதான். 'திருப்பதி'யில் கூட லைலாவுக்குப் பாவாடை தாவணிதான் அணிவித்தேன். 'தர்மபுரி'யும் ஆக்‌ஷன் பிரியர்களை ஈர்ப்பதோடு பெண்களையும் தியேட்டருக்குள் இழுக்கும். என் கதாநாயகன் தர்மம் புரிகிற குணம் கொண்டவராதலால் 'தர்மபுரி' என்று டைட்டில் வைத்தேன். இந்தப் படத்தில் நான் கடைபிடிக்கப் போவது அப்பா செண்டிமெண்ட். கெட்டது செய்யும்போது நாற்பது பேர் துணைக்கு வருவார்கள். ஆனால் நல்லது செய்யும்போது நானூறு பேர் எதிர்ப்பார்கள். இத்தனை சோதனைகளையும் தாண்டி ஊருக்கு நல்லது செய்பவர்தான் என் ஹீரோ.''

ஆக்‌ஷனில் வித்தியாசத்தைப் புகுத்தியிருக்கிறார்களாம். ''வழக்கமா பறந்து பறந்து அடிக்கிறதும் சுவர்ல ஒரு கால் வைச்சு பாய்ந்தடிக்கிறதும்தான் கேப்டனோட ட்ரேட் மார்க் ஃபைட். ஆனா இந்தப் படத்துல அது மாதிரியெல்லாம் கிடையாது. வித்தியாசமான டிஷ்யூம் டிஷ்யூமை பார்க்கலாம். விஜயகாந்த் வழக்கம் போல கடின உழைப்போடு நேரம் தவறாமையைக் கட்டாயமா கடைபிடிக்கிறார். தாம் ஓர் அரசியல்வாதிங்கிற மினுமினுப்பு இன்னும் அவர்கிட்டே வரலை. அரசியலுக்காக அவர் சினிமாவை விட்டுடுவார்னு நான் நினைக்கவில்லை. எம்.ஜி.ஆரே சி.எம். ஆன பிறகுதானே நடிப்பதை நிறுத்தினார். ஒருவேளை விஜயகாந்தும் சி.எம். ஆனபிறகு நடிப்புக்கு



• பேரரசு



முற்றுப்புள்ளி வைப்பார்'' என்றவரிடம் 'விஜயகாந்தால் ஆட்சிக் கட்டிலில் அமர முடியுமென நினைக்கிறீர்களா?' என்று கேட்டால் தர்மபுரியையே உதாரணமாகக் காட்டுகிறார்.

"கேப்டன் குறுகிய காலத்துல கட்சி ஆரம்பித்து இவ்வளவு தூரம் வந்திருக்கிறார். அவரோட பேர், புகழ், வோட்டு வங்கி எல்லாமே நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டேதான் போகுமே தவிர, குறைய வாய்ப்பில்லை. அஜீத், விஜய் இருவருக்கும் என் படங்களே அதிக வசூலை அள்ளிக் கொடுத்தன. அதே போல தர்மபுரியும் சூப்பர் ஹிட்டாகும். விஜயகாந்த் படங்களிலேயே இமாலய வசூலை இதுதான் ஏற்படுத்திக் கொடுக்கும். இதனால் அவருடைய ரசிகர் கூட்டம், அரசியல் செல்வாக்கு எல்லாமே மேலும் உயரவே செய்யும். இவ்வளவும் அவருக்குச் சாதகமாக நடக்கும்போது கேப்டன் ஆசைப்பட்டபடியே அவரால் நிச்சயம் சி.எம். பதவியில் அமர முடியும். அதற்கான ஏற்பாடுகளை 'தர்மபுரி'யின் வெற்றி ஏற்படுத்திக் கொடுக்கும்'' என்கிறார் ஆணித்தரமாக.

- ச.ந.கண்ணன்

கோட்டையில் கொடி!

'தர்மபுரி' படப்பிடிப்பு ஸ்ரீரங்கத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஒரு சில காட்சிகள் ராமேஸ்வரத்திலும், இறுதிக்கட்ட காட்சிகள் தர்மபுரியிலும் படமாக்கப்படவுள்ளன. ஸ்ரீரங்கம் கோயில் கோபுரங்களின் பின்னணியில், அதன் மதில் சுவர்களையொட்டி பாடல் காட்சிகள் மற்றும் சண்டைக் காட்சிகள் படமாக்கப்பட்டு வருகின்றன. இதற்கென ஐந்நூறுக்கும் மேற்பட்ட துணை நடிகர்-நடிகைகள், ஐந்நூறுக்கும் மேற்பட்ட தொழில்நுட்பக் கலைஞர்கள் ஸ்ரீரங்கத்தில் முகாமிட்டுள்ளனர். படப்பிடிப்பை வேடிக்கை பார்ப்பதற்கென ரசிகர்களும், பொது மக்களும் தினசரி பெருமளவில் திரண்டு வருகின்றனர். தேர்தலுக்குப் பிறகு விஜயகாந்த் நடிக்கும் முதல் படம் என்பதால், கட்சிக் கரைவேட்டி இளைஞர்களும் படப்பிடிப்புத் தளத்தில் பரபரப்புடன் அலைந்து கொண்டிருக்கின்றனர்.

'நான் யாரு... நான் யாரு... தெரிஞ்சுக்கிட்டேன்! உங்க முன்னால... அத நான் புரிஞ்சுக்கிட்டேன்!' என்று தொடங்கும் பாடலைத்தான் ஸ்ரீரங்கத்தில் ஷூட் செய்து வருகின்றனர். அடுத்தடுத்த வரிகளில் அனல் பறக்கிறது.

'கொஞ்சம் பொறு... கொஞ்சம் பொறுடா... பத்த வெச்சா பொறி பறக்கும். முட்டி நின்னா தூள் பறக்கும். கோட்டையில் கொடி பறக்குமடா!'

- ஸ்ரீரங்கம் திருநாவு

துருப்பிடித்துத் தேய்வதைவிட, உழைத்துத் தேய்வதே மேல்

– விவேகானந்தர்

தேச பக்தர்கள் வரிசை

1.	காந்தி காட்டும் பாதை	கே.எஸ். ஜம்புநாதன்	ரூ.16.00
2.	கவியரசி சரோஜினிதேவி	வி.என். ரங்கசாமி	ரூ.45.00
3.	பண்டித மதன்மோகன் மாளவியா (எம். பக்தவத்சலம் முன்னுரையுடன்)	எம்.எஸ். சுப்ரமணியன்	ரூ.24.00
4.	அரசியல் ஞானி அரங்கசாமி ஐயங்கார் (ராஜாஜி, மைசூர் திவான் இஸ்மெயில் முன்னுரையுடன்)	ஆர். கிருஷ்ணமாச்சாரியார்	ரூ.150.00
5.	காங்கிரஸ் 50 ஆண்டு சரித்திரம் (1885 – 1935)	எம்.எஸ். சுப்ரமணியம்	ரூ.80.00
6.	கவி. ரவீந்திரநாத் தாகூர் (டி.கே. சிதம்பரநாத முதலியார் முன்னுரையுடன்)	க.நா. சுப்ரமணியம்	ரூ.30.00
7.	லோகமான்ய பாலகங்காதர திலகர் (சென்னை விளம்பர மந்திரி எஸ். ராமநாதன் முன்னுரையுடன்)	என்.ஆர்.கேசரி ராவ்	ரூ.36.00
8.	மஹாதேவ கோவிந்த ரானடே	எஸ்.ஆர். வேங்கடராமன்	ரூ.21.00
9.	புதுமைக் கவி பாரதியார்	தி.ஜ.ர.	ரூ.25.00
10.	தியாக மூர்த்தி பண்டித மோதிலால் நேரு	வெ. சாமிநாத சர்மா	ரூ.28.00
11.	வீரகேசரி விட்டல்பாய் படேல்	ஆர். கிருஷ்ணமாச்சாரியார்	ரூ.52.00
12.	அமர ஜோதி (காந்திஜி) (முன்னாள் முதலமைச்சர் ஓ.பி. ராமசாமி ரெட்டியார் முன்னுரையுடன்)	த.நா. சேனாபதி	ரூ.22.00
13.	அன்னை கஸ்தூரி	எம்.எஸ். சுப்ரமணியம்	ரூ.28.00
14.	மௌலானா அபுல் கலாம் ஆசாத்	வி.என். ரங்கசாமி	ரூ.33.00
15.	ஆசிய ஜோதி ஜவாஹர் (தி.க. அவினாசிலிங்கம் முன்னுரையுடன்)	தி.ஜ.ர.	ரூ.85.00
16.	தீனபந்து ஆண்ட்ரூஸ்	தி.ஜ.ர.	ரூ.22.00
17.	சத்தியமூர்த்தியின் தீரச் செயல்கள்	பி.எல். ராஜேந்திரன்	ரூ.32.00
18.	புதுவழி	சுபாஷ் சந்த்ர போஸ் (தமிழில் த.நா. குமாரசாமி)	ரூ.37.00
19.	இளைஞன் கனவு	சுபாஷ் சந்த்ர போஸ் (தமிழில் த.நா. குமாரசாமி)	ரூ.50.00
20.	எரிமலை	வீர சாவர்க்கர் (தமிழில் ஜெயமணி சுப்ரமணியம்)	ரூ.250.00
21.	மஹான் மணி ஐயர் (காங்கிரஸ் இயக்கத்தைத் தோற்றுவித்தவர்களில் ஒருவர்)	சுந்தரராகவன்	ரூ.32.00
22.	தேசபந்து சித்தரஞ்சன் தாஸ்	எம்.எஸ். சுப்ரமணியம்	ரூ.35.00
23.	சுப்ரமண்ய சிவம்	ஸ்ரீநிவாஸவரதன்	ரூ.25.00
24.	ராஜாராம் மோகன்ராய்	டி.கே. கோபால ஐயர்	ரூ.35.00
25.	மகாகவி பாரதி வரலாற்று நாடகம்	சிலோன் விஜயேந்திரன்	ரூ.25.00
26.	ராவ்பகதூர் பி. அனந்தாசார்லு (காங்கிரஸ் இயக்கத்தைத் தோற்றுவித்தவர்களுள் ஒருவர்)	சுந்தரராகவன்	ரூ.40.00
27.	சுதந்திரச் சிற்பிகள்	பி.ஸ்ரீ.	ரூ.30.00
28.	தமிழ்நாடும் காங்கிரஸும்	பி.ஸ்ரீ.	ரூ.70.00
29.	வீரவிளக்கு வ.வே.சு. ஐயர்	யோகி சுத்தானந்த பாரதியார்	ரூ.75.00
30.	சுபாஷ் சந்திர போஸ்	வி.எஸ். நாராயணன்	ரூ.65.00
31.	ஹரிபுரா காங்கிரஸ் வைபவம்	டி.எஸ். சொக்கலிங்கம்	ரூ.45.00
32.	'ஹிண்டு' கஸ்தூரிரங்க ஐயங்கார்	சுந்தரராகவன்	ரூ.85.00
33.	வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகம்	'பாரதமணி' பி.என். ஸ்ரீனிவாசன்	ரூ.70.00
34.	சென்னையில் உப்பு சத்தியாகிரகம்	பி.என். ஸ்ரீனிவாசன், எம். ஹரிஹர சுப்பிரமணியன்	ரூ.40.00
35.	மதுரை காந்தி என்.எம்.ஆர். சுப்பராமன்	காளமஞ்சரி சம்பத்குமார்	ரூ.45.00
36.	ஆனந்தமடம்	பங்கிம் சந்த்ர சட்டர்ஜி – தமிழில் த.நா.குமாரசாமி	ரூ.50.00
37.	தேசபக்தன் கந்தன்	கா.சி. வேங்கடரமணி	ரூ.50.00


விடுதலைப் போரில் வியப்பூட்டும் நிகழ்ச்சிகள்

பாகம் – 1	பாகம் – 2	பாகம் – 3
(1757 – 1885)	(1885 – 1922)	(1923 – 1947)
ரூ.75.00	ரூ.66.00	ரூ.69.00

அல்லயன்ஸ்

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)

244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
தபால் பெட்டி எண்: 617, மயிலாப்பூர்,
சென்னை – 600 004. தொலைபேசி: 2464 1314
e-mail : srinivasan@alliancebook.com
visit us at : www.alliancebook.com



நிரம்பாத இடைவெளி

விருப்பமற்றவையால்
நிறைந்திருக்கிறது
வாழ்க்கை
அழிக்கப்பட்ட கனவுகள்
அழுத்துகின்றன

நீ பாத்திரங்களோடும்
நான் உன்னோடும்
போராடிக் கொண்டிருக்கிறோம்

பொறுப்பு என்ற
வார்த்தையில் நீடித்திருக்கிறது
நமக்கான இடைவெளி
நிரப்பிட முடியாமல்

உன்னிலிருந்து எனக்கும்
என்னிலிருந்து உனக்கும்
காயப்படுத்தும் வார்த்தைகள்

நாட்கள் மறந்த
இயந்திர வாழ்க்கையில்
மிகச் சரியாய்
குடியேறியிருக்கின்றன
கனமான வெறுமையும்
இயலாமையாலான வெறுப்பும்

சு.ஆனந்த்



காமெடி டைமிலிருந்து கல்தாவா?

சன் டி.வி.யில் யார் யார் எப்போது காணாமல் போவார்கள் என்று கணிக்கவே முடியாது. ஏற்கெனவே ராதிகா, விசுவுக்கு மாற்று ஏற்பாடுகள் நடைபெறுவதாகச் செய்திகள் வரும் நிலையில், பின்னிரவில் வரும் நிகழ்ச்சியான காமெடி டைமில் கொஞ்ச நாளாக அர்ச்சனாவையும் காணோம்!

பெப்ஸி உமாவுக்கு அடுத்த வரிசையில் இடம் பிடித்தவர் அர்ச்சனா. சன் டி.வி.யின் நட்சத்திர காம்பியர். மணக்க மணக்க நேயர்களுடன் உரையாடுபவர். இவருக்கா இந்நிலை என்று குழம்பிப்போய் உண்மை நிலவரத்தை அறிய அச்சுவைத் தேடினோம். மேடம் சென்னையிலேயே இல்லை. இறுதியில் வைசாக்கில் இருப்பது தெரியவர, பேசினோம். விஷயத்தைச் சொன்னதும் விழுந்து விழுந்து சிரித்தார். "அதாவதுங்க, என் அத்தானைப் பார்க்காம எவ்வளவு நாள்தான் அவர் நினைப்பிலேயே காலம் தள்றது? அதனால காமெடி டைமுக்கு ஐந்து நாள் ஜூட் விட்டுட்டு வைசாக்குக்கு ஓடோடி வந்துட்டேன்" என்றார். 'அதெல்லாம் சரி. இந்த இடைப்பட்ட காலத்துல வேறொரு அழகான காம்பியர் நுழைஞ்சுட்டாரே. ஒரேயடியா உங்களுக்குக் கல்தாதானா?' என்றால், கொஞ்சம் யோசித்துப் பதிலத்தார். " என் லீவ் முடிஞ்ச பிறகு மீண்டும் அவங்க என்னைத்தான் கூப்பிடணும். ஆனாலும் அடுத்து என்ன நடக்கும்னு தெரியாது. கூப்பிட்டா கண்டிப்பா வழக்கம்போல காம்பியரிங் பண்ணுவேன்" என்று அத்தோடு அந்த டாபிக்குக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

அர்ச்சனாவுக்கு சன் டி.வி. நிகழ்ச்சிகளைத் தொகுப்பது பொழுது போக்கு மட்டுமே. பிரதான பணியாக உட்சவ் என்கிற ஈவண்ட் மேனேஜ்மெண்ட் கம்பெனியை நடத்தி வருகிறார். கூடவே அதே பெயரில் ஸ்டுடியோவும். "ஒரு நிகழ்ச்சியை எந்தத் தடங்கலுமில்லாம நடத்துறதுங்கிறது பெண்டெடுக்கிற வேலை. இதனாலேயே நான் பண்ற நிகழ்ச்சிகள்ல காம்பியரிங் பண்ணறதில்லை. ஒரே சமயத்துல ரெண்டு குதிரையில சவாரி செய்ய முடியாதில்லையா?" என்கிறார் அர்ச்சனா.

'மத்த தொகுப்பாளினிகள் போல சீரியலில் நடிப்பது, எஃப்.எம்.ல பேசறதுன்னு அகலக் கால் வைக்கறதில்லையா' என்றால், "ம்ஹூம்... எனக்கு நடிப்பு சுட்டுப் போட்டாலும் வராது. எஃப்.எம்., டப்பிங் எல்லாமும் நமக்கு வேண்டாம். காம்பியரிங், உட்சவ் நிகழ்ச்சிகள் ரெண்டையும் ஒழுங்கா செஞ்சு, இருக்கிற பேரைக் கட்டிக் காப்பாத்தினா போதும்" என்கிறார்.

- பப்பி

படம் : ஸ்ரீஹரி



சென்னை பல்கலைக்கழக அரசியல் துறை பேராசிரியரான ரா.மணிவண்ணன், வேலூரைச் சேர்ந்தவர். இருபது ஆண்டுகளுக்கும் மேலாக டெல்லி பல்கலைக்கழகத்தில் பணியாற்றியவர். ஈழத்தமிழர் விவகாரத்தினைக் கூர்ந்து கவனித்து வருபவர். அஹிம்சை முறையில் உலக அமைதிக்குப் பாடுபடும் உலகளாவிய அமைப்பின் செயற்குழு உறுப்பினர். அந்த அமைப்பின் சார்பில் பலமுறை ஈழம் சென்று வந்தவர், கடந்த மாதமும் சென்று, வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பயணம் செய்து, பலதரப்பட்டவர்களையும் சந்தித்துப் பேசிவிட்டு வந்திருக்கிறார். அந்த அனுபவங்களை நம்மிடம் பகிர்ந்து கொண்டார் மணிவண்ணன்.

"ஸ்ரீலங்காவில் நிலப்பகுதிகள், ஒன்று புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ளன அல்லது ராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ளன. எல்லா பகுதிகளிலுமே நாலு வீடுகளுக்கு ஒன்று பாழடைந்து கிடக்கிறது. ஊர் முழுக்கத் துப்பாக்கி ஏந்திய ராணுவத்தினர் அல்லது விடுதலைப் புலிகள் நீக்கமற நிறைந்துள்ளனர்.

ராணுவத்துக்கும், புலிகளுக்கும் நேரடிப் போர் நடக்கவில்லையே தவிர, எந்த நேரத்தில் எங்கே குண்டு வெடிக்குமோ என்ற பீதி மக்கள் மத்தியில் இருக்கவே செய்கிறது. மண்டைத் தீவுக்கு அருகில் உள்ள அலைபிடித் தீவில் உள்ள ஒரு கிராமத்தில் மூன்று நாட்கள் தங்கி இருந்தேன். அங்கே சந்தித்த பலரும் மீன் பிடிப்பதையே தொழிலாகக் கொண்டவர்கள்.

ஒரு வயசான மீனவர், 'ஐயா! இப்பல்லாம் கடலுக்குப் போக முடியலை. கப்பற்படையும், கடற்புலிகளும் எப்போ சுடுவாங்களோன்னு உயிரைக் கையில் புடிச்சிக்கிட்டு வாழுறோம். கடலுக்கே வேலி போட்டாற்போல இருக்கு' என்று வேதனைப்பட்டார்.

மக்கள் தனியாக தங்கள் வீடுகளுக்குள் இரவில் உறங்க பயப்படுகிறார்கள். கோயில், சர்ச் போன்ற பொது இடங்களில் படுத்து உறங்குவது பாதுகாப்பானது என்று நினைக்கிறார்கள்.

இந்த பயத்தின் உச்சகட்டம்தான் அவர்கள் அகதிகளாக இந்தியாவுக்கு வருவது. வசதி இருப்பவர்கள் இரண்டாயிரம், மூவாயிரம் வரை பணம் கொடுத்து படகு ஏறி இங்கு வருகிறார்கள். இல்லாதவர்கள் தங்களிடம் நகை, நட்டு என்று எது இருந்தாலும் கழற்றிக் கொடுத்து விட்டுப் படகு ஏறுகிறார்கள். அமைதிப் பேச்சுவார்த்தை ஆரம்பித்தபோது, தமிழ் மக்கள் நம்பிக்கையோடுதான் இருந்தார்கள். ஆனால் அவர்கள் நம்பிக்கை நாளுக்கு நாள் தகர்ந்துகொண்டே இருக்கிறது" என்ற மணிவண்ணனிடம்.

'அமைதிப் பேச்சுவார்த்தையில் கணக்கம் ஏற்பட்டிருப்பதற்கு என்ன காரணம்?' என்றோம்.



"வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமென்றால் இரு தரப்பினருக்குமே அதில் முழுமையான ஈடுபாடு இல்லை.

இரு தரப்பினருக்கும் ஒருவர் மீது ஒருவருக்குப் பூரணமான நம்பிக்கை இல்லை. ராணுவத் தாக்குதலில் நிலைகுலைந்து போகும் தருணங்களில், தங்களைப் பலப்படுத்திக்கொள்ள கால அவகாசம் பெறும் உத்தியாகவே புலிகள் போர் நிறுத்தத்தைப் பயன்படுத்தி வருகிறார்கள் என்பது ஸ்ரீலங்கா ராணுவத்தின் கருத்து. புலிகளின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் திணறுகிறபோதுதான், ஸ்ரீலங்கா அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு அழைக்கிறது என்பது புலிகளின் வாதம்.

நார்வே நாட்டு குழுவினருக்கு போர் நிறுத்த ஒப்பந்தத்தை யார், எங்கே மீறுகிறார்கள் என்று கண்காணிப்பதே முக்கிய வேலையாக இருக்கிறது. மேலும், ஸ்ரீலங்கா ராணுவமும் இப்போது புலிகளுடன் நேரடியாக மோதலில் ஈடு

உண்மை. ஐரோப்பிய நாடுகளின் கூட்டமைப்பு அண்மையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்துள்ள சூழ்நிலையில், நார்வே இந்தப் பிரச்னையில் மத்தியஸ்தம் செய்வதே விவாதத்துக்குரிய ஒன்று."



● ரா.ம.மணிவண்ணன்

ஈழத்தமிழர் பிரச்னையில் சீனா!

படாமல், கொரில்லா போர் முறையைக் கடைப்பிடித்து, போர் நிறுத்த ஒப்பந்தத்தை மறைமுகமாக மீறுகிறது. விடுதலைப்புலிகளோ, தங்கள் பங்குக்கு ஈழ மண்ணில் ஸ்ரீலங்கா ராணுவத்துடன் மோதுவது தவிர, கொழும்பு மற்றும் தென் பகுதி நகரங்களிலும் தாக்குதல் நடத்தி ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்குத் தலைவலி கொடுக்கின்றனர்.

இந்தச் சூழ்நிலையில், நார்வேயின் தலையீட்டை இரு தரப்பினருமே உள்ளூர விரும்பவில்லை. ஆனால் அதே நேரத்தில் நார்வே குழுவை வெளிப்படையாக வெளியேறும்படி சொல்லுவதையும் தவிர்க்கிறார்கள். தம்மால் அமைதிப் பேச்சுவார்த்தை தடைபட்டதாக குற்றம் சாட்டப்படுவதை இரு தரப்பினருமே விரும்பவில்லை என்பதே யதார்த்தமான

'நார்வேயும் ஒதுங்கிக்கொண்டு, இந்தியாவும் தலையிட விரும்பவில்லை என்றால்' வேறு யாராவது இதில் ஆர்வம் காட்டுவார்களா?'

"என் கணக்குப்படி சீனா, இலங்கை விஷயத்தில் தலையிடும் வாய்ப்பு அதிகமாகவே உள்ளது. அது இலங்கை அரசுக்கு ஆயுத உதவியாகவும் இருக்கலாம்... இல்லை, அமைதிப் பேச்சுவார்த்தைக்கு உதவுவதாகவும் இருக்கலாம். சீனா களமிறங்கும் பட்சத்தில், ஸ்ரீலங்கா விவகாரத்தில் தலையிடச் சொல்லி அமெரிக்கா, இந்தியாவைக் கட்டாயப்படுத்தவும் வாய்ப்புள்ளது. எது எப்படியானாலும், ஸ்ரீலங்கா விவகாரத்தில் சீக்கிரமே சீனா மூக்கை நுழைக்கும்."

- எஸ்.சந்திரமௌலி

கை கொடுக்கும் கை!

"கல்யாணம்ங்கிறது ஆயிரங்காலத்து பயிர்னு சுரெக்டாத்தான் சொல்லியிருக்காங்க. மண்டபம் புக் பண்றதுல ஆரம்பிச்சு, வர்றவங்களை உபசரிச்சு விருந்து வைச்சு நல்லபடியா அனுப்பறது வரைக்கும் எல்லாமே டென்ஷனான சமாசாரம்தான். மாப்பிள்ளை அமெரிக்காவிலிருந்து வந்த மறுநாள் நிச்சயதார்த்தம்; அடுத்த வாரம் கல்யாணம்னு நெருக்கடியான நேரத்திலும் கை கொடுக்கும் கையா முன்னே வந்து நிக்கறது கேட்டரிங் சர்வீஸ்காரங்கதான். நல்ல கேட்டரிங் சர்வீஸ் கிடைச்சுட்டா, பாதிக் கல்யாணம் முடிஞ்ச மாதிரிதான். எங்க வெப்சைட்டில் இருக்குற மெனுவைப் பார்த்து செலக்ட் பண்ணி, ஒரு மெயில் தட்டிவிட்டா போதும்... நாங்களே மத்த ஏற்பாடுகளையும் பார்த்துக்குறோம்'' என்று ஹைடெக்காய் பேசுகிறார் ஜெ.டி கேட்டரிங் சர்வீஸை நடத்தி வரும் ஜெ.துரை.

இத்துறையில் இவருக்கு 25 வருட அனுபவம். பதினைந்து வருடத்துக்கு முன்பு கேட்டரிங் சர்வீஸ் என்றாலே விநோதமாகப் பார்ப்பார்களாம். "அப்பல்லாம் சமையல்காரர்னு சொன்னா சரியான மரியாதைகூட கிடைக்காது. இப்பல்லாம் மாப்பிள்ளைக்கு அப்புறம் மரியாதை கிடைக்கிறது எங்களுக்குத்தான். அஞ்சு நாள் திருவிழா மாதிரி நடத்த வேண்டிய கல்யாணத்தை, இப்போ ஒரே நாள்ல ஷார்ட்டா முடிச்சுடறாங்க. இதனால நாங்கதான் பரபரப்பா இருக்க வேண்டியிருக்குது. இப்போ சாப்பாட்டுல குவாலிட்டி, டேஸ்ட் எல்லாமே ரொம்ப முக்கியம். ஏகப்பட்ட வெரைட்டி காட்டியாகணும். எல்லாரையும் திருப்திப் படுத்தி நல்ல பெயர் வாங்கறதுங்கிறது ரொம்ப கஷ்டமான விஷயம்'' என்று சொல்லும் துரைக்கு ஏகப்பட்ட வி.ஐ.பி. கஸ்டமர்கள். 'இதயம் பேசுகிறது' மணியன் குடும்ப கல்யாணத்துக்கு இவரை ரெக்கமெண்ட் செய்தது எம்.ஜி.ஆராம்.

தமிழ்நாட்டில் சமையல் தொழிலை மட்டுமே நம்பி ஐந்து லட்சம் குடும்பங்கள் இருப்பதாகச் சொல்லும் துரை, மாநில சமையற்கலைஞர்கள் நல சங்கத் தலைவராக இருக்கிறார். முப்பது வருஷங்களுக்கு முந்தைய மத்திய அரசின் உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டம்தான் சமையற்கலைஞர்கள் இருப்பதையே அரசுக்கு அடையாளங்காட்டியது என்கிறார். ஐம்பது பேருக்கு மேல் சமைத்துப் போடக்கூடாது என்கிற அந்தச் சட்டத்தை போராடித்தான் வாபஸ் பெற வைத்தார்களாம்.

துரைக்கு கும்பகோணம்தான் பூர்வீகம். சென்னையில் செட்டிலாகிவிட்டாலும் சொந்த ஊரை அவரால் மறக்க முடியவில்லை. கும்பகோணத்திலேயே சொந்தமாக கல்யாண மண்டபம் கட்டி சொற்ப வாடகைக்கு விடுகிறார்.

• ஜெ.துரை



"மாப்பிள்ளைக்குப் பிறகு மரியாதை

கும்பகோண தீ விபத்து, சுனாமி நேரத்திலெல்லாம் இரவு பகல் வித்தியாசமின்றி இலவசமாய் கேட்டரிங் சர்வீஸ் செய்திருக்கிறார். சமஷ்டி உபநயனம் என்கிற பெயரில் வருஷா வருஷம் ஐம்பது குழந்தைகளுக்கு இலவசமாய்ப் பூணூல் கல்யாணம் நடத்தி வைக்கிறார். எல்லோரும் இலவசமாக கல்யாணமே நடத்தும்போது, பூணூல் கல்யாணம் எதற்கு?' என்றால்,

''கல்யாணம்ங்கிறது ரெண்டு குடும்பங்கள் பேசி முடிவு பண்ற விஷயம். அதுக்காக நாம ரொம்ப மெனக்கெட வேண்டியிருக்கும். ஆனா, பூணூல் கல்யாணம்ங்கிறது அப்படியில்ல. இன்னொண்ணு, சின்ன வயசுல எனக்குப் பூணூல் கல்யாணம் பண்ணி வைக்கிற அளவுக்கு எங்க வீட்டுல வசதியில்லை. அதான் வசதி வந்தப்புறம் என்னால முடிஞ்சதை செஞ்சிட்டிருக்கேன்'' என்கிறார்.

என்றாலும் இதுவொரு சின்ன வட்டத்துக்குள்ளேயே முடிந்துவிடும் என்பதால், ஜாதி, மத வித்தியாசமில்லாமல் மடிப்பாக்கத்தில் முதியோர் இல்லம் ஒன்றையும், கல்விக்காக கஷ்டப்படும் குழந்தைகளுக்காக அறக்கட்டளை ஒன்றையும் நடத்தி வருகிறார்.



• சமஷ்டி உபநயனத்தின்போது மனைவியுடன் துரை...

சமையற்கலைஞர்களில் நிறைய பேர் தஞ்சை மாவட்டத்துக்காரர்களாகவே இருப்பதற்குக் காரணம் கேட்டால், பளிச்சென்று வருகிறது துரையிடமிருந்து பதில்:

''தமிழ்நாடு முழுக்கவே நிறைய திறமையான சமையற்கலைஞர்கள் இருக்காங்க. ஆனா, இசையோ, இலக்கியமோ எதுவா இருந்தாலும் சிரத்தையா செய்து முடிக்கிறதுங்கிறது தஞ்சாவூர்க்காரங்கதான். இன்னிக்கும் நாகை நல்லூர் ரஸம், மாயவரம் டிகாஷன் காபின்னு சொன்னா அது உலகம் முழுக்கத் தெரிஞ்சுருக்கு. அந்த வகையில் எங்க ஊருதான் எங்களை இன்னும் வாழ வைக்குதுன்னு சொல்லணும்!''

- ஜெ.ராம்கி

கிடைக்கிறது சமையல் கலைஞர்களுக்குத்தான்!''

கால்பந்தாட்டமும் கட்டின மனைவியும்...

✍ உமாமகேஸ்வரி

மதியழகன் போட்ட கண்டிஷனைக் கேட்டு அவன் அம்மாவுக்குத் தலை சுற்றியது. "என்னடா இப்படி சொல்றே? இதெல்லாம் நடக்கிற காரியமா? ஏன்தான் உன் புத்தி இப்படி பேதலிச்சுப் போச்சோ?" என்று சுமார் ஒரு மணி நேரம் மெகா சீரியல் கதா நாயகி போல புலம்பிக்கொண்டிருந் தாள். இடையிடையே புலம்பலுக்கு விளம்பர இடைவேளை விட்டு மதி யழகனுக்கு நுரை ததும்ப காபியும், சூடாக பஜ்ஜியும் போட்டுக் கொடுத் தாள். அப்படி என்ன கண்டிஷன் போட்டான் மதியழகன்? 'பொண்ணு எப்படியிருக்கணுப்பா?' என்று அப்பாவியாக அம்மா கேட்டதற்கு,

பொண்ணு படிச்சிருக்கலாம், படிக்காமயிருக்கலாம், அழகாயிருக் கலாம், சுமாராயிருக்கலாம், உயரமா யிருக்கலாம், குள்ளமாயிருக்கலாம், வேலைக்குப் போகலாம், போகா மலிருக்கலாம்..." என்று ஏகப்பட்ட 'லாம்' களை போட்டு பார்த்திபன், வடிவேலுவை குண்டக்க மண்டக்க குழப்புவது போல் குழப்பினான். கடை சியில் சொன்னான்... 'பொண்ணுக்குக் கால்பந்தாட்டம் தெரிஞ்சிருக்கணும்'. இதைக் கேட்டதும் மதியின் அம்மா "கால்பந்தாட்டமா? பத்துப் பதி னைஞ்சு பேர் ஒரு பந்தைத் துரத்தித் துரத்தி அடிப்பானுகளே, அந்த விளை யாட்டா?" என்றாள்.

"ஆமாம்மா!"

"நீ இராத்திரி பூரா கண் முழிச்சுப் பார்த்துட்டுக் கரடி மாதிரி அப்பப்ப கத்திட்டு இருப்பியே அந்த விளை யாட்டா?"

"ஆமாம்மா! ஆமா!"

"ஒரு கிலோ முறுக்கையும் அரை மணி நேரத்தில் தின்னு முடிச்சிட்டு, அம்மா டீ குடு, டீ குடுன்னு உயிரை வாங்கிப் பார்த்துட்டு இருப்பியே அந்த விளையாட்டா?"

"ஐயோ! அம்மா! ஆமா! ஆமா! ஆமா!"

மதியின் மூன்றாவது 'ஆமா' முடிந் தவுடன் அவன் அம்மா தொடங்கிய புலம்பல் இதோ இந்த நேரம் வரை தொடர்ந்துகொண்டே...

பதினைந்து நாட்கள் கழித்து கல் யாணத் தரகர் ஒருவர் மதியின் வீட் டுக்கு வந்தார். மதியழகனின் நிபந் தனைகளைக் கேட்டவர் 'லகலக'வென சிரித்தார். "இதென்ன பிரமாதம்! இதை விட ஆயிரம் கண்டிஷன் போட்ட மாப்பிள்ளைகளை நான் பார்த்திருக் கிறேன். இதெல்லாம் பெரிய விஷயமே யில்லை. நம்ம தம்பிக்கு அவர் விருப்படியே பொண்ணு பார்த்திட லாம்" என்றார். இதைக் கேட்டதும் மதியின் அம்மா இறுதிப் போட்டிக்கு செலக்டான ஆன கால்பந்து டீம் போல் அகமகிழ்ந்துபோனார்.

இதோ! மதியும் அவன் அம்மா வும் பெண் பார்க்கக் கிளம்பிக் கொண் டிருக்கிறார்கள். மதி தன் சட்டைப் பையிலிருந்து அடிக்கடி பிட் பேப்பரை எடுத்துப் பார்ப்பதும், மனப்பாடம்

செய்வதுமாக இருந்தான். வேறொன்றுமில்லை; அந்த பேப்பரில் கால்பந்து குறித்த கேள்விகளை எழுதி வைத்திருந்தான், பெண்ணிடம் கேட்பதற்காக. கேள்விகள் மறந்து போகாமலிருக்கத்தான் அடிக்கடி சட்டைப் பையிலிருந்து எடுப்பதும், மண்டையில் ஏற்றிக் கொள்வதும்... அவன் பெண்ணிடம் கேட்ட கேள்விகள் என்னென்ன தெரியுமா?

ஃப்ரீ கிக் என்றால் என்ன? ஆஃப் சைடு என்றால் தெரியுமா, பெனால்ட்டி என்று எதை அழைக்கிறார்கள், கார்னர் குறித்து நீங்கள் அறிந்தது யாதோ?

எல்லாக் கேள்விகளுக்கும் கோல் போஸ்ட்டில் நச்சென்று விழுகிற பந்துபோல் பதில் சொன்ன பரிமளத்தை அங்கேயே தாலி கட்டிவிடத் துடித்தான் மதியழகன். கூட வந்திருந்த நண்பர்களுக்கு அவனை ஆசுவாசப்படுத்தி வீட்டுக்கு அழைத்து வருவதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது. சரியாக ஒரு மாதம் கழித்து மதிக்கும் பரிமளத்துக்கும் திருமணம் முடிந்தது.

உலகக் கோப்பை கால்பந்து சீசனும் வந்தது... போட்டிகள் ஜரூராக நடந்து கொண்டிருந்தன. டி.வி. முன்னால் பரிமளமும், மதியும் உங்களுக்குத்தான் தெரியுமே, டி.வி. பார்க்கிறபோது மதியின் வாய் அரவை மெஷினாகி விடும் என்று! புது மனைவியிடம் "பரிமளா கொஞ்சம் முறுக்கு எடுத்துட்டு வா!" தண்ணி ஒரு சொம்பிலே எடுத்துட்டு வா!" என்றான் கெத்தாக.

ஐந்து நிமிடம் ஆயிற்று... பரிமளம் அசைந்தபாடில்லை. மறுபடியும் "பரிமளா முறுக்கு என்னாச்சு?" என்றான். "அடப்போங்க! வேணும்னா நீங்களே போய் எடுத்துட்டு வாங்க! இந்த கேம் முடியற வரைக்கும் நான் அங்க இங்க நகர மாட்டேன்'' என்றாள் பரிமளம். மதிக்குக் கோபம் தலைக்கேறியது.



"என்ன இப்படிச் சொல்றே! எங்க அம்மா நான் கூப்பிடறபோதெல்லாம் ஓடி ஓடி முறுக்கை எடுத்துட்டு வருவாங்க. டீ போட்டுத் தருவாங்க. நீ என்ன இப்படி அலட்சியமா பேசறே!" என்றான்.

"அப்படியா! ரொம்ப நல்லதாப் போச்சு! எனக்கும் ரெண்டு முறுக்கு எடுத்து வரச் சொல்லுங்க அம்மாகிட்ட!" ○

விறகா... விளையாட்டா?

எந்தவொரு ஜீவனும் சுயமுயற்சியின்றி வாழ்க்கையில் வெற்றி பெற முடியாது. முயற்சியே செய்யாமல், எல்லாவற்றையும் இறைவன் பார்த்துக் கொள்வான் என்று சொல்லிக் கொண்டிருப்பது சோம்பேறிகளின் சுபாவமாகும். அனைத்தையும் இறைவன் பார்த்துக் கொள்வான் என்று அவர்கள் வாயால் சொன்னாலும், அவர்களுக்கு இறைவன் மீது முழுமையான நம்பிக்கை கிடையாது.

முயற்சி செய்ய வேண்டிய நேரங்களில் 'இறைவன் பார்த்துக் கொள்வான்' என்று சொல்லிவிட்டு சும்மா உட்கார்ந்திருப்பார்கள். பசி வந்ததும் உணவு எங்கே கிடைக்கும் என்று தேடிக்கொண்டு கிளம்பிவிடுவார்கள். உணவு கிடைக்காவிட்டால், எங்காவது திருடியாவது சாப்பிட்டுத் தங்கள் பசியைத் தீர்த்துக் கொள்வார்கள். ஏன் அந்தச் சமயத்திலும், 'இறைவன் எப்படியும் சாப்பாடு கொடுத்து நம் பசியைத் தீர்த்து வைப்பான்' என்று உட்கார்ந்திருக்க வேண்டியதுதானே!

நம்முடைய ஒவ்வொரு காரியத்திலும் இறைவனுக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. நமக்கு ஆயுளையும், ஆரோக்கியத்தையும், புத்தியையும் இறைவன் கொடுத்திருப்பது நாம் சோம்பேறிகளாக இருந்துகொண்டு, வாழ்க்கையைப் பாழாக்க அல்ல.

தீயை உபயோகித்து உணவும் சமைக்கலாம்; வீட்டையும் கொளுத்தலாம். கத்தியைப் பயன்படுத்தி உயிரைக் காக்கவும் முடியும். உயிரை எடுக்கவும் முடியும். இறைவன் நமக்கு அளித்திருக்கும் கருவிகளை நாம் முறையாக உபயோகிக்கவில்லை என்றால், நன்மைக்குப் பதிலாக தீமைதான் நடக்கும். முயற்சி செய்ய வேண்டிய நேரத்தில், சரியான முறையில் முழுமையான அர்ப்பணிப்புடன் முயற்சி செய்யுங்கள். அப்போதுதான் சரியான பலன் கிடைக்கும்.

ஒரு சீடன் பிச்சை எடுக்கச் சென்றான். மாலை வரை அவன் எங்கெங்கோ அலைந்து திரிந்தும், அவனுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. இரவானது. பசியால் வாடிய முகத்துடன் குருவிடம் வந்தான். அவனுக்கு இறைவன் மீது கடும் கோபம். குருவிடம் உரத்த குரலில், "இறைவனை நம்பினால் நமக்குத் தேவையான எல்லாம் கிடைக்கும் என்று சொன்னீர்கள். ஒரு வேளை உணவுகூட இன்றைக்கு இறைவன் எனக்குத் தரவில்லை. பசித்த வயிறுக்கு உணவு தர இயலாத இறைவனை நான் ஏன் நம்ப வேண்டும்? இறைவனை நம்பியது முட்டாள்தனம். இனி நான் இறைவனை நம்பப் போவதில்லை" என்று கூறினான்.



குரு. "சீடனே! உனக்கு ஒரு லட்ச ரூபாய் தருகிறேன். உன் கண்களை எனக்குத் தருவாயா?" என்று கேட்டார். சீடன், "மனிதனுக்குக் கண்கள் போய்விட்டால் பார்க்க முடியாதே! எவ்வளவு பணம்



மாதா அமிர்தானந்தமயி

அன்பெனும் மழையிலே - 15

கொடுத்தாலும் யாராவது கண்களை விலைக்கு விற்பார்களா?" என்று கேட்டான்.

குரு, "அப்படியானால் கண்கள் வேண்டாம். உன்னுடைய நாக்கைக் கொடுக்கிறாயா?" என்று கேட்டார். "நாக்கைக் கொடுத்துவிட்டால் நான் எப்படிப் பேசுவது?" என்று பதில் கேள்வி கேட்டான் சீடன்.

"சரி! நாக்கு வேண்டாம்! உனது கையைத் தருகிறாயா? அது முடியாதென்றால் காலைத் தந்தாலும் போதும். ஒரு லட்ச ரூபாய் தருகிறேன்" என்று சொன்னார் குரு. சீடன், "பணத்தை விட மதிப்பு மிகுந்தது உடல். உடலின் அங்கங்களை, பணம் வாங்கிக் கொண்டு கொடுக்க யாராவது முன் வருவார்களா?" என்று கேட்டான்.

சீடனின் பதிலைக் கேட்ட குரு, "உன்னுடைய உடல் பல லட்சம் ரூபாய் விலை மதிப்புள்ளது. இறைவன் உன்னிடமிருந்து எதையும் எதிர்பார்க்காமல் உனக்கு இந்த உடலைக் கொடுத்திருக்கிறார். இருந்தபோதும் நீ அந்த இறைவனையே குறை கூறுகிறாயே, இது நியாயமா? இறைவன் நீ

அம்மா!

அம்மாவுக்குப் பல விதங்களில் தொல்லைகள் கொடுத்து வந்த உடன்பிறந்த சகோதரன் சுபகன், யானைக்கால் நோய் வந்து மிகவும் கஷ்டப்பட்டான். திடீரென்று 1978, ஜூன் மாதத்தின் ஒரு நாள் இரவு "நான் தீராத வியாதியால் அவதிப்படுவதால் தற்கொலை செய்து கொள்கிறேன்" என்று கடிதம் எழுதி வைத்துவிட்டுத் தற்கொலை செய்து கொண்டான்.

அம்மாவுக்கு எதிரானவர்கள் இதனை வைத்து அம்மாவுக்கும் அவரது தந்தை சுகுணானந்தருக்கும் சிக்கல் ஏற்படுத்தத் திட்டமிட்டார்கள். 'சுபகன் தற்கொலை செய்துகொள்ளவில்லை; இது திட்டமிட்ட கொலை' என்று பிரசாரம் செய்து, அம்மாவையும், அவரது தந்தையையும் குற்றவாளிகளாக்க முயன்றார்கள். ஆனால், சுபகன் தற்கொலை செய்துகொள்வதற்கு முன்னால் தனது சில நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் தன்னுடைய முடிவைத் தெரிவித்துக் கடிதம் எழுதி இருந்தான். பிரேதப் பரிசோதனையும், 'இந்தப் புகார் ஆதாரமற்றது' என நிரூபித்தது.

- மௌலி



சோம்பேறியாக இருப்பதற்காக இந்த உடலைக் கொடுக்கவில்லை. நற்காரியங்கள் செய்து வாழ்வதற்காகவே கொடுத்திருக்கிறார்" என்றார்.

குழந்தைகளே! இறைவன் நமக்கு அளித்திருக்கும் இந்த உடலை கவனத்துடன் பயன்படுத்துவதே, நாம் அவருக்குச் செய்யும் சமர்ப்பணமாகும். மாறாக, முயற்சி செய்யாமல் சோம்பேறித்தனத்துடன் இருப்பது அவருக்கு இழைக்கும் துரோகமாகும்.

பகவான் கிருஷ்ணர், கீதையில் அர்ச்சுனனிடம் "அர்ச்சுனா! நீ போர் புரிவாய்! உன்னுடன் நான் இருக்கிறேன்!" என்று சொல்கிறார். அப்படியில்லாமல், "நீ கர்மம் ஒன்றும் செய்ய வேண்டாம். சும்மா இருந்தால்போதும். நான் உன்னுடைய எதிரிகள் அனைவரையும் வீழ்த்தி உன்னைக் காப்பாற்றுகிறேன்! பாண்டவர்கள் வெற்றிவாகை சூட வழி செய்கிறேன்" என்று சொல்லவில்லை.

இறைவனை நோக்கி நாம் ஓர் அடி எடுத்து வைத்தால், இறைவன் நம்மை நோக்கி நூறு அடி எடுத்து வைப்பார். ஆனால், அந்த ஓர் அடி எடுத்து வைக்கும் முயற்சியைக்கூட நாம் செய்வதில்லை.

குழந்தைகளே! முயற்சி செய்வதற்கான திறமையையும், சூழ்நிலையையும் நமக்கு ஏற்படுத்தித் தருபவன் இறைவன் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. நம்முடைய முயற்சி வெற்றி பெறுவது இறைவனின் அருளைச் சார்ந்தே அமைகிறது. அதனால், நம் முயற்சியின் பலன் எதுவாக இருந்தாலும், அதனை இறைவனிடம் சமர்ப்பித்துவிட்டு, முயற்சி செய்வது மட்டுமே நமது கடமையாகும்.

இறைவனின் கரங்களில் இருக்கும் ஒரு கொம்பைப் போல நாம் இருக்க வேண்டும். அவர் அதை விளையாட்டாக உபயோகிக்கலாம்; வெட்டிப் பிளக்கலாம்; விறகாகவும் பயன்படுத்தலாம். 'இறைவா! நீ என்ன செய்தாலும் எனக்கு சந்தோஷமே!' என்று கூறும் சமர்ப்பண மனோபாவம் நமக்கு வரவேண்டும். அப்போதுதான் வெற்றியும், தோல்வியும் நம்மை பாதிக்காது. நம்மால் திருப்தியாகவும், நிம்மதியாகவும் வாழ முடியும்.

(அன்பு பெருகும்)

ஒரு பக்கம்!

இவர்கள் பெயர் ப்ளாகர்கள். தமிழில் வலைப்பூக்காரர்கள். இவர்கள் எதைப் பற்றி வேண்டுமானாலும் எழுதுவார்கள், எவ்வளவு வேண்டுமானாலும் எழுதுவார்கள். இவர்களே எடிட் செய்வார்கள், இவர்களே பதிப்பிப்பார்கள். பல சமயங்களில் இவர்கள் மட்டுமே படித்துக் கொள்வார்கள். உலகெங்கும் ஆயிரக்கணக்கான வலைப்பூக்காரர்கள் தினமும் இணைய தளத்தில் அமர காவியம் படைத்துக் கொண்டிருக்கிறார்கள். தோராயமாக 98.87 சதவிகிதம் குப்பையாக இருக்கும்.

அமந்தா கோங்கடனும் ஒரு மேற்படி வலைப்பூக்காரர்தான். ஒரு சிறிய வித்தியாசம் - இவர் ஒரு எழுத்தாளர் கிடையாது; தொகுப்பாளினி. திங்கள் தொடங்கி வெள்ளி வரை ஒவ்வொரு



நாளும் மூன்று நிமிடங்கள் இவர் வீடியோவில் தோன்றுவார். சில சமயம் உலகச் செய்திகளை வாசிப்பார், சில சமயம் யாரையாவது பேட்டி எடுப்பார், சில சமயம் கிண்டலடிப்பார், சிநேகமாகச் சிரிப்பார். இதற்காகவே அமந்தாவைப் பார்க்க, கேட்க விரும்புபவர்கள் அதிகம்.

யதேச்சையாகத்தான் ராக்கெட்பூம் எனும் வீடியோ வலைப்பூவில் 2004-ல் சேர்ந்தார் அமந்தா. 'அமந்தா' 'அமந்தா' என்று உறக்கத்தில் பிதற்றும் அளவுக்கு ரசிகர்கள் குவிவார்கள் என்று அவர் கனவிலும் நினைக்கவில்லை. தலைமுடியைக் கோதிவிட்டபடி அமந்தா அளிக்கும் அந்த மூன்று நிமிட அரட்டையை அமந்தாவுக்காகவே மீண்டும் மீண்டும் பார்த்துப் புளகாங்கிதம் அடைந்தவர்கள் அநேகம்.

சரி, அமந்தாவின் வீடியோவை எத்தனை பேர் டௌன்லோட் செய்து பார்க்கிறார்கள் என்று ஒரு நாள் கவனித்தபோது, அதிர்ந்தேபோனது ராக்கெட்பூம். மொத்தம் 2,00,000 பேர். 'சந்தேகமேயில்லாமல் அமந்தா ஒரு சூப்பர்ஸ்டார்' என்று தி நியூயார்க் டைம்ஸ் இந்தப் பூக்காரியைப் பற்றி ஒரு கட்டுரை எழுதியது.

நிற்க; சென்ற வாரம் அமந்தா ராக்கெட்பூமிலிருந்து வெளியேறிவிட்டார். ஏதோ தகராறாம். அவ்வளவுதான்; தவிதவித்துவிட்டார்கள் - அமந்தா - காரர்கள்.

'ஒரு நாளும் நான் உங்களை விட்டுப் போகமாட்டேன். விரைவில் உங்கள் அனைவரையும் வீடியோவில் மீண்டும் சந்திப்பேன்' என்று நம்பிக்கையுடன் உறுதியளித்திருக்கிறார் அமந்தா. இரண்டு லட்சத்து சொச்ச ஆட்கள் நகத்தைக் கடித்துக்கொண்டு காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

- மருதன்

வந்தாச்சு ஆடி... ஒளியுங்க ஓடி!

"என்னய்யா சோமு, மேனேஜர் கிட்ட போய் தலையைச் சொறிஞ்சுட்டிருந்தியே, என்ன விஷயம்?"

"வேற என்ன ராமு... அட்வான்ஸ் தேவைப்பட்டது. ஆடி வந்துடுச்சே. என் ஒய்ஃப் ஒரு லிஸ்ட்டைப் போட்டு வெச்சிருக்கா."

"தீபாவளி, பொங்கலுக்கு போனஸ் கொடுக்கற மாதிரி ஆடிக்கும் ஒரு போனஸ் கொடுக்கணும். இதைப் பத்தி சங்கத்துல பேசணும். ஆபீஸ்ல இருக்கிற லேடி ஸ்டாஃபும் கண்டிப்பா ஆதரவு கொடுப்பாங்க."

"நான் ஏற்கெனவே ஆடித் தள்ளுபடிக்குப் போயிட்டு முதுகு வலியோடு வந்திருக்கேன்."

"ஏன்? என்ன ஆச்சு?"

"ஒரு கடைக்காரன் 'உங்கள் கணவருடன் வந்து ஆடைகளைத் தேர்வு செய்தால் சிறப்புத் தள்ளுபடி. முதல் ஒரு மணி நேரத்துக்குப் பத்து சதவீதம். அடுத்த ஒரு மணி நேரத்துக்கு இருபது சதவீதம்'னு இப்படியே கூட்டிட்டே போற மாதிரி ஒரு விளம்பரம் கொடுத்திருந்தான். ஒய்ஃபோடு போனேன். அங்க போன பின்னாடிதான் விளம்பரத்தோட சூட்சுமமே புரிந்தது."

"என்ன பண்ணினாங்க?"

"என் ஒய்ஃப் டிரஸ் செலக்ட் பண்ணிட்டிருந்தப்ப ஒருத்தன் என் பக்கத்துல வந்து, 'சார் சும்மாதானே நின்னுட்டு இருக்கீங்க? ஒரு ஹெல்ப் பண்ணுங்க'ன்னு சொல்லி கூட்டிட்டுப் போனான்."

"எங்கே?"

"அவங்களோட குடௌனுக்கு. அங்கே ரெண்டு லாரி நின்னுட்டு இருந்தது. அதுல இருந்து பார்சலை இறக்கிட்டு இருந்தாங்க. என் தோள்லயும் ஒரு பார்சலைத் தூக்கி வெச்சு உள்ளே கொண்டு போகச் சொன்னாங்க. உள்ளே போனா, அங்க இருக்கிற எல்லோருமே என்னை மாதிரியே வந்தவங்கதான். கூலிக்காரங்க எல்லாம் கூலியை அதிகம் கேட்கிறாங்கன்னு இப்படி ஒரு ஐடியா பண்ணி இருக்காங்க."

"என் வீட்டுல அதைவிட பெரிய கொடுமை நடக்குதுப்பா. 'ஆரோக்கியமான குடும்பத்துக்கு அதிரடி ஆடித் தள்ளுபடி'ன்னு ஒரு விளம்பரம். அதாவது ஒவ்வொருத்தரும் அவங்க வயசுக்கு ஏத்த மாதிரி இவ்வளவு எடை இருக்கணும்னு ஒரு கணக்காம். அந்த மாதிரி இருந்தா தள்ளுபடியாம். குடும்பத்தோடு போய் கடையில் இருக்கிற வெயிட் மிஷின்ல பார்க்கணுமாம். ஒவ்வொருத்தரும் சரியான எடை இருந்தா தள்ளுபடியாம்."

"நல்ல விஷயம்தானே?"

"என்ன நல்ல விஷயம்? நான் என்னோட வயசைவிட ஐந்து கிலோ அதிகமா இருக்கேனாம். அதனால என் ஒய்ஃப் தினமும் ஐந்து மணிக்கெல்லாம் என்னை எழுப்பி எக்ஸர்சைஸ் பண்ணச் சொல்றா. காலையில டிபன் வெறும் கஞ்சிதான். ராத்திரிக்கு ரெண்டு சப்பாத்தி. இப்பக்கூட பாருங்க, வெறும் ரசம் சாதம் கொடுத்திருக்கா."

"அடப்பாவமே!"

"மிச்சத்தையும் கேளுங்க. என் அம்மாவைத் தெரியுமில்லியா?"

"தெரியுமே. ஓமக்குச்சி நரசிம்மனுக்குப் பொம்பளை வேஷம் போட்ட மாதிரி இருப்பாங்களே."

"அவங்க இருபது கிலோ குறைவா இருக்காங்களாம். அதனால் காலையில

ஆரணி யுவராஜ்

பத்து, பதினைஞ்சு இட்லியைக் கொடுத்துச் சாப்பிடச் சொல்லி மிரட்டறாப்பா."

"இந்த விளம்பரத்தைப் பாரு. டிப் - டாப் தள்ளுபடி நூறு சதவீதம். அதாவது டிப்-டாப்பா டிரஸ் பண்ணிட்டுப் போகணுமாம். எந்தக் குடும்பத்தோட டிரஸ் சூப்பரா இருக்கோ, அவங்களுக்கு நூறு சதவீதம் தள்ளுபடியாம்."

"இதுல அவங்களுக்கு என்ன லாபம்?"

"அந்த டிப்-டாப் டிரஸ்ஸை அவங்ககிட்டயே வாங்கி இருக்கணுமாம். அவங்க சொல்ற டெய்லர்கிட்டதான் தைக்கணுமாம்..."



"இப்ப புதுசு புதுசா வியாதிங்க வர்ற சீசனில்லையா? இதை வெச்சு ஒரு கடைக்காரர் தள்ளுபடி போட்டு இருக்கார். சிக்குன் குன்யாவுக்கு அடுத்தது என்ன வரும்னு சரியா கண்டுபிடிச்சுச் சொன்னா சிறப்புப் பரிசாம். அதாவது சொன்னவங்களுக்கே அந்த வியாதி வந்துட்டா ட்ரீட்மெண்ட் செலவை கடைக்காரர் ஏத்துப்பாராம். கடையில் டிரஸ்ஸை எடுத்தவங்களுக்கு வியாதி வந்தா, பாதி ட்ரீட்மெண்ட் செலவை ஏத்துப்பாங்களாம்."

"இதையெல்லாம் கேட்கறப்ப ரொம்ப பயமா இருக்குப்பா. இனிமே ஒவ்வொரு வருஷமும் ஆடி மாசம் வர்றப்ப ஒரு மாசம் லீவு போட்டுட்டு ரஜினிகாந்த் மாதிரி இமயமலைக்குப் போயிடலாம்னு இருக்கேன்."

"அட, அப்பிராணி... உனக்கு விஷயமே தெரியாதே?"

"என்ன?"

"காவிக்குப் பட்டு இலவசம்னு ஒரு கடைக்காரர் அறிவிச்சு இருக்கார். அதாவது ஐந்நூறு ரூபாய்க்குக் காவித் துணியை வாங்கினா, ரெண்டாயிரம் ரூபாய் பட்டுச்சேலை இலவசமாம். நீ வேண்டாம்னு சொன்னாலும் உன் ஒய்ஃபே இமயமலைக்கு அனுப்பி வெச்சுடுவா."

"தமிழ்க்குடிமகனா பிறந்துட்டு இந்த மாதிரி சின்ன விஷயத்துக்கெல்லாம் பயந்தா எப்படி? சீக்கிரம் சாப்பிடுங்க. ஈவ்னிங் சீக்கிரமா வீட்டுக்குப் போகணும். இந்த ஆடிக்குத் துணி எடுத்தா, அடுத்த ஆடி வரைக்கும் ஒரு லிட்டர் பால் இலவசமாம். அதை வாங்கறதுக்குப் போகணும்." ●

சில வருடங்களுக்கு முன் நடந்த சம்பவம் இது. 'திருச்சி சுற்றுவட்டார பெட்ரோல் பங்குகளில் விநியோகிக்கப்படும் டீசலில் கலப்படம் இருக்கிறது. இதைக் கண்காணித்து நடவடிக்கை எடுக்கவும்' என்று தொடர்ந்து புகார்கள். இந்தியன் ஆயில் நிறுவனத்தின் விஜிலன்ஸ் குழுவினர் பல வழிகளைக் கையாண்டு பார்த்தும் கலப்படம் எப்படி, எங்கு நடக்கிறது என்று கண்டுபிடிக்க இயலவில்லை.

பின்னர் திடீரென்று ஒரு நாள் சந்தேகத்துடன், ஒரு குறிப்பிட்ட டேங்கரைத் தொடர்ந்து செல்ல, அந்த டேங்கர், முக்கிய சாலையிலிருந்து விலகிக் கிளைச் சாலையில் சென்றது. அங்கிருந்த ஒர்க்ஷாப் ஒன்றினுள் அந்த டேங்கர் நுழைந்தவுடன், வேலையாட்கள் மிக சுறுசுறுப்பாக டேங்கிலிருந்த வால்வுகளைத் திருப்புவதும், பம்புகளை இணைப்பதுமாக இருந்தார்கள். கண்காணிப்புக் குழு ஒரே பாய்ச்சலில் உள்ளே செல்ல, கலப்படக் குழு மாட்டிக்கொண்டு விட்டது. டீசலைவிட கெரசின் விலை குறைவாதலால், அதைப் பெருமளவு வாங்கி டீசலில் கலந்து விற்கும் மோசடி கும்பல் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

"பெட்ரோலியப் பொருட்களை மக்களுக்கு எந்தவிதக் கலப்படமுமில்லாமல் கொடுப்பதற்குச் சிறந்த வழி குழாய் மூலம் அதை எடுத்துக் கொண்டு போவதுதான். உலகம் முழுவதும் குழாய் மூலம் எடுத்துச் செல்வதைத்தான் ஊக்குவிக்கிறார்கள். இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து பெட்ரோல், டீசல், கெரசின் ஆகியவை பைப்புகள் மூலமாக 9000 கி.மீட்டருக்கும் அதிகமான தூரத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. ஆனால், தமிழ்நாட்டில் சென்னையிலிருந்து மதுரை வரை அமைக்கப்பட்டிருக்கும் குழாய்தான் ஒரு மாநிலத்துக்குள்ளேயே அமைக்கப்பட்டிருக்கும் அதிக நீளம் கொண்ட பைப் லைன் ஆகும். இனி கிட்டத்தட்ட 500 டேங்கர் லாரிகள் செய்யும் வேலையை இந்த பைப் லைனே பார்த்துக்கொள்ளும். நெடுஞ்சாலையில் போக்குவரத்து நெருக்கடியும் விபத்துகளும்



• சென்னை - மதுரை பெட்ரோல் பைப் லைன் வரைபடம்...

குறையும்'' என்று சொல்கிறார், இந்தியன் ஆயில் நிறுவனத்தின் பொது ஜன மூத்த மேலாளரான சிதம்பரம்.

சென்னை - மதுரை குழாய்ப் பாதையில் இடையில் திருச்சி அருகிலுள்ள ஆசனூர் என்ற இடத்திலிருந்து சேலம் சங்ககிரி வரை கிளை பைப் லைன் ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. மொத்த நீளம் 683 கி.மீ. இந்த குழாய்ப் பாதையை சமீபத்தில் முதல்வர் கருணாநிதி திறந்து வைத்தார். சென்னை மணலியிலுள்ள சுத்திகரிப்பு ஆலையிலிருந்து டீசலும், பெட்ரோலும், கெரசினும் குழாயில் பாயத் துவங்கிவிட்டன.

பூமிக்குக் கீழே ஆறடியில் அமைக்கப்பட்டிருக்கிறது குழாய். கொள்ளிடம், காவிரி போன்ற ஆற்று நிலைகளில், தண்ணீர் ஓடும் மட்டத்துக்குப் பதினைந்து அடி கீழே குழாய் அமைத்துத் தருகிறார்கள். பள்ளம் தோண்டாமல் (trenchless) குழாய் அமைக்கும் துளையிடும் தொழில்நுட்பம் கையாளப்பட்டுள்ளது. பாறைப் பகுதிகளிலும், நில உரிமையாளர்கள் குழாய் செல்ல அனுமதி கொடுக்கக் கொஞ்சம் இழுத்தடித்த இடங்களிலும் குழாய் அமைப்பது என்பது ஒரு சவாலாக இருந்தாலும் ஒரே

ரோலியப் பொருட்களின் அழுத்தம் மணலியில் உள்ள கட்டுப்பாட்டு நிலையத்தின் மூலம் கண்காணிக்கப் படுகிறது. குழாயுடன் செல்லும் ஆப்டிக் ஃபைபர் கேபிள்கள் மூலமாகத்

'500 டேங்கர் லாரிகள் செய்யும் வேலையை இந்த பைப் லைன் செய்யும்!'

தகவல்கள் கட்டுப்பாட்டு நிலையத்துக்கு வந்துவிடும். இந்தக் குழாய்ப் பாதையில் சீரான ஓட்டத்துக்காக இருபத்திரண்டு வால்வுகள் உள்ளன. அதில் பதின்மூன்று வால்வுகளை சென்னையிலிருந்தே இயக்கலாம். ஏதாவது கசிவோ, குழாயில் வெடிப்போ அல்லது கள்ளத்தனமாக யாராவது ஓட்டை போட்டு எடுத்தாலோ, உடனே அழுத்தம் குறைந்துவிடும். மணலியில் கம்ப்யூட்டர் அதைக் காட்டிக் கொடுத்துவிடும். இங்கிருந்தே பிரச்னைக்குரிய குழாயின் இரண்டு பக்கங்களிலும் உள்ள வால்வுகளை மூடிவிடுவோம்.

சத்தமில்லாமல் ஒரு சாதனை!

வருடத்தில் முடித்திருக்கிறார்கள்.

''பெட்ரோலியப் பொருட்கள் ரொம்ப ஆபத்தானவை ஆயிற்றே. பூமி அதிர்ச்சி போன்றவை ஏற்பட்டால் குழாய் சேதமடையும் வாய்ப்பு உண்டே!''

''குழாயில் செலுத்தப்படும் பெட்

பூமி அதிர்ச்சியோ அல்லது வேறு எந்த இயற்கைச் சீற்றங்களோ இந்தக் குழாய்க்குச் சேதத்தை உண்டாக்க முடியாது. இரட்டைச் சுவர் (double layer) கொண்ட உறுதியான குழாய் இது'' என்கிறார் சிதம்பரம்.

- ஸ்ரீநி



பிழையின்றி நல்ல தமிழ் எழுதுவது எப்படி?

தற்கால நடைமுறைக்கேற்பத் தமிழில் பிழையில்லாமல் எழுதப் பல இலக்கண நூல்கள் அனைத்தையும் கற்றுத்தான் ஆக வேண்டும் என்பதில்லை. ஆயினும் அவற்றுள் கூறப்பட்டவற்றுள் மிக மிக முக்கியமானவற்றையாவது அறிந்து கொள்ள வேண்டாமா? அந்த மிக மிக முக்கியமானவற்றைக் கூறுவது தான் இந்நூல். பிழையின்றி நல்ல தமிழ் எழுத இது பெரிதும் துணை செய்யும்.

வல்லினம் (க், ச், த், ப்) மிகும் இடத்தையும் மிகா இடத்தையும், குற்றியலுகரத்தையும் வேற்றுமையையும் சில மணித்துளிகளில் புரிந்து கொள்ளும் வகையில் அமைத்துக் காட்டுகிறது. இந்நூல். பெயரெச்சத்தையும், வினையெச்சத்தையும் தெளிவாக விளக்குகிறது. இந்நூல்.

பிழையான 200 வாக்கியங்களை எடுத்துக்காட்டி அவற்றிற்குரிய சரியான வாக்கியங்களைத் தருகிறது. இந்நூல்.

இதுவரை இது போன்ற தலைப்பில் பல நூல்கள் வெளிவந்துள்ளன. ஆயினும் ஒன்றேனும் இந்த அளவு தெளிவாகவும் முழுமையாகவும் இல்லை என்பதைக் கற்பார் உணர்வர்.

கதை எழுதுவது எப்படி? கடிதம் எழுதுவது எப்படி? கட்டுரை வரைவது எப்படி? என்னும் வினாக்களை எழுப்பி, மாதிரிக்குச் சில சிறுகதைகளை - கடிதங்களை- கட்டுரைகளை எடுத்துக்காட்டுகிறது. இந்நூல்.

பிழையற்ற நல்ல தமிழ் என்பது உரைநடைக்கு மட்டுமன்று: கவிதைக்கும் அது பொருந்தும் எனக் கூறும் வண்ணம் நூலின் இறுதிப்பகுதியில் யாப்பையும், அணியையும் தேவையான அளவு சுருக்கித் தருகிறது. இந்நூல். வடசொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்களை ஒரு நீண்ட பட்டியலாக அமைத்துக் காட்டுகிறது. இந்நூல்.

முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களின் ஆசிரியரும், தமிழக அரசின் சிறந்த எழுத்தாளர் என்னும் பரிசு பெற்றவருமான பேராசிரியர் ஜெ. ஸ்ரீசந்திரன் அவர்களால் எழுதப்பெற்றது இந்நூல்!

இரண்டு நூல்களும் சேர்ந்து விலை ரூ. 400 சலுகை விலையில் ரூ. 250 மட்டுமே!

தமிழ்–தமிழ்– அகராதி

உலகிலேயே பழம் பெருமை வாய்ந்த மொழிகளுள் முதன்மையாக விளங்குவது, தமிழ்மொழி. கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த மொழி நம் தமிழ் மொழி எனச் சான்றோர் இதன் பழமையைச் சுட்டிக்காட்டி மகிழ்வர்! தாம் அறிந்த மொழிகளிலேயே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம் எனப் பூரிப்படைகிறார், பாரதியார். இப்படி ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வளர்ந்து வரும் நம் அருமை மொழியில் உள்ள சொற்களின் பொருளை எளிதில் அறிய வகை செய்கிறது இந்நூல்.

நாற்பது ஆண்டுகாலம் தமிழ் கற்பித்த பேராசிரியர்கள் முனைவர் நிலாமணி மற்றும் முனைவர் கலா தாக்கர் அவர்களால் தொகுக்கப்பெற்றது இந்நூல்!

இந்த அகராதி உங்கள் கையில் இருந்தால் பழந்தமிழ் இலக்கியச் சொற்கள் பிற்காலச் சொற்கள் எனப் பலவற்றிற்கும் பொருளை அறியலாம்.

சென்னையில் உள்ளோர் 24364174 / 55666727 தொலைபேசியில் தொடர்பு கொள்க! நேரில், உங்கள் இல்லத்திற்கே வந்து தேவையான நூல்களைத் தருகிறோம். நூல்களுக்குரிய சலுகை விலையை மட்டும் ரொக்கமாகச் செலுத்தினால் போதும்.



நேரில் பெற

- சென்னை : வர்த்தமானன் ✆ : 24364174 / 55666727
- கோவை : விஜயா பதிப்பகம் ✆ : 2382614 / 2394614
- சேலம் : சந்திரா ✆ : 2265635
- திருச்சி : திருச்சி புக் ஹவுஸ் ✆ : 2764198 / 2766815
- மதுரை : செல்வி ✆ : 5380169 / 2343510
- நெல்லை : அருள் நந்தி சிவம் ✆ : 2339692 / 2338443
- திருவண்ணாமலை : ஸ்ரீ அருணா வரதன் ✆ : 250272 / 254600
- காஞ்சிபுரம் : குரு ✆ : 27260256
- விழுப்புரம் : கீதா ✆ : 225183 / 9865754879
- புதுக்கோட்டை : எஸ்.பி.எம். ✆ : 230035 / 9443531950
- தஞ்சாவூர் : அன்னம் ✆ : 279288 / 9443159371
- தருமபுரி : சதீஷ் ✆ : 268112



எல்லோருக்குமான கடமை!

சென்னை சமஸ்கிருத கல்லூரிக்கு இது நூறாவது ஆண்டு. தமிழ்நாடு, இதர மாநிலங்கள் மட்டுமின்றி அண்டை நாடுகளான ஸ்ரீலங்கா மற்றும் நேபாளத்திலிருந்து கூட மாணவர்கள் வந்து படிக்கிறார்கள். அகில இந்திய அளவில் ஆண்டுதோறும் நடத்தப்படும் சமஸ்கிருத ஸ்லோகம் சொல்கிற அந்தாக்ஷரி போட்டியில், கடந்த 15 வருடங்களாக முதல் பரிசு பெற்று சாதனை படைத்து வருபவர்கள் சென்னை சமஸ்கிருத கல்லூரி மாணவர்கள்தான்!

தற்போதைய கல்லூரி முதல்வர் டாக்டர் தேவிபிரசாத் உள்பட, இங்கு பணிபுரியும் ஆசிரியர்கள் அனைவருமே அந்தக் கல்லூரியின் முன்னாள் மாணவர்கள்தான்.

ப்ளஸ் டூ, பட்டப் படிப்பு, மேற்பட்டப் படிப்பு இவை அனைத்தையும் இணைத்து ஏழு ஆண்டு சிரோன்மணி படிப்பு மட்டுமின்றி பொது மக்களுக்காக ஒரு வருடம், இரண்டு வருடங்கள் என்று சமஸ்கிருதம் சொல்வித்தரும் மாலை நேர வகுப்புகளும் இங்கே நடத்தப்படுகின்றன.

தற்போது முழு நேரப் படிப்பில் சுமார் நூறு மாணவர்கள் படிக்கிறார்கள். அவர்களுக்கு, சமஸ்கிருதத்தில் வேதம், அத்வைத வேதாந்தம், சமஸ்கிருத இலக்கணம், இலக்கியம், நாடகங்கள், ஜோதிடம் (இதில் கணிதமும் உள்ளடக்கும்), தர்க்க சாஸ்திரம் ஆகிய பாடங்களுடன் ஆங்கிலமும் சொல்லித் தருகிறார்கள். இங்கு மாணவர்கள் வேட்டி, சட்டைதான் அணிந்து வர வேண்டும் என்பது கட்டாயம்.

"நூறு வருடங்களுக்கு முன்பு, சமஸ்கிருதம் சொல்லித்தருவதற்காக ஒரு கல்லூரியை ஆரம்பிக்க வேண்டும் என்று முயற்சி எடுத்தவர் யார்?" என்று கல்லூரி முதல்வர் தேவிபிரசாதிடம் கேட்டபோது, "பிரிட்டிஷ் ஆட்சியின் போது, அரசாங்கத்துக்குத் தேவைப்பட்ட குமாஸ்தாக்களை உருவாக்கும் நோக்கத்துடன் மெக்காலே கல்வித் திட்டத்தை அவர்கள் செயல்படுத்தினார்கள். அதனால் நம் பாரம்பரியக் கல்வி முறைக்கு ஆபத்து ஏற்பட்டது. அப்போது, சென்னை பார் கவுன்சிலின் மூத்த வக்கீலும், பின்னாளில் சென்னை உயர்நீதி

மன்றத்தின் நீதிபதியுமான வி.கிருஷ்ணஸ்வாமி ஐயர், தமது நெருங்கிய நண்பர்களான வி.பாஷ்யம் ஐயங்கார், ஏ.கிருஷ்ணஸ்வாமி ஐயர் மற்றும் ஏ.எஸ்.பாலசுப்ரமணிய ஐயர் ஆகியோருடன் சேர்ந்து ஓர் அறக்கட்டளை தொடங்கி, அதன் மூலமாக சென்னை சமஸ்கிருத கல்லூரியினை ஆரம்பித்தார்" என்றார்.

'சமஸ்கிருத படிப்பு அவசியமானது என்பதில் சந்தேகமில்லை. அதனைச் செய்துவரும் இந்தக் கல்வி நிலையத்துக்கு வருகை தந்ததில் நான் மகிழ்ச்சியடைகிறேன்' என்று 1915ம் ஆண்டு சமஸ்கிருத கல்லூரிக்கு வருகை புரிந்த மகாத்மா காந்தி, விருந்தினர் புத்தகத்தில் எழுதிக் கையெழுத்திட்டிருக்கிறார். 1922ல், இங்கு வருகை புரிந்த மகாகவி ரவீந்திரநாத் தாகூர், இக்கல்லூரியின் சேவையைப் பாராட்டியிருக்கிறார்.

மஹாபெரியவரின் பரிபூரணமான ஆசி பெற்ற இடம் இந்தக் கல்லூரி அவர் பல முறை முகாமிட்டு பக்தர்களுக்கு அருளாசி வழங்கி உள்ளார். சில வருடங்களில் சாதுர்மாஸ்ய விரதத்தின் போது அவர் இங்கே தங்கியதுண்டு. 'பிடி அரிசி திட்டத்தை' இங்கு முகாமிட்டிருந்தபோதுதான் அவர் அறிவித்தார்.

இங்கு படிக்கும் மாணவர்களில் பெரும்பாலானவர்கள் விடுதியில்தான் தங்கிப் படிக்கிறார்கள். அவர்களுக்குத் தங்க இடமும், உணவும் இலவசமாக வழங்கப்படுகின்றன. சென்னை பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள இந்தக் கல்லூரிக்கு, மத்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறையின் நிதி உதவி வழங்கப்பட்டபோதிலும், விடுதியை நடத்துவதற்குத் தேவையான பணத்துக்கு நன்கொடைகளையே நம்பி இருக்கிறார்கள்.



• கல்லூரி முதல்வர் தேவிபிரசாத்

'இங்கே படித்து முடித்தபின், உங்களுக்கெல்லாம் எங்கே, என்ன மாதிரியான வேலை கிடைக்கும்?" என்றதற்கு மாணவர் ஸ்ரீதர், இங்கு பயிலும் பெரும்பாலானவர்களுக்கு சமஸ்கிருத ஆசிரியர் வேலை கிடைத்துவிடும். சிலர் மேற்கொண்டு ஆராய்ச்சி செய்வார்கள். சிலர் கோயில்களில் வேலைக்குச் செல்வார்கள்" என்றார்.

"இங்கே நாங்கள் படிக்கிற படிப்பு ஒன்றும் அவ்வளவு சுலபமானதில்லை. இன்ஜினியரிங் மாதிரி கஷ்டப்பட்டுத்தான் படிக்க வேண்டும். நம்முடைய புராதனமான விஷயங்கள் அழிந்து போகாமல் பாதுகாக்க வேண்டிய கடமை நம் ஒவ்வொருவருக்கும் உள்ளது. எனவேதான், நாங்கள் இங்கே சேர்ந்து படிக்கிறோம். சமஸ்கிருதத்தின் பெருமை இந்த நாட்டிலுள்ளவர்களுக்கு வேண்டுமானால் தெரியாமல் இருக்கலாம். ஆனால் மேற்கத்திய நாட்டுக்காரர்களுக்கு நன்றாகவே புரிந்திருக்கிறது" என்றார் ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த ரங்கராஜன் என்னும் மாணவர்.

- எஸ்.சந்திரமௌலி

• மாணவர்கள்...



நாய்க் கடிக்கு



"நான் எல்.ஐ.சி. ஏஜெண்டாகி மினிமம் பாலிஸி பிடிக்கறதுக்குள்ளே என் உயிரே போயிடுது."

"நீயாவது இன்ஷூர் பண்ணியிருக்கியா, இல்லையா?"

- பா.விஜயசாரதி



"நேத்து ராத்திரி நீங்க எனக்கு ரெண்டு பட்டுப்புடைவை எடுத்துக் கொடுத்த மாதிரி கனவு கண்டேங்க!"

"அப்படியா? ஒரு புடைவையை இப்பக் கட்டிக்கோ. இன்னொரு புடைவையைத் தீபாவளிக்குக் கட்டிக்கோ!"

- ஜி.கே.நிதி



"கராத்தே கத்துக்கிற பொண்ணை லவ் பண்ணுனியே... மேரேஜ் எப்போ?"

"எங்க அம்மாவுக்கு வர்மக்கலை டிரெயினிங் முடிஞ்சதும் கல்யாணம் வச்சிக்கலாம்னு சொல்லிட்டாங்க."

- பா.விஜயசாரதி

என்ன பண்ணலாம்?



"நாய்க்கடிக்கு என்ன செய்யறது?"

"நாயைச் சீண்டினாலே போதும். கண்டிப்பா கடிக்கும்."

- பா.விஜயசாரதி



"கம்பெனியிலிருந்து உன்னை வேலையை விட்டு வீட்டுக்கு அனுப்பிட்டாங்களே, அப்படி என்ன செஞ்சே!"

"ஒண்ணும் செய்யல!"

"அதான் வீட்டுக்கு அனுப்பிட்டாங்களா?"

- வே.முருகேசன்



"பக்கத்து வீட்டுக்காரி பட்டுப் புடைவையைப் பார்த்தால் விடுவீங்களே... அந்த மாதிரி பெருமூச்சு விடுங்க...!"

-எஸ்.ஜெ.கலைவாணி



PCO STD ISD

தவளைகள் ஹனிமூன் போகுமா?

PCO

'ஏ, என்னப்பா? ஊருக்குள்ள காத்தாட நடமாட உடுறாங்களா? உள்ள புடிச்சுப் போட்டுருவேன். உசிரை எடுத்துருவேன்னு கண்டமேனிக்கு மிரட்டிக்கினு திரியறாய்ங்க. நம்ம என்ன கொலையாப் பண்ணிப்புட்டோம்'னு போன வாரம் ஒரு பன்றி குமுறித் தள்ளிடுச்சு. விஷயம் இதுதான்... புதுச்சேரில, தெருவில நடமாடுற பன்றிகளைத் தூக்கிட்டுப் போயிருவோம்னு நகராட்சி, உழவர்கள்கிட்ட கறாராச் சொல்லிருக்கு. 'என்னப்பா இது அநியாயமா இருக்கு? பன்றிகளுக்குன்னு காப்பகங்கள் ஏதும் அமைக்காத நகராட்சி, பிரெஞ்சுக்காரங்களுக்காக பன்றிக் கறி விற்கிற கூடங்களை வைச்சிருக்கிறது ஏன்'னு செம காட்டமா பன்றி வளர்ப்போர் சங்கத்தினர் அறிக்கை விட்டிருக்காங்க. பன்றிகள் சாலை மறியல்ல இறங்கறதுக்குள்ள நல்ல முடிவா எடுங்கப்பு!


STD

மத்தியப் பிரதேசத்துல பிந்துவாரான்னு ஒரு கிராமம் இருக்கு. அங்க கடந்த சில வருஷங்களா சரிவர மழையே பெய்யலியாம். வாயை வைச்சுக்கிட்டுச் சும்மா இருக்க முடியாத ஜோசியக்காரன் ஒருத்தன், 'ஒரு தவளை சோடிக்குக் கண்ணாலம் பண்ணி வைச்சுட்டா மழை மானாவாரியாப் பெய்யும்'னு ஸ்டேட்மெண்ட் விட்டான். 'எதைத் தின்னா பித்தம் தெளியும்'னு தவிச்சுக்கிட்டிருந்த கிராம மக்கள், நல்ல நாள், நேரம் பார்த்து ஒரு ஆண், பெண் தவளைங்களைப் பிடிச்சுக்கினு வந்து, குங்கும சந்தனத்தால அலங்கரிச்சு, பிள்ளையார் கோயிலுக்குக் கூட்டிட்டுப் போயி, வேதம், மந்திரம் எல்லாம் சவுண்டா சொல்லி கண்ணாலம் முடிச்சு வைச்சாங்களாம். அப்புறம் சோடிங்களை ஹனிமூனுக்காக ஒரு குளத்துல தூக்கிப் போட்டாங்களாம். அதுக்கப்புறம், ஊர்ல எல்லாரும் கோழிக்கறி விருந்து சாப்பிட்டாங்களாம். 'மழை வந்துருச்சா'ன்னு கேக்கறதுக்கு முன்னாடி மனசாட்சியோட அந்தப் பொண்ணுக்கு மாப்ளையைப் பிடிச்சிருக்குமான்னு யோசிச்சுப் பாருங்க!

ISD

மிச்சேல் ரோட்ரிகஸ்னு ஒரு ஹாலிவுட் நடிகை இருக்காங்க. அவங்களையும் புலியையும் சம்பந்தப்படுத்திச் சொல்ல ஒரு நியூஸ் இருக்கு. நீங்க நெனைக்கிற மாதிரி இல்ல. விஷயம் என்னன்னா, அம்மணி ஒரு நைட் பார்ட்டிக்காக ஹோட்டலுக்குப் போயிருக்காங்க. தனியா இல்ல, கூடவே பிறந்து ஒன்பது வாரமே ஆன ஒரு வெள்ளைப் புலிக் குட்டியையும் தூக்கிக்கிட்டு போயி பார்ட்டில, அந்தப் புலிக்குட்டியை வைச்சு பந்தா காட்டியிருக்காங்க. அதைத் தண்ணிக்குள்ள தூக்கிப் போட்டு நீந்த வைச்சிருக்காங்க. வேற என்னென்னமோ வித்தைக் காட்டியிருக்காங்க. டின்னர் முடிஞ்சு போச்சு. ஆனா வெள்ளைப் புலிக்குட்டியை அம்மாபுலிகிட்டயிருந்து கடத்திட்டு வந்ததா மிச்சேல் மேல கேஸ் போடப் போறாங்களாம். எதுக்குத்தான் இந்த பவுசோ?

- முகில்




அன்பும் அறமும்...

சூரிய மண்டலம் எத்தனை பெரிது! அதைவிடப் பெரிய நட்சத்திர மண்டலங்கள் எத்தனையோ இருக்கின்றனவாம். இத்தனையையும் செய்த ஸ்வாமி எவ்வளவு பெரியவராக இருக்க வேண்டும்? அத்தனை பெரியவர், குழந்தைகளான நம் பிரார்த்தனையையும் கேட்கிறார்! புழு பூச்சியிலிருந்து எல்லாவற்றுக்கும் இந்த உலகத்தில் அததற்குத் தேவைப்படுகிற ஆகாரத்தை அவர்தான் வைத்திருக்கிறார். அப்படியானால் அவர் இருதயத்தில் எத்தனை அன்பு இருக்க வேண்டும்?

அன்பு இருப்பது மட்டுமல்ல, நாம் ஒழுங்கில்லாமல் தப்பும் தவறுமாகக் காரியம் செய்வதுபோலவா அவர் செய்கிறார்? அவரை 'ஏன்' என்று கேட்டுக் கண்டிப்பதற்கு அவருக்கு மேல் எவரும் இல்லாவிட்டாலும் அவர் எத்தனை ஒழுங்கோடு தினமும் இந்தப் பூமியை ஒருமுறை சுழலவிட்டுப் பகலையும் இரவையும் படைக்கிறார்? இதேபோல் இந்தப் பூமி சரியாக ஒரு வருஷத்தில் சூரியனைச் சுற்றி வரச்செய்து பலவிதமான பருவங்களை உண்டாக்குகிறார்! ஒவ்வொன்றும் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று ஒழுங்கு செய்திருக்கிறார். நாமும் அவரைப் போல் மனசில் அன்பாக இருக்க வேண்டும்; காரியத்தில் ஒழுங்காக இருக்க வேண்டும். இந்த ஒழுங்குக்குத்தான் தர்மம், அறம் என்று பெயர்.

அன்பும் அறமும் உருவான ஸ்வாமியை வேண்டினால் நமக்கும் இவை உண்டாகும். அவருடைய அருளை நினைத்து நன்றி செலுத்துவதே மன அழுக்கையெல்லாம் போக்குகிற பெரிய ஸ்நானம்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்



அருள்வாக்கு

16.7.2006 முதல்

மேஷம் : எண்ணங்கள் யாவும் ஈடேறும் வாரம். வீடு / வாகனம் வாங்க நல்ல நேரம். பணக்கஷ்டம் வராது. பொருளாதார மேன்மை உண்டாகும். நண்பர்/ உறவினர்களால் நற்பலன் ஏற்படும். கல்வி வளம் மேலோங்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். மன அமைதி ஏற்படும். திருமணக் காரியம் கைகூடும். தூர தேசப் பிரயாணம் செய்ய நேரிடும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். பதவி உயர்வு ஏற்படும். சிலருக்கு இடமாற்றம் ஏற்படலாம். வியாபாரத்தில் நல்ல லாபம் ஏற்படும். சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயர் கோயிலுக்குச் சென்று துளசி மாலை சாற்றவும். நற்பலன் மிகுதி ஆகும்.

ரிஷபம் : எதிர்ப்புகள் விலகும் வாரம். ஆரோக்கியம் சற்று பாதிக்கப்படும். உத்தியோகத்தில் இடமாறுதல் வரும். பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். நீண்ட காலக் கடன்கள் தீரும். வழக்கு, வியாஜ்யம் வெற்றி பெறும். சுபகாரியப் பேச்சு வார்த்தை கைக்கூடும். மனத்தில் தைரியமும், தன்னம்பிக்கையும் மிகும். மாணவர்களின் படிப்பில் போதிய முன்னேற்றம் உண்டாகும். நெருங்கிய நண்பர், உறவினர்களிடமிருந்து விலகிச் செல்ல நேரிடும். திருமணத் தடை விலகும். செலவுகள் கட்டுக்கடங்கி இருக்கும். ராகு / கேது / குரு வழிபாடு வெள்ளி, செவ்வாய், வியாழக்கிழமை செய்து வருதல் நற்பலனை அளிக்கும்.



• படம்: ஸ்ரீஹரி

மிதுனம் : மிகவும் மேன்மையான வாரம். சுபநிகழ்ச்சி கைகூடும். தாயின் உடல்நிலை பாதிக்கப்படும். நண்பர், உறவினர்கள் வழியில் ஆதாயம் ஏற்படும். வீடு / மனை வாங்க நல்ல தருணம். பணப் பற்றாக்குறை வராது. குழந்தைகளுக்கு சந்தோஷம் கிட்டும். சத்ரு தொல்லை இருக்காது. உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். வியாபாரத்தில் நல்ல லாபம் காணும். சிலருக்கு வேலையில் இடமாற்றம் ஏற்படும். உடல்நிலை பாதிக்கப்படாது. தனம், வாக்கு, கல்வி மேலோங்கும். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்வது நல்ல பலனைத் தரும். திருமணம் கைகூடும். ராகு / கேது வழிபாடு நற்பலனை உண்டாக்கும்.

கடகம் : மன இறுக்கம் மிகுந்த வாரம். பொறுமையும் நிதானமும் சற்றுத் தேவை. வாக்குவாதத்தைத் தவிர்க்கவும். தெய்வ அனுகூலம் ஏற்படும். உத்தியோகஸ்தர்களுக்கு நெருக்கடிகள் இருந்தும், வியாபாரத்தில் சற்று முற்போக்கான சூழ்நிலை காண்பிக்கும். பத்திரிகையில் பெயர் வரும். எதிர்ப்பு, தொல்லைகள் இருக்கும். கணவன்-மனைவி உறவு நன்றாக இருக்கும். திருமணக் காரியம் கைகூடும். படிப்பில் கவனம் தேவை. நண்பர், உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். சனி / குரு / வழிபாடு நற்பலனை தரும்.

22.7.2006 வரை

சிம்மம் : பல போராட்டங்களைச் சந்திக்கும் வாரம். எதிலும் கவனமுடன் செயல்படவும். கணவன், மனைவி விட்டுகொடுத்து அனுசரணையுடன் நடந்து கொள்வது நல்லது. யாருக்கும் ஜாமீன் போடக்கூடாது. நெருங்கிய சகாக்கள் விலகிப் போவார்கள். திருமணத் தடங்கல் இருக்கும். வண்டி வாகனத்தில் செல்லும் போது கவனம் தேவை. உத்தியோகத்தில் தொந்தரவுகள் இருக்கும். அவசரப்பட்டு வேலையை விட வேண்டாம். வியாபாரத்தில் சற்று மந்த நிலை தென்படும். ராகு / கேது / குரு / சனி வழிபாடு நற்பலனை அளிக்கும்.

கன்னி : மனக்குழப்பம் தீரும் வாரம். எண்ணங்கள் யாவும் ஈடேறும். குடும்ப வாழ்வில் விட்டுக்கொடுத்து நடந்து கொள்வது நற்பலனைத் தரும். திருமணக் காரியம் கைகூடும். புதிய முயற்சி கைகூடும். வியாபாரத்தில் நல்ல லாபம் காணும். உத்தியோகஸ்தர்களுக்குப் பொறுப்புகள் கூடும். ஊதிய உயர்வு ஏற்படும். உடல்நிலை பாதிக்கப்படாது. வீடு, மனை வாங்க நல்ல தருணம். எதிர்பாராத தனம் கிட்டும். ராகு / கேது வழிபாடு செய்துவர நற்பலன் மிகுதி ஆகும்.

துலாம்: சிறப்பான வாரம். வழக்கு வியாஜ்ஜியம் முடிவுக்கு வரும். வீடு/மனை வாங்க நல்ல தருணம். குடும்ப வாழ்வு நற்பலனைத் தரும். தெய்வ தரிசனம் கிட்டும். திருமண முயற்சிகள் கைகூடும். செலவுகள் பயனுள்ளதாக இருக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். மனச்சலனம் தீரும். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். பதவி உயர்வு ஏற்படும். பணக்கஷ்டம் இராது. கணவன் - மனைவி உறவு நற்பலனைத் தரும். கல்வியில் நல்ல மேன்மை ஏற்படும். சனி/குரு வழிபாடுகளை வியாழக்கிழமை தோறும் செய்துவர நற்பலன் மிகுதி ஆகும்.

விருச்சிகம் : யோகமான வாரம். குழந்தைகள் பற்றிய மனக்கவலை நீங்கும். திருமணக் காரியம் கைகூடும். உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படாது. நீண்ட கால எண்ணங்கள் ஈடேறும். பணக்கஷ்டம் இராது. சத்ரு தொல்லை விலகும். உத்தியோகத்தில் பதவி உயர்வு ஏற்படும். அண்டை நாட்டு வியாபாரம் நற்பலனைத் தரும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். வீடு/மனை வாங்க நல்ல நேரம். பூர்வீகச் சொத்து பாகப் பிரிவினை ஆகும். நெருங்கிய உறவினர்/நண்பர் விலகிப் போவார்கள். குழந்தைகளைப் பற்றிய கவலை நீங்கும். சுப காரியம் கைகூடும். ராகு/கேது/குரு வழிபட்டு வர சங்கடங்கள் தீரும்.

தனுசு : செல்வாக்கு பெற்ற வாரம். மனமகிழ்ச்சி தரும். நினைக்கும் காரியம் ஜெயம் ஆகும். புதிய வேலைவாய்ப்பு கிடைக்கும். திருமணம் கைகூடும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். நற்பெயர் கிட்டும். ஆரோக்கியம் பாதிக்கப்படாது. வெளியூர்ப் பிரயாணங்கள் வந்து சேரும். தொழில்துறையில் நல்ல முற்போக்கான சூழ்நிலை ஏற்படும். குழந்தைகளால் மனமகிழ்ச்சி ஏற்படும். புதிய முதலீடுகள் நற்பலனை அளிக்கும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். ராகு/கேது/ சனி வழிபாடு செய்து

நடக்குமென்பார்; நடக்கும்!

பரத்வாஜ்

வருதல் நன்மை அளிக்கும்.

மகரம் : மிகவும் நற்பலனைத் தரும் வாரம். செல்வாக்கு, மதிப்பு, மரியாதை வந்து சேரும். கௌரவப் பதவி வந்து சேரும். தெய்வ தரிசனம் கிட்டும். வெளியூர்ப் பிரயாணம் செல்ல நேரிடும். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். புதிய தொழில் முயற்சி நற்பலனை அளிக்கும். உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படாது. திருமணத் தடைகள் விலகும். நண்பர், உறவினர்கள் மூலம் அனுகூலம் ஏற்படும். குழந்தைகளால் சந்தோஷம் ஏற்படும். புதிய சொத்து சுகம் சேரும். சத்ரு தொல்லை விலகும். வழக்கு வியாஜ்ஜியம் முடிவுக்கு வரும். சனி/குரு வழிபாடு செய்து வருதல் நற்பலனை அளிக்கும்.

கும்பம் : சத்ருக்களை வெல்லும் வாரம். முயற்சி செய்யும் காரியம் வெற்றி அளிக்கும். உத்தியோகத்தில் நற்பெயர் ஏற்படும். கணவன், மனைவி விட்டுக் கொடுத்து நடந்துகொள்வது நற்பலனைத் தரும். யாருடனும் வாக்குவாதம் வேண்டாம். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. தொலைதூரப் பிரயாணம் வந்து சேரும். திருமணக் காரியம் கைகூடும். உடல்நிலையில் கவனம் தேவை. வண்டி வாகனத்தில் செல்லும்போது உஷார். குழந்தைகளால் சந்தோஷம் ஏற்படும். நண்பர்/உறவினரால் ஆதாயம் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் இருக்கும். ராகு/கேது வழிபாடு செய்துவர, தீமைகள் விலகி நன்மைகள் ஏற்படும்.

மீனம் : மனக் குழப்பம் தீரும் வாரம். அந்நிய நாட்டு மனிதர்களால் அனுகூலம் ஏற்படும். பணக்கஷ்டம் வராது. உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படாது. குழந்தைகளால் சந்தோஷம் கிட்டும். சத்ரு தொல்லை விலகும். வெளிநாட்டு வேலை கிடைக்கும். கணவன் - மனைவி விட்டுக் கொடுத்தல் நல்லது. சுபகாரியம் கைகூடும். மனச்சலனம் தீரும். நண்பர், உறவினர் மூலம் ஆதாயம் ஏற்படும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் காணும். செலவுகள் கட்டுக்கடங்கி இருக்கும். தொழில் துறையில் மாற்றம் உண்டாகும். புதிய முயற்சி கைகூடும். ராகு/கேது/குரு வழிபாடு நற்பலனை அளிக்கும்.

பார்த்வாஜ்... பதில்கள்...

என் மகன்களுக்கு உயர்கல்வி, உத்தியோக வாய்ப்பு எப்படியுள்ளது? மூத்த மகனுக்குத் திருமணம் எப்போது நடக்கும்?

- எம்.ராஜாமணி, பல்லாவரம்

உங்கள் மூத்த மகன் ஜாதகப்படி 2006 அக்டோபருக்குப் பிறகுத் திருமணம் நடக்கும். சுக்ரதசை நடப்பதால் 2007-ல் வெளிநாடு செல்லும் யோகம் உள்ளது. நிறைய படிக்கலாம். இளைய மகனுக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு உண்டு.

என் மகள் தன் கணவனைப் பிரிந்து இருக்கிறாள். அவர்கள் ஒற்றுமையாக வாழவும், பேரனின் முன்னேற்றத்துக்கும் வாய்ப்பு உண்டா?

- ஆர்.கே.கரன், திருவொற்றியூர்

உங்கள் பேரன் ஜாதகத்துக்கு செவ்வாய் தசை நடைபெற்று வருகிறது. அது முடியும்வரை தாய், தந்தை ஒற்றுமைக் குறைவாக இருப்பர். சஷ்டி கவசம் படித்து வருதல் நலம். விரதம் இருக்கவும்.

என் மகளுடைய திருமணம் எப்போது நடக்கும்? தோஷம் ஏதேனும் உள்ளதா?

- ரா.பாண்டியன், திண்டுக்கல்

தங்கள் மகளுக்கு 29 வயதில் திருமணம் முடியும். பிறந்த ஊருக்கு அருகில் தென் திசையிலிருந்து நன்கு படித்த, பண்புள்ள வரன் அமையும். சர்ப்பதோஷம் உள்ள ஜாதகம் பார்க்கவும்.

என் மகளுக்கு எப்போது திருமணம் நடக்கும்?

- பி.நடேசன், கொள்ளிடம்

தங்கள் மகளுக்கு 29 வயதுவரை சூரிய தசை நடக்கும். சுக்ர புத்தியில் திருமணம் நடக்கும். ஒரே பையன் உள்ள இடத்தில் திருமணம் நடக்கும். சர்ப்பதோஷம் உள்ள வரனைச் சேர்க்கவும்.

அள்ளிக் கொடுக்கும் அமுதக் கரைசல்!

மயிலாடுதுறை அருகே கிடாத் தலைமேடு கிராமத்தில் வசித்து வரும் சேதுராமன், தீவிர இயற்கை விவசாயி. ஒரு ஏக்கரில் கொய்யா பயிரிட்டிருக்கிறார். வருடத்துக்கு 15 டன் கொய்யா விளைகிறதாம். அதிகச் செலவுகள் ஏதுமின்றி ஒரு ஏக்கர் மூலமாக மட்டும் ஆண்டொன்றுக்கு சுமார் அறுபதாயிரம் ரூபாய் கிடைக்கிறதாம்.

“முன்னெல்லாம் உரம் வைப்போம். பூச்சி மருந்து தெளிப்போம். பூ பூக்கும். காய் காய்க்கும். விளைஞ்சு வரும். கொய்யா பறிச்சு வெளியே அனுப்பினா, அதனை வாங்கிட்டுப் போயி கடைத்தெருவுல விக்கிறவங்களுக்கு, இருபது கிலோ கொய்யாவுல எப்படியும் ரெண்டு கிலோ கொய்யாப் பழம் வீணாப் போயிடும். இப்ப நாலு வருஷமா அப்படி இல்லீங்க! இயற்கை விவசாயத்துல கொய்யா விளையறதுனால ரொம்ப எதுவும் வீணாகிப் போறது இல்லீங்க!” என்றார் நம்மிடம் பேசிய கொய்யாத் தோப்பு பணியாளர் ஒருவர்.

மரப் பயிர்களில் கொய்யா ஒரு வரப்பிரசாத சாகுபடிப் பயிர். இதர பழ வகை மரங்களைக் காட்டிலும், குறைவான தண்ணீரைப் பெற்று நல்ல விளைச்சலைத் தரக்கூடியது.

ஆண்டொன்றுக்கு இரண்டு தடவை விளைச்சல். வெயில் காலங்களில் விளைச்சல் அதிகமாகவும், மழைக் காலங்களில் விளைச்சல் குறைவாகவும் இருக்கும். கொய்யா பறித்து முடிவடைகிற ஒவ்வொரு பருவத்தின் போதும் மண்புழு உரம் இடப்படுகிறது. இதற்கென மண்புழு உர உற்பத்திக் கிடங்குகள் சேதுராமன் தோப்பில் அமைந்துள்ளன. பின்னர் பூ பிடிக்கும் பருவத்தில் பஞ்ச கவ்யமும், அமுதக் கரைசலும் தெளிக்கப்படுகின்றன. வெளியிலிருந்து இடு பொருட்கள் எதுவும் அவரது விளை நிலங்களுக்குள் கடந்த நான்காண்டுகளாக இடப்படுவதில்லை.

பஞ்ச கவ்யத்தையும் அமுதக் கரைசலையும் சேதுராமனே தயாரித்துக் கொள்கிறார். “பத்து லிட்டர் மாட்டுச் சாணம், பத்து லிட்டர் மாட்டுக் கோமியம், ஒரு கிலோ நாட்டு வெல்லம் மூன்றையும் ஒன்றாகக் கலக்கி, சுமார் இருபத்தி நான்கு மணி நேரம் ஊற வைத்தால் போதும்... அமுதக் கரைசல் மற்றும் பஞ்ச கவ்யம் ரெடி. இந்த இயற்கைக் கரைசல்களை தெளிப்பதன் மூலம் மண் வளம் கூடுகிறது. அதன் வாயிலாக நம்முடைய மண் தன்னைத்தானே தற்காத்துக் கொள்கிறது!” என்று சொல்லும் சேதுராமன், தன் கால் கட்டை விரலால் கொய்யாத் தோப்பு நிலத்தைக் கிளறிவிட... மண் புழுக்கள் நெளிகின்றன.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



• சேதுராமன்

கண்ணாடியிலிருந்





இருபத்தாறு வயது இளைஞனான வசந்துக்கு வெளிநாட்டு வேலை என்பது நெடுநாளைய கனவு. அவன் ஆசை ஒருநாள் நிறைவேறத்தான் செய்தது. அரபு நாடொன்றின் எண்ணெய் கிணற்றில் வேலை கிடைத்தது. ஆனால் பாவம், அவனால் அப்பணியில் சேர முடியவில்லை. கிட்டப்பார்வை குறை அவன் வேலைக்கு உலை வைத்துவிட்டது. அவனுக்கு இருந்தது பவர் 6.0 சிலிண்டரிகல் பவர். இந்தளவு கண்ணாடி பவர் உள்ளவர்களை எண்ணெய் கிணற்றில் வேலை செய்ய அனுமதிப்பதில்லை. அவரின் பிரச்னைக்குத் தீர்வுதான் என்ன?

"அவர் கவலைப்படவே தேவையில்லை. இன்றைக்கு அதிநவீன மருத்துவ வசதிகள் நம்மிடையே உள்ளன. சையாப்டிக் 100 (Z100) எனப்படும் உலகின் லேட்டஸ்ட் அறுவை சிகிச்சை மூலம் அவருக்குக் கண்ணாடி இல்லாமல் ஆக்கலாம். கிட்டப்பார்வை, தூரப்பார்வை குறைகளுக்கு இன்றைக்கு வரப்பிரசாதமாக இச்சிகிச்சை முறை அமைந்துள்ளது" என்கிறார் கண் மருத்துவ நிபுணரும், சென்னை அண்ணாநகர் உமா கண் மருத்துவமனையின் இயக்குநருமான டாக்டர் அருள்மொழிவர்மன்.

'சையாப்டிக் 100 சிகிச்சை பற்றி விளக்கிச் சொல்லுங்களேன்...' என்றோம்.

"சையாப்டிக் 100 என்பது அதி நவீன லேசர் அறுவை சிகிச்சை. இச்சிகிச்சையின்போது லேசர் கதிர், கண்ணின் சிறு அசைவையும் கண்டறிந்து துல்லியமாகக் கருவிழியின் மீது செலுத்தப்படுகிறது. கண் அசைவுகளினால் சிறு தவறுகூட நிகழாதவாறு, சிகிச்சை பெறுபவரின் கருவிழிப் படலத்தின் தனித்தன்மையைக் கண்டறிந்து, இந்த Z100 அறுவை நிகழ்த்தப்படுகிறது. இந்தத் தொழில்நுட்பம், இராணுவத்தில் எதிராளி விடும் ஏவுகணையை, ராடார் மூலம் டிராக் செய்யும் தொழில்நுட்பம். இது உலகிலேயே முதல் முறையாக Z100 கருவியில் தான் செயல்படுத்தப்பட்டுள்ளது. இக்கருவி பாதுகாப்பு, சரியான கணிப்பு, துல்லியம் மூன்றையும் சாத்தியமாக்குகிறது" என்றார்.

சையாப்டிக் Z100 சிகிச்சை முறையில் பார்வைக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய இயலாதவர்களுக்கு மாற்று சிகிச்சை என்ன?

"ஏ.பி. லேசிக் Amadeus-II System என்றொரு சிகிச்சை முறை இருக்கிறது. இதன் மூலம் சரிப்படுத்தலாம். இதுவும் சிலருக்கு சரிப்பட்டு வராத பட்சத்தில் (-20க்கு மேல் பவர் உள்ளவர்களுக்கு) அடுத்த சிகிச்சை

முறையான Verisyse அல்லது STAAR ஐ.ஓ.எல். போன்ற சிகிச்சை முறைகள் உள்ளன. எனவே கண்ணாடி அணிந்தவர்கள் அதனைக் கழற்றி எறிய வேண்டுமென்றால், கழற்றி எறியலாம். அந்தளவுக்கு மிகச் சுலபமான ஆபரேஷன்கள் நடைமுறைக்கு வந்துவிட்டன."

இந்த அதிநவீன சிகிச்சைகளால் என்னென்ன நன்மை?

"நிறையவே இருக்கின்றன. பார்வையின் தரத்தை உயர்த்தி கண்ணாடியைத் தேவையற்றதாக்கலாம். சிகிச்சை முடிந்த மறுநாளே அன்றாடப் பணிகளைத் துவக்கலாம். பின்விளைவுகள் அற்றவை. நிரந்தரத் தீர்வு தருபவை."



டுதலை!

கிட்டப் பார்வை, தூரப்பார்வைக்கு Z100 சிகிச்சை போல காட்ராக்ட் (கண்புரை) பிரச்னைக்கும் எளிதில் தீர்வு தரக்கூடிய லேட்டஸ்ட் சிகிச்சை உண்டா?

"முன்பு காட்ராக்ட் சிகிச்சையின் போது இன்ட்ரா ஆக்யுலர் லென்ஸ் வைத்துத் தைக்கப்பட்டிருந்தது. இதனால் கண் உறுத்தல், நீர் வடிதல் எல்லாம் போக 2 - 3 மாதங்கள் ஆகிவிடும். 2 மாதங்கள் வேலைக்குச் செல்ல முடியாது. கண்ணாடி அணிய வேண்டியிருக்கும். ஆனால் தடிமனாக இருக்காது. இப்போது ஃபேகோஎமல்சிஃபிகேஷன் என்னும் சிகிச்சை முறை வந்த பிறகு ஆபரேஷன் முடிந்து வேலைக்குச் செல்ல அதிகபட்சம் 48 மணி நேரம் போதும். கண்ணாடி அணியத் தேவையிருக்காது. ஊசியில்லை, தையல் இல்லை, கட்டு இல்லை. ஆனால், படிக்க மட்டும் கண்ணாடி அணிய வேண்டியிருக்கும். இப்போது இதிலும் முன்னேறி, மல்ட்டிஃபோகல் லென்ஸ் வைத்து விடுகிறோம். இதனால் எதற்குமே கண்ணாடி தேவையில்லை."

க்ளக்கோமாவுக்கும் (கண் அழுத்த நோய்) நவீன சிகிச்சை உண்டா?

"ஏன் இல்லாமல்? தினமும் சொட்டு மருந்து போட்டுக்கொண்டு 'க்ளக்கோமா' நோயைத் தடுப்பதைவிட, உடனடியாகப் பலன் தரும் லேசர் சிகிச்சையான 'செலக்டிவ் லேசர் டிரேபிகுலோப்ளாஸ்ட்டி' மிகவும் நவீனமானது. பெயர் முழு நீளத்துக்கு பயமுறுத்தினாலும் இந்த சிகிச்சைக்கு ஐந்து நிமிடங்கள் போதும். கண் திரவம் கசிந்து வெளியேறும் இடத்தில் உள்ள அடைப்பை, இந்த நவீன லேசர் சிகிச்சையால் ஐந்து நிமிடத்திலேயே தடுத்துவிட முடியும். இந்த சிகிச்சையால் தினமும் பிறர் உதவியோடு கண்களில் சொட்டு மருந்து போட்டுக்கொள்ளும் தேவை இல்லை."

- இலாகுபாரதி

டாக்டர் அருள்மொழிவர்மன்







பள்ளியிலிருந்து வீட்டிற்கு வந்த சரளா, தன் வீட்டு முன் நின்ற கூட்டத்தைப் பார்த்துத் திகைத்துவிட்டாள். 'என்ன ஆச்சு! கிழம் மண்டையைப் போட்டுவிட்டதா, என்ன?' அவள் கிழம் என்று நினைத்தது அவள் மாமியார் மங்களத்தைதான்.

வீட்டிற்குள் நுழைந்தாள். சோபாவில் இரண்டு பேர் அமர்ந்து இருந்தனர். அவர்கள் ஹிந்திப் பட டைரக்டர்களாம்! அவளது வீட்டின் முன் ஒரு ஷூட்டிங் எடுக்கப்போகிறார்களாம். சரளா ஹிந்தி டீச்சர் என்பதால் அவளிடம் பேச வந்திருக்கிறார்களாம்!

வந்தவர் "மேடம் எங்களுக்குத் தமிழ் வராது. உங்களுடன் ஹிந்தியில் பேசுகிறேன். நாளை பிரபல ஹீரோயின் அனுஷா வருகிறார். அவளை வில்லன் ராஜேஷ் தொந்தரவு செய்வது போன்ற காட்சி, உங்கள் வீட்டிலிருந்து சாலை வரை எடுக்க வேண்டும்" என்றார்.

சரளாவிற்கு ஒரே பெருமை. பிரபல ஹீரோயின் அனுஷா நம் வீட்டிற்கு வரப் போகிறாளா? 'அடடா... என்ன அதிர்ஷ்டம்!' என்று நினைத்தாள். டைரக்டர் மேலும் "மேடம் நீங்கள், உங்கள் கணவர், குழந்தைகள்கூட இக்காட்சியில் வருவீர்கள். சரி, நாளை காலை எட்டு மணி அளவில் நாங்கள் வருகிறோம்" என்றார்.

மறுநாள் காலை விடிந்ததும் வீட்டில் ஒரே அமர்க்களம்தான். முதலில் ஸ்கூலுக்கு லீவு போட்டாள் சரளா. கூடவே குழந்தைகளையும் கணவனையும் போட வைத்தாள். பக்கத்தில் உள்ள ப்யூட்டி பார்லருக்குப் போய் ரூ.1000 செலவழித்து முகத்தை, முடியை அழகு படுத்தினாள். கணவனை நச்சரித்து தலைக்குச் சாயம் பூசச் சொன்னாள். வேலைக்காரியை விரட்டி வீட்டைச் சுத்தம் செய்தாள்.

'எல்லாம் சரிதான். இந்த மாமியார் கிழத்தை என்ன செய்வது? பேசாமல் எதிர்வீட்டிற்கு அனுப்பிவிடலாம். அங்கு ஒரு பாட்டி இருக்கிறார். இருவரும் பேசிக் கொண்டு இருக்கட்டும்' என்று நினைத்தாள். அதன்படி பாட்டிக்கு சீக்கிரமாகவே சாப்பாடு போட்டு அனுப்பி வைத்தாள்.

காலை ஒன்பது மணிக்கு எல்லோரும் ரெடி. ஆனால் சினிமாக்காரர்கள் வரவே இல்லை. மதியம் இரண்டு மணிக்கு மொத்த யூனிட்டும் வந்தது. அனுஷாவைப் பார்க்க தெருக்காரர்கள் கூட்டம் மொய்த்தது.

சரளாவிற்கு என்ன வேலை தெரியுமா? துவைத்த புடைவையைக் கையால் பிழிந்தவாறு அதிர்ச்சியாகப் பார்க்க வேண்டும். கணவன், கையில் உள்ள பேப்பரைத் தூக்கியெறிந்துவிட்டு ஓடி வர வேண்டும். இருவரும் இருபது டேக்குகள் வரை ரிகர்சல் பார்த்தார்கள். துணியைப் பிழிந்து பிழிந்து சரளாவுக்குக் கைவலி வந்துவிட்டது. அவள் கணவனுக்கோ கால்வலி உயிர் போயிற்று. ஒருவழியாக முடிந்து அனுஷா சாலையில் ஓட, பின்னால் வில்லன் துரத்த அது ஒரு முப்பது தடவை நடந்தது.

எல்லா கூத்துகளும் முடிந்து அவர்கள் கிளம்பிப் போக இரவு மணி ஒன்று ஆகிவிட்டது. பாட்டி எதிர்வீட்டிலேயே தங்கிவிட்டார். மறுநாள் காலைதான் வந்தார். எல்லாம் முடிந்து மூன்று மாதங்கள் கழித்து அந்தப் படம் ரிலீஸானது. முதல் காட்சியில் அதிக பணம் கொடுத்து டிக்கெட் வாங்கி சரளா குடும்பத்தினர் எல்லோரும் இருந்தனர்.

இடைவேளை வரை எந்தக் காட்சியும் வரவில்லை. எல்லோருக்கும் ஏமாற்றம். இடைவேளைக்குப் பிறகு இவர்கள் வீட்டில் எடுத்த காட்சி வந்தது. 'அட... நம்ம வீடு, நம்ம ரோடு' என்று குழந்தைகள் ஆர்ப்பரித்தார்கள்.


அனுஷா ஓட ஆரம்பித்தாள். வில்லன் துரத்துகிறான். 'அட, அதிர்ச்சியாகப் பார்ப்பவர்கள் யார்? நம் வீட்டுப் பாட்டிபோல இருக்கே? கூட அவர்

தோழியான எதிர்வீட்டுப் பாட்டி வேறு...' இருவர் முகங்களும் க்ளோஸ் அப்பில் இரண்டு மூன்று முறை வந்தன. சரளாவும், அவள் கணவனும் கடைசி வரை வரவேயில்லை.

'கதாநாயகி ஓடுவதைப் பார்த்து அதிர்ச்சி அடைய வேண்டும் என்று டைரக்டர் கூறினாரே, அந்த அதிர்ச்சி சரியாக வரவில்லையோ? ஆனால் எதிர்பாராதவிதமாக பாட்டி பார்த்ததில் உண்மையான ரியாக்ஷன் கொடுத்துவிட்டாளோ?'

பாட்டியைப் பார்த்த சரளா முகத்தில் ரிகர்சல் இல்லாத அதிர்ச்சி, ஏமாற்றம், எரிச்சல் என்று பலவித உணர்ச்சிகள்! ஒரு வேளை டைரக்டர் இப்போது பார்த்தால் க்ளோஸ்-அப் ஷாட் வைப்பாரோ, என்னவோ?

ஒரு நாள் கூத்து!



அனுராதா சுந்தரம்



நம் வாசகர் ஒருவர் கழிவுநீர்த் தொட்டி பற்றி ஒன்றும் எழுதவே இல்லையே என்று குறைபட்டுக் கொண்டார். அதனால் இந்த வாரம் அதைப் பற்றி முதலில் சொல்லிவிடுகிறேன். கழிவுநீர்த் தொட்டி தென்கிழக்கு / தென்மேற்கு / வடகிழக்குப் பகுதியில் அமைக்கப்படவே கூடாது. தொட்டியின் நீளம் கிழக்கு / மேற்காகவும், அகலம் வடக்கு / தெற்காகவும் அமைவது நல்லது. தொட்டியை இரு பாகங்களாகப் பிரிக்கும்பொழுது கிழக்கே நீரும், மேற்கே கழிவும் தேங்கும்படி அமைப்பது நல்லது.

அடுத்து முக்கியமானது ஜலதாரை. இதன் வழியாகச் செல்லும் நீரானது வடக்கு அல்லது தெற்கு நோக்கித்தான் செல்ல வேண்டும். கண்டிப்பாக தென் மேற்கு அல்லது தென்கிழக்கு நோக்கி தண்ணீர் வெளியேறவே கூடாது. இதில் நாம் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டியது பக்கத்து வீட்டுக் கழிவுநீர் நம் வீட்டுப் பக்கம் வராமல் பார்த்துக்கொள்வது. வாஸ்துவில் இதைவிட பெரிய தோஷமில்லை என்றே சொல்லலாம்.

அடுத்து பால்கனி. போர்டிகோவின் மேல்புறத்தை பால்கனி என்று சொல்வார்கள். இது வடக்கு அல்லது கிழக்குத் திசையில் அமைவது அதிர்ஷ்டத்தைத் தரும்.

சரி... வாஸ்துவைப் பற்றிய அனைத்துத் தகவல்களையும் சொல்லியாயிற்று. பொதுவாக சில கருத்துகளைத் தெரிவித்து, இந்தத் தொடரை நிறைவு செய்வோமா?

நிலத்தில் வீடு கட்டுவதற்கு முன்பு நீர் மற்றும் நெருப்பு இருக்க வேண்டிய இடத்தைச் சரியாக அமைத்துவிட்டாலே மற்றவை அதிக அளவில் தோஷத்தைத்

சீன வாஸ்து தெரியுமா?

காஞ்சி கிருஷ்ணா

தராது. அதுபோல வீட்டின் தலைவாசல் என்கிற நிலைவாசலை முறைப்படி அமைத்துவிட்டாலே, மற்ற வாசல் களின் தோஷம் பெரிய அளவில் பாதிப்புகளை ஏற்படுத்தாது.

வீட்டை நாம் பளிங்கில் கட்டினாலும் சரி... பாறையில் கட்டினாலும் சரி... சேற்றில் கட்டினாலும் சரி... வாஸ்து என்பது எல்லாவற்றுக்கும் ஒன்றுதான். ஆகவே, நாம் கட்டும் வீட்டை வாஸ்து சாஸ்திரப்படி அமைத்துக் கொண்டோமானால் அது சகல சந்தோஷங்களையும் வாரி வழங்கும்!

(முற்றும்)

தொகுப்பு : **ஆர்.முத்துக்குமார்**



வளம் தரும் வாஸ்து – 14



கேளுங்கள்...

சீன வாஸ்து என்றால் என்ன? அதற்கும் நம்மூர் வாஸ்துவுக்கும் தொடர்பு உண்டா?

- வைத்தீஸ்வரி, சேலம்

நீங்கள் கேட்கும்போதே நம்மூர் வாஸ்து என்று சொல்லிவிட்டீர்கள். அதுதான் சரியும்கூட. சீன வாஸ்து என்பது சீன நாட்டில் பின்பற்றப்படும் கட்டட நடைமுறை. அது அந்த நாட்டுக்கு மட்டுமே பொருந்தும்; நமக்குப் பொருந்தாது. ஆனாலும்கூட, சிலர் சீன வாஸ்து என்று சொல்லி, பொம்மைகள், பிரமிடுகளைப் பயன் படுத்துகிறார்கள். ஆனால், அதனால் பலனேதும் நமக்குக் கிடைக்க வாய்ப் பில்லை.

எங்கள் வீட்டில் பழைய காலத்து லாக்கர் ஒன்று பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. அதை மீண்டும் பயன் படுத்தலாமா?

- மாலதி, மேக்கிரிமங்கலம்

பயன்படுத்துவதில் தவறே இல்லை. ஆனால் அதற்கு முன்பு அதை நன்றா கச் சுத்தம் செய்து, துரு இருந்தால் அதையும் நீக்கிவிட்டு, நல்ல நாள் பார்த்துப் பயன்படுத்தலாம். அந்த லாக் கரை குபேர மூலையில், சிறியதாக மேடை ஒன்றை அமைத்துப் பயன் படுத்த ஆரம்பிக்கலாம்.

எங்கள் வீட்டு நிலைப்படியில் ஆங் காங்கே வெடிப்புகள் இருக்கின்றன. இது தோஷம் என்கிறார்களே?

- கிருஷ்ணமூர்த்தி, திருவான்மியூர்

கண்டிப்பாக தோஷம்தான். இதனால் திருமணத் தடை, நிம்மதியின்மை, உடல் நலக் கோளாறு போன்றவை ஏற்பட வாய்ப்புகள் உண்டு. எனவே உடனடி யாக நல்ல நாள் பார்த்து, புதிய நிலைப் படி ஒன்றை அமைத்து விடுங்கள்.

வாஸ்துப்படி குறைபாடு உள்ள வீடு ஒன்று குறைந்த நிலைக்கு வருகிறது. அதை வாங்கி வாஸ்துப்படி மாற்றிக் கொள்ளலாமா?

- ராமநாதன், புவனகிரி

தைரியமாக வாங்கலாம். ஆனால், கண்டிப்பாக அதை வாஸ்து பிரகாரம் சரிசெய்த பிறகுதான் குடிபோக வேண்டும். வீட்டைத்தான் வாங்கிவிட்டோமே, பிறகு சரி செய்துகொண்டால் ஆச்சு என்று அலட்சியம் காட்டினால் ஆபத்து.

...சொல்கிறேன்!

இதுதான்

கல்கத்தாவிலிருந்து ஒரு திடுக்கிடும் செய்தி இன்று வந்திருக்கிறது. ஸ்ரீமான் கிஷோர் முஜும்தார் என்னும் 70 வயது பென்ஷனருக்கு ஏழு பெண்கள். அவர்களில் மூன்று பேருக்குக் கல்யாணம் ஆகிவிட்டது. மற்ற நான்கு பேருக்கும் முறையே 22, 20, 18, 16 என்று வயதாகிறது. அவர்கள் நான்கு பேரும், கல்யாணமாகாத மனத்தாங்கலால் அபினை வாங்கிக் குடித்து விட்டனர். அவர்களில் மூவர் இறந்துவிட்டனர்.

இந்தச் செய்தியை ஸ்ரீமான் பச்சாத்தாபம் படித்ததும் "த்ஸோ, த்ஸோ" என்று கூறிவிட்டு மேல் பக்கத்தைப் புரட்டினார்.

அதையே ஸ்ரீமான் கோழை மனம் படித்தபோது "ஐயோ பாவம்!" என்றார். அவர் கண்ணில் ஜலம் ததும்பிற்று.

ஸ்ரீமான் முரட்டு வைதிகம், "கலி! கலி! அத்தனை வயது வரை பெண்ணை வைத்துக் கொண்டிருந்தால்...?" என்றார்.

ஸ்ரீமான் நாஸ்திகம், "எல்லாம் மதத்தால் வரும் ஆபத்துதான்" என்று விளக்கினார்.

ஸ்ரீமான் சமூக சீர்திருத்தம், "அடுத்த பிரசங்கத்தில் இதைப்பற்றிக் கட்டாயம் பேசிவிட வேண்டும்" என்று தீர்மானித்துக் கொண்டார்.

இதைப் படித்தோ, படிக்காமலோ இலங்கை சட்டசபை அங்கத்தினர் ஒருவர், இதுபோன்ற துக்க சம்பவங்களுக்குக் காரணமான வரதக்ஷிணையை ஒழிக்க முனைந்திருக்கிறார். அவர் இலங்கை சட்டசபையில், "வரதக்ஷிணை வாங்குவதும் கொடுப்பதும் சட்ட விரோதம்; அப்படிக் கொடுக்கல் வாங்கல் செய்பவர் தண்டிக்கப்பட வேண்டும்" என்று ஒரு மசோதா கொண்டுவரப் போகிறாராம்.

மேற்கூறிய ஸ்ரீமான்கள் எல்லாரையும்விட இந்த இலங்கை நண்பர் காரியவாதி என்பதை அறிந்துகொள்கிறோம். ஆனால், இப்படிச் சட்டம் போட்டுவிட்டால் மட்டும் எதிர்பார்க்கும் நன்மை விளைந்து விடாது. ஏன் என்று கேட்டால் அதற்கு ஓர் உதாரணம் சொல்லி விளக்கலாம் :

ஸ்ரீமான் கன்னிகாதானத்திற்கு ஒரு பெண் இருக்கிறாள். ஸ்ரீமான் சம்பந்திக்கு ஒரு பிள்ளை இருக்கிறான். கன்னிகாதானத்தின் பெண்ணை சம்பந்தியின் பிள்ளைக்குக் கலியாணம் செய்து கொடுக்க வரும்போது ஸ்ரீமான் சம்பந்திக்கு வரதக்ஷிணை வாங்க ஆவலிருந்தும், சட்டம் அதற்குக் குறுக்கிடுவதாயிருந்தால் அவர் என்ன செய்கிறார்? வரதக்ஷிணை என்று ரூபாயாக வாங்காமல் 'சட்டத்தை' ஏமாற்றி, பிள்ளைக்கு வைரக் கடுக்கன், வெள்ளி சாமான், மோட்டார் கார், ஏன்... உலக யாத்திரைக்கு அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கம்பெனி டூரிஸ்ட் டிக்கெட், இதுபோன்ற எத்தனையோ வழிகளில் வசூலித்துக் கொள்ளலாமல்லவா? அப்பொழுது, ஸ்ரீமான் கன்னிகாதானத்திற்கு என்ன தோன்றும்? 'நாசமாய்ப் போச்சு! ஒரு பாடாக வரதக்ஷிணை என்று ஏதோ ரொக்கமாகக் கொடுத்து ஒழிப்பதே நலம்; இப்படி தினுசு தினுசாக கொள்ளை கொடுப்பதைவிட' எனத் தோன்றாதா?

வரதக்ஷிணை என்னும் தீமைக்கு மூலகாரணம், பெண்களுக்குச் சொத்துரிமை இல்லாமலிருப்பதுதான். அத்துடன் பெண்களைக் கலியாணமாகாமல் வைத்திருக்கக் கூடாது என்ற சாஸ்திரமும், மாப்பிள்ளை கிராக்கியும் சேர்ந்து, அந்த வழக்கத்தை மிகக் குரூரமானதாய் ஆக்குகின்றன. பெண்களுக்குப் பிதிரார்ஜித சொத்தில் சமபாகம் கொடுத்துவிட்டால், வரதக்ஷிணை



உடனே ஒழிந்துவிடும். அதனால் வேறு பல நன்மைகளும் உண்டு :-

1. வரன் தேடுவதிலும், கலியாண நிச்சயம் சம்பந்தமான பேரங்களிலும் இப்போது ஏற்படும் கால விரயமும், பண விரயமும் மிச்சமாகும். பெண்ணின் சொத்து நிலைமைக்கேற்ப வரன்கள் சுலபமாய்க் கிடைத்துவிடும்.

2. இப்போது ஸ்ரீமான் கல்யாணதானமும் ஸ்ரீமான் சம்பந்தியும் ஒருவர் பணத்தை ஒருவர் விரயம் செய்வதிலேயே கண்ணுங் கருத்துமாயிருக்கிறார்கள். அப்போது சொத்தைக் காப்பதில் இருவருக்கும் சிரத்தையிருக்கும்.

3. எவ்வளவு வரதக்ஷிணை

தேவை!

கொடுத்தாலும், இப்போது பெண்களுக்குப் புக்ககத்தில் கௌரவம் கிடையாது; சொத்துள்ள பெண்களைப் புக்ககத்தில் கௌரவமாய்த்தான் நடத்துவார்கள். வாழ்க்கையிலும் அவர்களுக்குக் கௌரவம் ஏற்படும்.

ஆகவே, வரதக்ஷிணையை ஒழிக்க விரும்புகிறவர்கள் முதலில் செய்ய வேண்டிய சட்டம் பெண்களுக்குச் சொத்துரிமை கொடுப்பது. அடுத்தபடியாக, பெண்களுக்குக் குறிப்பிட்ட வயதுக்குள் கல்யாணம் ஆகிவிட வேண்டும் என்ற மூடக்கொள்கை மாறவேண்டும்; இஷ்டப்பட்டால் அவர்கள் கல்யாணம் செய்துகொள்ளாமலே கண்யமான தொழில்கள் செய்து சுதந்திர ஜீவனம் நடத்துவதற்குப் பொது ஜன அபிப்பிராயம் இடந்தரவேண்டும்.

அத்தகைய நிலைமை ஏற்படும்போது வரதக்ஷிணைத் தீமை தானே சொல்லிக் கொள்ளாமல் போய்விடும்; அதை உபசரித்து வழி அனுப்ப வேண்டிய அவசியங்கூட இராது.

- கல்கி களஞ்சியத்திலிருந்து
வானதி பதிப்பகம்...



உலகிலே நாம் அனுபவிக்கிற ஆனந்தம் என்பது ஒரே ஒரு சொட்டுத் தேன் போன்றது என்றால் காட்டிலே இருட்டிலே போனவனின் கதை நமக்கு எதைச் சொல்கிறது என்று பார்க்க வேண்டும்.

இருட்டான காடு என்பது என்ன...? பயமுறுத்துகின்றன. மூப்புத் தன்மை கிழத்தனம் - இவனைப் பரிகாசம் பண்ணுகிறது.

இதற்கிடையே உடம்புக்கு வந்து விட்டதானால், மருத்துவரிடத்திலே ஓடு கிறோம். அவர் 'இதிலே கெட்டிக்காரர் - அதிலே கெட்டிக்காரர்' என்றெல்லாம்

குறையொன்றுமில்லை

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

அதுதான் சம்ஸார மருகாந்திரம். புலி துரத்துகிறதே - அது என்ன...? புண்ணியம் - பாவம் என்று நாம் செய்கிற வினைக்கு ஏற்ப, பாப வினையானது நம்மை உட்கார விடாமல் துரத்துகிறது.

வாழ்க்கையில் சில சந்தர்ப்பங்களிலே நாம் சொல்வது உண்டு: "இன்னும் கொஞ்சம் நேரம் அவர் அங்கே இருந் திருந்தாரானால் இந்தக் கஷ்டத்துக்கு உள்ளாகியிருக்கமாட்டாரே...!" என்று.

அப்படி கஷ்டத்துக்கு உள்ளானவரை யார் எழுந்து வரச் சொன்னார்கள் என்று கேட்டால், அவர் செய்த பாவமானது தான் அவரைத் துரத்துகிறது! உட்கார விடாமல் துரத்தியடிக்கிறது - 'போ அங்கே' என்று.

ஆகவே, நாம் செய்கிற புண்ணிய - பாவமானது புலி துரத்துகிற மாதிரி நம்மைத் துரத்துகிறது.

இதற்கு நடுவிலே, கிணற்றிலே வந்து விழுகிற செயலும் நடக்கிறது. கிணற்றி லிருந்து எழ முடியவில்லை அல்லவா! அந்தக் கிணறானது நமது வீடு - மனைவி - மக்கள் என்கிற பந்தங்கள். இவற்றிலே பற்றுகொண்டு, சாமானிய நிலையிலேயே சங்கோச ஞானத்தோடு (ஒரு சிறிய வரையறைக்குட்பட்ட அறிவோடு) நாம் இருக்கிறோம்.

கிணற்றுக்குள்ளே பாம்பு வாயைத் திறக்கிறதே, அந்தப் பாம்பு யார் என்றால், அதுதான் பசி - பிணி - மூப்பு - துன்பம் என்ற நிலைகள். வரக்கூடிய வியாதி களெல்லாம் வாயைத் திறந்து கொண்டு சொல்கிறார்கள். மருத்துவரிடத்திலே கையைக் காண்பிப்பது போன்ற செயல் தான் பாம்புக்குப் பயந்து கொண்டு மரக் கிளையை எட்டிப் பிடிப்பது. என்னதான் மருந்து தேடி வாங்கினாலும் அது எத் தனை நாளைக்கு நமக்குக் கை கொடுக் கும்? எத்தனை நாள் ஒருத்தர் இருப்பார் என்று விதித்திருக்கிறதோ அத்தனை நாள்தான் அவர் இருப்பார்! அதற்கு மேல் ஒரு க்ஷணம்கூட இருக்க முடியாது!

ஒரு குழந்தை உற்பத்தி ஆவதை நாம் பார்க்கிறோம். பிறந்தவுடனே அதைக் கொண்டாடி புண்யாவசனம் பண்ணு கிறோம். குழந்தை பிறக்கிறபோதே அத னோடு ஐந்து விஷயங்கள் பிறந்துவிடுகின் றன. இதை சாஸ்திரத்தின் கண் கொண்டு நாம் பார்க்க வேண்டும் - அந்த ஐந்தும் என்னென்ன...

ஆயு : - ஆயுள் - இந்தக் குழந்தை எத் தனை காலம் ஜீவித்திருக்கும் என்கிற கால நிர்ணயமும் உண்டாகிவிடுகிறது.

கர்மா - என்ன செயல் பண்ணி இந்த உலகத்திலே இவன் பிழைப்பு நடத்து வான் என்கிற கர்மாவும் நிர்ணயிக்கப்பட் டிருக்கிறது. அதைத் தவிர வேறொரு கர்மா பண்ணி இவன் ஜீவிக்கவே முடி யாது. ஜன்மாந்திரத்திலே செய்த புண் ணிய - பாவத்துக்கு ஏற்பத்தான் இவ னுக்குச் செயல் அமையும்.

இவ்வளவு பொருள் இவனுக்கு வாய்க் கும் என்பதும் நிர்ணயிக்கப்பட்டது.' அதற்கு மேலே ஒரு பைசா வராது.

கல்வியும் அப்படித்தான். இவ்வளவு

எட்டாம் பாகம் 28

வித்யை இவனுக்கு வாய்க்கும் என்பதும் நிர்ணயிக்கப்பட்டது.

இன்றைய தினம் இந்த இடத்திலே, இந்தக் காலத்திலே இவனுக்கு மரணம் என்பதும் நிர்ணயிக்கப்பட்டதுதான். இதையும் மாற்ற முடியாது. கர்ப்பத்துக்குள்ளே இருக்கிறபோதே நிர்ணயிக்கப்பட்ட விஷயம் இவை ஐந்தும்.

சரி, இரண்டு பெருச்சாளிகள் துருவுகின்றனவே இவன் பிடித்துக் கொண்டிருக்கிற கிளையை... அந்தப் பெருச்சாளிகள் என்ன என்று கேட்டால், ஒன்று ம்ருத்யு, மற்றொன்று காலன். க்ஷணே க்ஷணே ஆயுள் குறை



* மட்டபல்லி நரசிம்மர்

கிறது என்பதைக் காட்டிக் கொண்டேயிருக்கின்றன, இந்தப் பெருச்சாளிகள்.

இத்தனைக்கும் நடுவிலே தேனி கொட்டுகிறதே, அது என்ன? பந்து மித்ராதிகள்; உற்றார் உறவினர். பாதாதி கேசம் இவனைக் கொட்டுகிறார்கள் அவர்கள்!

இதற்கெல்லாம் இடையிலே இந்த ஸம்ஸாரத்திலே அவனுக்குக் கிடைக்கக் கூடிய ஆனந்தம் எவ்வளவு என்றால், அது ஒரு சொட்டுத் தேன் அளவுதான்! மிக அல்பமான பலன்; ஸ்திரமில்லாத - நிலையில்லாத பலன்.

ஆசையினாலே, ஆத்மாவைக் கெடுக்கக் கூடிய இந்தப் பாழுங்கிணறு சம்ஸாரத்தை விட்டுவிட்டுக் காட்டுக்குப் போய் ஹரியை தியானம் பண்ண வேண்டும் என்று குழந்தை பிரஹலாதன் சொல்லிற்று. அவனுக்காக பரமாத்மாவும் சிம்ஹ ரூபமாக ஆவிர்பவித்தான். இரண்டு ரூபம் தரித்தான். இரண்டு ரூபமும் அவரவர் குணத்தை வைத்து - மனித குணம் - மிருக குணம் (அசுர குணம்).

'எதேச்சையாகத் தோன்றிய நரசிம்மன்' என்று சுவாமி தேசிகன் அவனைச் சொல்கிறார். திடீரென்று தோன்றியவன். பகவத் இச்சையினால் தோன்றிய அவதாரம் இந்த அவதாரம். மிகவும் போக்யமான அவதாரம். பக்தன் பிரஹலாதனுக்கு ஏற்பட்ட இடுக்கண்ணைப் போக்குவதற்காக தோன்றிய அவதாரமானதனாலே மிகவும் ஏற்றமுடைய அவதாரம்.

அந்தந்த க்ஷேத்திரத்திலே பரமாத்மா இப்பொழுதும் நம் இடுக்கண் களைவதற்காக எழுந்தருளியிருக்கிறான். அதிலே மட்டபல்லி க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும்படியான எம்பெருமான், அடியேன் மீது ஆவிர்பவித்துப் பேசியிருக்கிறான். இந்தக் கலியுகத்திலே கண்கண்ட தெய்வமாக அவனுடைய வாக் வைபவத்தைக் கேட்க முடிகிறது. பல விஷயங்களை பரமாத்மா முன்பே வந்து சொல்கிறான் - அவனே வந்து சொல்கிறான்.

"நான் சொல்கிறபடி செய்யுங்கள்; க்ஷேமம் ஏற்படும்" என்கிறான்.

"மட்டபல்லி க்ஷேத்திரத்துக்கு வாருங்கள்" என்று அனைவரையும் அழைக்கிறான்.

முதலில் வரும்படியாக அழைக்கிறான் பாருங்கள்... அவ்வாறு அழைப்பவன், நாம் போனவுடனே 'இவன் எப்போது கிளம்பிப் போகப் போகிறான்?' என்று பார்ப்பதில்லை. பதினொரு நாள் நம்மை அங்கேயே இருக்கச் சொல்கிறான்.

பிராத: காலம் (விடியற் காலை) கிருஷ்ணா நதியிலே ஸ்நானம் பண்ணுங்கள். ஸ்நானம் பண்ணி, ஆலயத்திற்கு வந்து, என்னை 32 பிரதக்ஷிணம் பண்ணுங்கள்..." என்கிறான்.

'திருவனந்தபுரத்திலே இருக்கிற மாதிரி பிராகாரம் பெரிதாக இருக்குமா?' என்று ஒருத்தர் கேட்டார்.

திருவனந்தபுரத்துக்கு அடியேன் உபன்யாஸம் பண்ணுவதற்காகப் போயிருந்தபோது, பிரதக்ஷிணம் பண்ண வேண்டும் என்று ஆரம்பித்தேன்; ஒரு நாள், ஒரு பக்கமே ஒரு ஃபர்லாங் அளவு இருந்தது. விடியற்காலை உபன்யாஸம் முடிந்த

"'சட்டசபையில் 200 பேர் புது முகங்கள்'னு பத்திரிகையில் போட்டது தப்பா போச்சு!"

"ஏன்?"

"சினிமா தயாரிப்பாளர்கள் சட்டசபையை நோக்கிப் படையெடுக்க ஆரம்பிச்சுட்டாங்க!"

- வே.முருகேசன்





வாரியார் அமுதம்!

ஒளியை உண்டாக்கினால் இருள் இருக்காது. நெருப்பை மூட்டிவளர்த்தால் பனி இருக்காது. அதுபோல், கடவுள் பற்றும், கடவுள் நினைவும் அதிகம் ஏற்படுமாறு செய்தால் தீய நினைவுகள், தீய சக்திகள் தலையெடுக்க மாட்டா.

ஆசையின்றி, பயன் கருதாமல் மக்களுக்குச் சேவை செய்தால் புகழ் தானே வரும். புகழுக்கு ஆசைப்படக் கூடாது. மலரை நாடி வண்டுகள் வருவதுபோல் பற்றற்ற சேவையால் புகழ் தானே வரும்.

மனைவி உடைய இல்லத்தில் கணவன், தானே உணவைப் படைத்துக் கொள்வது நல்லது அன்று. வாய்ப்பில்லாதவர்கள் தாமே படைத்து உண்ணலாம். அன்புள்ள மனைவி படைத்து, அதனை உண்பது மகிழ்ச்சியைத் தரும்.

வுடனே பிரதக்ஷிணம் ஆரம்பித்தேன். முதல் நாள் நாலு பேர் வந்தார்கள் என்னோடு பிரதக்ஷிணம் பண்ண. இரண்டாவது நாள் ஒரு பதினைந்து பேர் வந்தார்கள். மூன்றாம் நாள் நூறு பேர் வந்தார்கள். நான்காவது நாள், உபன்யாஸம் கேட்க வந்த அத்தனை பேரும் பிரதக்ஷிணம் பண்ணினார்கள்!

மட்டபல்லியிலே அவ்வளவு பெரிய பிரதக்ஷிணம் இல்லை. சின்ன இடம். சுலபமாக முடிந்து போய்விடும். ரொம்ப தூரம் போய் நதியில் ஸ்நானம் பண்ண வேண்டுமா என்றால், அதுவும் இல்லை. ரொம்ப நெருக்கமாக இருக்கிறது ஸ்நான கட்டம்.

ஆகையினாலே, ஸ்நானம் பண்ணி விட்டு வந்து 32 பிரதக்ஷிணங்கள் பண்ணி, இந்த மங்களாஷ்டகம் இருக்கிறதே - பகவானால் கொடுக்கப்பட்ட மங்களாஷ்டகம் - அதைப் பதினொரு ஆவர்த்தி சொல்ல வேண்டும். அந்த மண்டபத்திலே நின்றுகொண்டு சொல்லலாம். குகைக்குள்ளேயும் பகவானுக்கு எதிரிலே நின்றுகொண்டு சொல்லலாம். நேராக அடியேனால் அந்தக் குகைக்குள்ளே நுழைய முடியாது. ரொம்ப சங்கோசமான (குறுகலான) இடம். அந்தச் சின்ன வழியிலே நுழைந்து, உள்ளுக்குள்ளே போனால், அந்தச் சின்ன இடத்திலே பகவான் ஆச்சர்யமாக அமர்ந்து காட்சியளிக்கிறான். அந்த வடிவழகை, அந்த தீர்க்க நாசிகையை, விசால நேத்திரமும் அந்த கபோலமும் (கன்னங்கள்) அந்த அதர பல்லவமும் (பற்கள்) ...... ரமணீயமான அந்த ரூபத்தை இன்றெல்லாம் ஸேவித்துக் கொண்டிருக்கலாம். எல்லோரையும் ஆகர்ஷிக்கும்படியான எம்பெருமான் அவன் - ஆகர்ஷண சீலன் - அந்த குகைக்குள்ளே சென்று ஸேவித்தவர்கள் அனைவருக்கும் இது தெரியும்.

இனிமேல் அங்கே போகிறவர்கள் வேளைக்கு 32 பிரதக்ஷிணம் பண்ணி - தினம் 96 பிரதக்ஷிணம் - இந்த மாதிரி பதினொரு நாள் பண்ணுகிறவர்களுக்கு,

"எல்லா கோரிக்கைகளும் நிறைவேறும்

எல்லாவிதமான இடுக்கண்களும் தொலையும் - என்னென்ன உண்டோ அது மொத்தம் பொடிபடும்.

எல்லா க்ஷேமங்களும் ஏற்படும்.

- இது சத்யம் சத்யம்" என்று பரமாத்மா பேசியிருக்கிறான்.

அந்த மாதிரி பல மகான்கள் சென்று அவனுடைய அனுக்கிரஹத்தைப் பெற்று, பரிபூரணமான ஆனந்தத்தோடு விளங்குகிறார்கள்.

(ஸ்ரீ முக்கூர் அருளிய மங்களாஷ்டகம் அடுத்த இதழில்...)

28 சினிமாவுக்குப் போகலாம் வாங்க!



37 ஆண்டுகளாகத் தமிழ்த் திரையுலகில் பின்னணி பாடிக் கொண்டிருப்பவர்; மூன்று முறை தேசிய விருதும், நான்கு முறை மாநில விருதும், ஒருமுறை ஃபிலிம்ஃபேர் விருதும், புகழ்மிக்க 'தான்சேன்' விருதும் பெற்றவர் - பத்திற்கும் மேம்பட்ட இந்திய மொழிகளில் பாடி வரும் பன்மொழிப் பாடகி, திருமதி வாணி ஜெயராம்.

- நியூயார்க் நகரத் தமிழ்ச் சங்கம் பேட்டியில்...

ஊடால வந்த உருவம்!

நான் நினைத்தது எதுவும் நடக்கவில்லை. காரணம் எம்.ஜி.ஆர். அவர்கள் அந்தக் கூட்டத்துக்கு வரவே இல்லை. கலெக்டர் கூட்டத் தலைமை ஏற்க, மந்திரிகள் முன்னிலையில் மூத்த விவசாயி 'முத்துக் கருப்பு' எனக்கு முதற்பரிசைக் கொடுக்க, நான் தேம்பித் தேம்பி அழாதகுறையாக அந்தப் பரிசை வாங்கிக்கொண்டு வந்தேன்.

ஆனால் சில ஆண்டுகள் கழித்து என் தந்தையாருக்கு 'அகவை முதிர்ந்த தமிழறிஞர்' விருதினையும் சிறப்பு ஓய்வூதியத்தையும் தமிழக அரசு அறிவித்த போது, அந்த விருதினை என் தந்தையின் சார்பாக நான் சென்று வள்ளுவர்கோட்டத்தில் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது.

சென்னையில் முதன் முதலாக நான் காலடி எடுத்து வைத்தது அப்போதுதான். எம்.ஜி.ஆர். பரிசு தரப்போகிறார் என்பதை அறிந்து நான் அதிகம் மகிழவில்லை. போன தடவைபோல ஆகிவிடக் கூடாது பாருங்கள், அதனால்தான்.

கூட்டத்திலிருந்து எழுந்து மேடைக்குச் சென்று அவரிடத்தில் பரிசு வாங்கிய போது, ஏறத்தாழ நம்ப முடியாத கனவு சீன்போல நான் அவர் கையால் அந்த விருதை வாங்கிக்கொண்டு நகர்ந்தேன்.

எம்.ஜி.ஆர். சட்டென்று என் கையைப் பிடித்து 'நீங்கள் படம் எடுத்துக் கொள்ளவில்லையா?' எனக் கேட்டு என்னை அருகில் நிறுத்திக் கைகளை அசைத்தார். பத்து போட்டோகிராபர்கள் ஓடிவந்து படம் எடுத்தார்கள்.

எம்.ஜி.ஆர். சிரித்தபடி என்னைத் தோளில் தட்டி அனுப்பினார். எங்கள் ஊர் மேடையில் நினைத்த எனது எண்ணம், சென்னையில் பலித்ததை எண்ணி எண்ணி இப்போதும் மகிழ்ச்சியடைவதுண்டு.

நமது ஜனாதிபதி அப்துல்கலாம் அவர்கள், 'கனவு காணுங்கள், கனவு காணுங்கள்' என்று இப்போது இளைய சமுதாயத்தைச் சந்திக்கும்போதெல்லாம்

சொல்கிறாரே, அதன் பொருள் இது தானோ? நல்ல உற்சாகமான எண்ணங்களே, நம் வாழ்வைச் சிகரங்களுக்கு அழைத்துச் செல்லும் படிக்கட்டுகள் என்பதில் ஐயமில்லை.

கோடைகாலத்தில் ஒருநாள் வைகையாற்றங்கரையில் மணல்மேட்டில் உட்கார்ந்துகொண்டு, காலைத் தண்ணீரில் தொங்கவிட்டபடி மசாலா கடலையை மென்று நானும் சினிமாமணியும் பேசிக்கொண்டிருந்தோம்.

"புதுமையான நாடகம் ஏதாவது ஒன்று போட வேண்டுமடா!'' என்றான் மணி.

"புதுமை என்றால்..."

''திரை உலகில் டைரக்டர் ஸ்ரீதர்போல, இந்தக்கால எஸ்.பாலசந்தர் போல''



கு.ஞானசம்பந்தன்

என்று சினிமாமணி புதுமை செய்த இயக்குநர்கள் என்று பல பேரைச் சொல்லிக்கொண்டே போக, நான் இடைமறித்து, "சரி அவர்கள் அப்படி என்ன புதுமை செய்தார்கள்?" என்று கேட்டபடி ஒரு கடலைப் பருப்பை ஆற்றுநீரில் போட, பல மீன்கள் என்னவோ, ஏதோவென்று பாய்ந்து வந்து பார்த்துச் சென்றன.

"அதாவதுடா, ஐம்பது பாட்டு, அறுபது பாட்டு என்று பாடிக்கொண்டே இருந்த சினிமா பட உலகில் ஒரு பாட்டுக்கூட இல்லாமல் பின்னணி இசையை மட்டும் வைத்துக்கொண்டு விறுவிறுப்பான ஒரு மர்மப் படத்தை இயக்கி வெற்றி கண்டவர் எஸ்.பாலசந்தர்தான். ஏவி.எம். தயாரித்த அந்தப் படத்தில், எடுத்தவுடனேயே கதாநாயகன் சிவாஜி சுட்டுக் கொல்லப்படுவார். அந்தக் கால ஜனங்களை ரசிக்கவைத்து இந்தப் படத்தை வெற்றிப் படமாக்கியவர் எஸ்.பாலசந்தர்."

"கேட்கவே ஆச்சரியமா இருக்கே,

தமிழ்ப் படங்கள்ல கதாநாயகன் கடைசியில செத்தாலே படம் ஓடா துன்னு சொல்லுவாங்களே!" என்றேன் நான். "ஆமடா, இப்பக்கூட சிவாஜி நடிச்ச 'வசந்த மாளிகை' படத்தில கடைசியில அவரு செத்துப் போற மாதிரி எடுத்துப் படத்தை வெளியிட்டாங்க. படம் முதல் வாரம் சரியாப் போகலை. உடனே படப்பெட்டியத் திருப்பி வாங்கி, நடிகர் சகஸ்ரநாமை டாக்டராப் போட்டு 'சரியான நேரத்தில கொண்டு வந்திங்க, இல்லைன்னா இவரைக் காப்பாத்தியிருக்க முடியாது'ன்னு வசனம் பேச வச்சு, படத்தில் சிவாஜி பிழைச்சு, வாணிஸ்ரீயோட பழைய டூயட்டைப் பாட, மக்கள் மகிழ்ச்சியடைய, அந்தப் படம் 250 நாளுக்கு மேல ஓடி வெள்ளி விழாவைத் தாண்டியிருச்சு" என்றான் மணி சற்று கேலியாக.

அன்று பௌர்ணமியானதால் முழு நிலவு ஆகாயத்தில் மெல்ல எழுந்துவர, வைகையாற்று மணலில் இளைஞர்கள் ஆரவாரத்தோடு கபடி விளையாட்டைத் தொடங்கி விளையாட ஆரம்பித்தார்கள். அப்போது ஆற்று மணலில் சக்கரம் பதியச் சென்றுகொண்டிருந்த மாட்டு வண்டி ஒன்றிலிருந்து 'சடா'ரென்று குதித்த உருவம் ஒன்று எங்களை நோக்கி வரத் தொடங்கியது. அப்படி ஊடால வந்த உருவம் முத்துராக்குதான்.

"தம்பிகளா இங்கதான் இருக்கிங்களா! மன்னாடி மங்கலத்தில் நாளைக் கழிச்சு 'பவளக்கொடி' நாடகம். நம்ப புதுக்கோட்டை புவனாதான் வள்ளி, சிங்கம்புணரி தங்கப்பன் பபூன்காமிக்.." என்றபடி தலையில் கட்டியிருந்த முண்டாசை அவிழ்த்து ஆற்று மணலில் உட்கார்ந்தார் முத்துராக்கு. "என்னமோ, கவனமாப் பேசிக்கிட்டு இருந்திங்க, நான் ஊடால வந்துடேன்." "ஒண்ணுமில்ல முத்துராக்கு, நம்ப எஸ்.பாலசந்தர், ஸ்ரீதர் படங்களைப் பத்திப் பேசிக்கிட்டு இருந்தோம். 'பொம்மை'யின்னு ஒரு படம் எடுத்தாரே ஞாபகம் இருக்கா?" என்றான் மணி.

"நல்லா ஞாபகம் இருக்கு தம்பி, அந்தப் படத்தில்தான் எனக்குத் தெரிஞ்சு, இன்னார் இன்னார் நடிச்சாங்கன்னு பேர் போடுறதுக்குப் பதிலாப் படம் முடிஞ்ச பிறகு டைரக்டரே வந்து எல்லாரையும் அறிமுகப்படுத்துவாரு. அதிலதான் பின்னணிப் பாடகிகள் முகம், கேமரா எடுத்தவர் முகம், மேக்கப் போட்டவர் யாருன்னு காட்டி, அவங்களுக்கு ஒரு மரியாதை பண்ணினாங்க" என்றார் முத்துராக்கு.

"அது மட்டுமில்ல, படம் காலையில தொடங்கி சாயங்காலத்தில முடிஞ்சு போற மாதிரி ஆச்சரியமா எடுத்திருப்பாங்க. 'சில ஆண்டுகளுக்குப் பின்', '20 ஆண்டுகள் கழித்து' அப்படியெல்லாம் போடாம எடுத்த படம் அது" என்று மணி சொன்னபோது, இந்தப் படமெல்லாம் இவர்கள் எங்கே பார்க்கிறார்கள், எப்படி இவர்களுக்கு மட்டும் இத்தனை செய்திகள் தெரிகிறது? என்று நான் யோசித்துக் கொண்டிருந்தேன்.

(ரீல் சுற்றும்)

படம் : புதூர் சரவணன்

"நான் டாக்டர். கதை எழுதிட்டு வந்து. அதுவும் அரைகுறையா எழுதிட்டு வந்து என்கிட்டே ஏன் காட்டறீங்க?"

"கதையை முடிக்கறதுல நீங்க கில்லாடின்னு சொன்னாங்க, அதான் டாக்டர்."

- எஸ்.முகம்மது யூசுப்



வட்டமேஜை

✉ கீதா சங்கரின் டிப்ஸ், வேலை தேடும் இளைஞர்களுக்கு உற்சாக டானிக்!
திருவாரூர், த. பரதன்

✉ ராஜீவ்காந்தியைக் கொன்றதை மன்னித்து புலிகளுக்கு உதவுமாறு பாலசிங்கம் இந்தியாவை வேண்டிக் கொண்டதைக் காட்டும் கார்ட்டூன் அருமை!
கோ.புதூர், இரா. சக்ரபாணி

✉ 'எண்ணெய்க்காக என்னைத் தருவேன்' எனக் கூறும் பாவனா, சரியான சாப்பாட்டு ராமிதான்!
மதுரை - 16, ஆர்.லட்சுமி

✉ இலாபத்தில் இயங்கும் நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தின் பங்குகளை விற்பதென்ற மத்திய அரசின் முடிவு, தமிழகத்துக்கு இழைக்கப்பட்ட துரோகம்! இந்தப் பிரச்னையை அரசியல் ரீதியில் பார்க்காமல் மக்கள் நலனாய் பார்த்த தலையங்கம்... நன்று.
திருவண்ணாமலை, என். சண்முகம்

✉ 'காதல் சதுரங்கம்' கதைக் களமும் நடையும் முதல் வாரமே மிகவும் ஈர்த்தது.
குடந்தை, எல். சத்யா

✉ பட்டுக்கோட்டை பிரபாகரின் 'உங்கள் ஜூலியர்' சிறுகதையல்ல... போதிமரம்!
திருவாரூர் - 1, எஸ். பாலசந்தர்

✉ இளங்கோவன் பேச்சு எடுபடாது என வெற்றிகொண்டான் சொன்னது நியாயமான பேச்சு.
திருவண்ணாமலை, ஹெரியன்

போதிமரம்!

✉ கந்தர் கே.விஜயன் தற்சமயம் தானும் செல்வி தொடரின் ரசிகன் எனக் கூறுவது விந்தையிலும் விந்தை.
நாகர்கோவில், ஆர். குமார சுப்பிரமணியன்


✉ 3வது அணி வோட்டைப் பிரிப்பதற்கு மட்டுமல்ல, நாட்டையும் பிரிப்பதற்குத்தான்.
அக்ரஹாரம், ஆர்.எம்.இமலை



ஸ்வீட் போஸ்ட்!

✉ 'ஆட்சியாளர்களின் ஆரவாரங்களுக்கிடையே சமூகநல ஆர்வலர்களின் அலறல், சத்தமில்லாமல் ஓர் ஓரத்தில் தள்ளத் தான்படுகிறது' என்று சாத்வீகத்துடன் ஆரம்பித்த தலையங்கம், ஆதங்கத்துடன் முடிக்கப்பட்டிருப்பது சபாஷ்!
மதுரை. கோதை

✉ 'எந்தவிதத் தவறான நோக்கத்துடனும் அமைச்சர் வேலு கமெண்ட் அடிக்கவில்லை' என்று பெண் அதிகாரியே கூறிவிட்ட பிறகு, நீர் ஏன் ஊதிப் பெரிதாக்குகிறீர்!
வேலாயுதம்பாளையம். எம்.சம்பத்



நடந்தவையெல்லாம் ஒரு கனவுபோல தோன்றியது சண்முகத்துக்கு. கவிதா கோபித்துக் கொண்டு பெங்களூர் சென்றதை இன்னமும்கூட அவரால் நம்ப முடியவில்லை. மகன், பேரக் குழந்தைகளுடன் வர நினைத்த அஷ்டலக்ஷ்மி கோயிலுக்குத் தான் மட்டும் தனியாய் வந்திருந்தார். எல்லா லக்ஷ்மிகளின் அருளை வேண்டிய பிறகும்கூட அவரால் நிம்மதியாய் இருக்க முடியவில்லை. கோயிலின் முதல் மாடியில் நின்றுகொண்டு கடலையே வெறித்துப் பார்த்தார். கடலிரைச்

காதல் சதுரங்கம்!

சலையும் மீறி அவரின் காதில் ஆக்ரோஷமாக மோதியது முந்தைய நாளில் கவிதா நடத்தின ஆர்ப்பாட்டம்.

"நான் சொன்னப்ப வருத்தப்பட்டியே கவிதா- இப்ப நேர்லயே பார்த்தல்ல உங்கப்பாவோட லட்சணத்த" - வீட்டுக்குள் நுழையும்போதே மாமியார் சரஸ்வதி கவிதாவுக்கு எடுத்துக் கொடுக்க, இவளிடம் பெருத்த அமைதி.



குழந்தைகளின் கைகளை அழுத்தமாகப் பிடித்தபடி கோபமாக பெட்ரூம் சென்று கதவைச் சாத்திக் கொண்டாள். சண்முகம் பதறிவிட்டார். ஓடிச்சென்று பலங்கொண்ட மட்டும் கதவைத் தட்டினார். சரஸ்வதி ஒரு பக்கம் "கவிதா, கவிதா" என்று புலம்ப ஆரம்பித்துவிட்டாள். வேலைக்காரி வசந்தா கையிலிருந்ததை போட்டுவிட்டு "ஐயையோ" என்று கூப்பாடு போட, மல்லிகாவின் அம்மாவுக்கு என்ன நடக்கிறதென்றே புரியாமல் மலங்க மலங்க விழித்துக் கொண்டிருந்தார். எல்லோருடைய பொறுமையையும் சோதித்துவிட்டு, பத்து நிமிடங்கள் கழித்து கதவைத் திறந்த கவிதா, புடைவை மாற்றியிருந்தாள். கையில் சூட்கேஸ். நேரே சண்முகத்திடம் சென்று, "தப்பு செஞ்சது நீங்க. நான் ஏன் தவறான முடிவெடுக்கணும்? அவமானத்த தாங்க முடியலைன்னா நீங்க வேணா ட்ரை பண்ணிப் பாருங்க" என்று ஆவேசமாகச் சொல்லிவிட்டு "வாங்க அத்தே புறப்படலாம்" என்று சரஸ்வதியைப் பார்த்தாள். கவிதாவின் பேச்சு சண்முகத்தை அதிர்ச்சியில் உறைய வைத்துவிட்டது. 'தன்னையா... தன்னையா மகள் சாகச் சொல்லிவிட்டாள்!' அப்போதே அவருக்கு உயிர் போய்விட்டது. அப்படியே நின்றுவிட்டார். சரஸ்வதி, கவிதா, குழந்தைகள் எல்லோரும் கிளம்பிவிட்டார்கள். வசந்தாதான் ஓடிப்போய் குறுக்கே நின்றாள்.

"அம்மா போகாதீங்கம்மா, அப்பா ஏதோ தெரியாத்தனமா செஞ்சுட்டாரு. அவங்கள அனுப்பிச்சிடலாம். நீங்க இருங்கம்மா."

"வசந்தா வழிய மறிக்காதே... உனக்கு எம்மேல இருக்குற அக்கறைகூட அவருக்கு இல்ல. ஜடமாயிட்ட மனுஷன்கிட்ட அன்பை எதிர்பார்க்கறது என் தப்புதான்!" சூடாக வந்தன வார்த்தைகள் கவிதாவிடமிருந்து. குழந்தைகள் "தாத்தா, தாத்தா" என அலற, ரெண்டு போட்டாள்.

"நான் அப்பாவே இல்லன்றேன். உங்களுக்கென்ன தாத்தா?"

குழந்தைகள் ஒரு பக்கம் அழ, கவிதா இன்னொரு பக்கம் அழ, வசந்தா 'ஓ'வென்று கத்த, சண்முகமும் கலங்கிவிட்டார். வைத்த கண் வாங்காமல் நிலைகுத்தி நின்று கொண்டிருந்தது மல்லிகாவின் அம்மா மட்டும்தான்.

கவிதா போன பிறகு அடுத்து அந்த அம்மாவின் இன்னிங்ஸ்

நான்கு வாரத் தொடர் 3

மு.மாறன்

ஆரம்பமானது.

"என்னை மன்னிச்சுடுங்க. நான்தான் அவசரப்பட்டு என் பொண்ண கூட்டிட்டு வந்துட்டேன். இது மாதிரியெல்லாம் நடக்கும்னு நான் கனவிலயும் நெனைக்கல. பொண்ணையும் அப்பாவையும் பிரிச்ச பாவம் எங்களுக்கெதுக்கு? நாங்க கிளம்பறோம்'' என்று கையெடுத்துக் கும்பிட்டாள். கவிதாவை அனுப்பிவிட்டு உள்ளே வந்த வசந்தா இதைக் கேட்டு,

''ஆமாண்டியம்மா, கவிதாம்மா கோவிச்சுக்கிட்டு கிளம்பும்போது இதை சொல்லியிருந்தின்னா நம்பியிருக்கலாம்; அந்தம்மாவ தடுத்திருக்கலாம். அவங்க போனப்புறம் எங்க தூரத்திடப் போறாங்கன்னு இப்ப ஐயாகிட்ட நாடக மாடுறியோ?" என்றாள் வெடுக்கென்று.

சண்முகம் ''வசந்தா, அதிகப்பிரசங்கித்தனமா நடந்துக்காதே...'' என்று கத்தினார்.

''போங்கய்யா, பெத்த பொண்ணையே முக்கியமில்லன்னு அனுப்பிச்சிட்டீங்க... என்னையவா அந்தப் பொம்பளைக்காக திட்டாம இருப்பீங்க... நான் இனிமே வேலைக்கு வரலிங்கய்யா... நல்லவங்க இருந்த வீட்ல இன்னிக்கு வேறெதோ இருக்கு...'' என்று முகத்திலடித்தாற்போலச் சொல்லிவிட்டு சென்றுவிட்டாள்.

"பார்த்தீங்களா, ஒரு வேலைக்காரி கூட உங்கள எடுத்தெறிஞ்சு பேசிட்டுப் போறா... எல்லாம் எங்களாலதானே.. உங்க பொண்ணுகிட்ட நான் பேசாதது. அவ கோபம் இன்னும் அதிகமாகக் கூடாதுன்னுதான். மத்தபடி வசந்தா சொல்றபடி நான் நடிக்கல. நாங்க கிளம்பறோம்'' என்ற மல்லிகாவின் அம்மா, உள்ளே சென்று மல்லிகாவை எழுப்பிக் கூட்டிக்கொண்டு வந்தாள். என்ன நடந்தது, நடக்கிறது, நடக்கப் போகிறது என்கிற எந்தப் பிரக்ஞையுமின்றி ஒரு பொம்மை மாதிரி வந்த மல்லிகாவைப் பார்த்ததும் சண்முகத்துக்கு நெஞ்சு தழுதழுத்தது.

"என்னை ஏம்மா யாரும் புரிஞ்சுக்க மாட்டேங்கறீங்க...'' என்றவரின் கண்களில் சட்டென்று கண்ணீர் துளிர்த்துவிட்டது. கர்ச்சீப் எடுத்து துடைத்துக் கொண்டு பேசினார்.

"எம் பொண்ணுதான் என்னை தப்பா புரிஞ்சுகட்டுப் போயிட்டா. சரியா புரிஞ்சுக்கிட்ட நீங்களுமா அதையே செய்யணும்?''

"மேலும் மேலும் உங்களுக்குக் கஷ்டம் வர்றதைப் பார்த்துமா இங்க இருக்கச் சொல்றீங்க?''

''கஷ்டத்தை முதல் முறை உணர்றப்பதான் வலி அதிகமா இருந்துச்சு. இப்ப மரத்துப் போச்சும்மா... என் வரைக்கும் நான் உண்மையாத்தான் நடந்துக்கறேன். அது உங்களுக்கும் தெரியும். மத்தவங்கள நம்பியா மல்லிகாவ என்கூட அனுப்பினீங்க... என்னை நம்பித்தானே. நான் பொறுப்பா பார்த்துக்குறேனா இல்லியா... எனக்கு என்ன கஷ்டம் வந்தாலும் அவள கவனிச்சுக்கிறதுல குறை வச்சேனா?''

''அதெல்லாம் சரிதான். ஆனா நடத்தைமேல சந்தேகம் வரும்போது எப்படி சும்மா இருக்க முடியும்?''

''மடியில கனம் இருந்தாத்தானே

''நம்ம ஏட்டு ரொம்ப தங்கமானவருன்னு எப்படிச் சொல்றே?''

''பின்னே, நேத்து திருடப் போன இடத்துல மாட்டிக்கிட்டேன். அவர்தான் வந்து 'இவன் அப்படிப்பட்டவன் இல்லை'ன்னு சொல்லி என்னைக் காப்பாத்தினாரு.''

- ஆர். தங்கராஜு



பயப்படணும். இப்ப என் பொண்ணு சொல்லி நான் மல்லிகாவ அனுப்பினா, அவ என் மேல கற்பிச்ச களங்கம் உண்மையாயிடாதா? நீங்க இப்ப புறப்பட்டுப் போனாலும் அதே கதைதான்."

அந்த அம்மாள் அமைதியாகி விட்டாள்.

"எங்கள என்னதான் பண்ணச் சொல்றீங்க?"

"கவிதாவுக்கு எப்படிப் புரிய வைக்கிறதுன்னு நான் பார்த்துக்குறேன். நீங்க எப்பவும்போல இருங்கன்னுதான் சொல்றேன்" என்று சண்முகம் பேசிக்கொண்டிருக்கும்போதே செல்போன் சிணுங்கியது. பேச்சு தடைபட்டதில், அந்த அம்மா மல்லிகாவைக் கூட்டிக்கொண்டு உள்ளே சென்றுவிட, சண்முகம் போனில் யார் என்று பார்த்தார். அமெரிக்காவிலிருந்து மகன் ஆனந்த். 'போச்சு!' என்று தலையில் கைவைத்துக் கொண்டார். தொடர்ந்து போன் அலற, கட் பண்ணிவிட்டார். மறுபடி அடித்தது. ஏதோ ஒரு அசட்டு தைரியத்தில் ஆன் பண்ணி 'ஹலோ' என்றார்.

"ஏன்ப்பா போனை கட் பண்றீங்க...? மனசாட்சி உறுத்துதா?" என்று எடுத்த எடுப்பிலேயே கடித்தான் ஆனந்த்.

"எ... என்னப்பா சொல்ற?" என்று தடுமாறினார் சண்முகம்.

"ஒண்ணும்தெரியாத மாதிரி நடிக்காதீங்கப்பா. எல்லாத்தையும் அக்கா போன்ல சொல்லி அழுதா. யார் அந்தப் பொம்பள? எதுக்கு அவள வீட்ல சேர்த்து வச்சிருக்கீங்க?"

"அதைச் சொல்லலியா உங்க அக்கா?"

"நீங்களாப்பா இப்படி? எங்களுக்கு புத்தி சொல்லி வளர்த்தீங்களேப்பா... உங்க புத்தி ஏன்ப்பா இப்படிப் போகுது..."

"நான் ஒண்ணும் தப்பு செய்யலப்பா"

"உங்க கோணத்துலருந்து பார்த்தா அது தப்பா தெரியாது. அடுத்தவங்க பக்கமிருந்து பாருங்க. அசிங்கம் புரியும்."

"என்னப்பா இப்படிப் பேசறே..."

"வேற எப்படிப் பேசறது? மானம் போகுது... நம்ம சொந்தக்காரங்களுக்குத் தெரிஞ்சா எத்தனை அசிங்கம்... மொதல்ல வீட்டை விட்டு அனுப்புங்கப்பா அவங்கள.."

"....."

"என்னப்பா பதில் பேச மாட்டீங்க..." எதுவும் சொல்லாமல் போனைத் துண்டித்தார் சண்முகம். மறுபடியும் அடித்தது. ஆனால் அது ஆனந்த் இல்லை. பெங்களூரிலிருந்து மருமகன் அரவிந்த்.

(தொடரும்)



டெலிஃபிலிமில் சுஜாதா!

குறுந்தகட்டில் டெலிஃபிலிம்களை உருவாக்கி விற்பனை செய்து வரும் பாம்பே கண்ணனின் இரண்டாவது தயாரிப்பு 'மாமா விஜயம்!' எழுத்தாளர் சுஜாதாவின் குறுநாடகமொன்றுக்குத்தான் இப்படி உயிர் கொடுத்திருக்கிறார்கள். டெல்லி கணேஷின் நகைச்சுவைதான் இதில் ஸ்பெஷல். குயிலி, வையாபுரி, ப்ரியா மகாலட்சுமி போன்றோரும் நடித்திருக்கிறார்கள்.

"மேற்கத்திய நாடுகளில், மொத்த குடும்பமும் ஒன்றாக உட்கார்ந்து ஜாலியாக ரசிக்கும்படியான ஃபேமிலி என்டெர்டெயின்மென்ட் சி.டி.க்கள் நிறைய உண்டு. அதுமாதிரியான ஒரு முயற்சிதான் இது" என்கிறார், பாம்பே கண்ணன்.

- மௌலி

கும்பாபிஷேக குளறுபடி..



• 3500 ஆண்டுகள் பழைமை வாய்ந்த, பட்டுப்போன மாமரம்...



• சரிந்த நிலையில் மதில்...

பஞ்ச பூத ஸ்தலங்களுள், நிலத்துக்குரியது காஞ்சிபுரம். ஒருமுறை பார்வதிதேவி விளையாட்டாக சிவபெருமான் கண்களை மூட, உலகமே இருண்டது. உடனே சிவபெருமான் நெற்றிக்கண்ணைத் திறந்து இருளை அகற்றினார். செய்த குற்றத்துக்காக பூமிக்குச் சென்று மன்னித்து அருள தவம் செய்யுமாறு பார்வதிக்குச் சொன்னார் ஈசன். பூமிக்கு வந்த பார்வதி, காஞ்சிபுரம் கம்பையாற்றங்கரையில் (இப்போது வேகவதி), மண்ணில் சிவலிங்கத்தை வைத்துப் பூஜை செய்து வந்தார். பூமியிலும் சிவபெருமானின் திருவிளையாடல் தொடர்ந்தது. ஆற்றில் வெள்ளம் பெருகச் செய்தார். மணல் லிங்கம் அடித்துச் செல்லாதபடி கைகளால் அணைத்துக்கொண்டார் பார்வதி. பின்னர் பார்வதியின் பக்தியை மெச்சி அவரை மன்னித்தார் சிவன். இது புராணம். மணலால் பிடித்த லிங்கத்தை மக்கள் வழிபடத் துவங்கினர். நிலத்துக்குரிய ஸ்தலம் ஆயிற்று காஞ்சிபுரம். ஒரு மாமரத்தின் அடியில் எழுந்தருளியதால், ஏகம் + ஆம்ரம் (ஆம்ரம் என்றால் வடமொழியில் மாமரம்), ஏகாம்பரம் ஆனார் ஈசன். பின்னர் ஏகாம்பரநாதர் ஆகி, இப்போது திருவேகம்பர் என்று அழைக்கப்படுகிறார்.



• திருப்பணி நிகழாத திருக்குளம்

23 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள ஏகாம்பரேஸ்வரர் கோயிலில் ஐந்து பிராகாரங்கள் உள்ளன. பல்லவர், சோழர், விஜயநகர அரசர்கள் என்று காலம், காலமாய்ப் பல்வேறு அரசர்கள் திருப்பணிகள் செய்து கோயிலை அபிவிருத்தி செய்திருக்கிறார்கள். 18-ம் நூற்றாண்டில் நாட்டுக்கோட்டை நகரத்தார் மிகப்பெரிய அளவில் திருப்பணிகள் செய்து, கலையழகுடன் கோயிலைப் புதுப்பித்துக் கட்டினர். உள்நாட்டு பக்தர்கள் தவிர வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகளும் இந்தக் கோயிலுக்கு நிறைய வருகிறார்கள். ஆகம விதிகளின்படி பன்னிரண்டு ஆண்டு



• சிதிலமடைந்த கல்யாண மண்டபம்...

களுக்கு ஒரு முறை கோயிலுக்குக் குடமுழக்கு செய்ய வேண்டும். ஏகாம்பரேஸ்வரர் கோயிலுக்கு, கடந்த 1992-ம் ஆண்டு கும்பாபிஷேகம் நடந்தது. கால ரீதியாகப் பார்த்தால் 2004-ல் மீண்டும் கும்பாபிஷேகம் நடந்திருக்க வேண்டும். அந்த அடிப்படையில் 2002-ல் இரண்டரை கோடி திட்ட மதிப்பீட்டில் திருப்பணிகள் தொடங்கப்பட, ஏகம் பரின் பக்தர்கள் பலர், திருப்பணிகள் பலவற்றை ஏற்றுச் செய்ய முன்வந்தனர். ஆனால் பணிகளில் வேகம் இல்லை. கிட்டத்தட்ட நான்கு வருடங்களுக்கு மேலாகி



யாது என்பது ஒரு பக்கம் இருக்க, செய்து முடிக்கும் திருப்பணிகளின் தரமும் கேள்விக்குரியதாய் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. குறைகளோடு கும்பாபிஷேகம் நடப்பது உலக க்ஷேமத்துக்கு நல்லதல்ல'' என்று வருத்தத்துடன் சொன்னார்.


'நவீன கருவிகள், புதிய தொழில்நுட்பம் போன்றவற்றை வைத்துக்கொண்டு என்ன வேண்டுமானாலும் சாதிக்கலாமே' என்றபோது அந்த பக்தர், 'கோயில் பணி என்பது நீங்கள் நினைப்பது போலல்ல' என்று நிலுவையில் நிற்கும் வேலைகளைப் பட்டியல் போட்டார்.

லக்கத்தில் காஞ்சி!

பும் பணிகள் முடியவில்லை. இந்த நிலையில் வரும் ஆகஸ்ட் ம் தேதி கும்பாபிஷேகம் என்று நாள் குறித்து, ஸ்வாமியை பாலாலயம் செய்து விட்டார்கள் (பாலாலயம் என்றால், ஸ்வாமியை கருவறைக்கு வெளியே கொண்டு வந்து வைத்து கும்பாபிஷேகம் முடியும்வரை நித்திய பூஜைகள் செய்வது). பாலாலயம் செய்து 90 நாட்களுக்குள் குடமுழுக்கு செய்ய வேண்டும். யாக சாலைக்குப் பந்தக்கால் நாட்டிவிட்டார்கள். யாக சாலைக்கு பந்தக்கால் நாட்டிய 5 நாட்களுக்குள் குடமுழுக்கு செய்தாக வேண்டும். இந்தத் தகவல்களை நமக்குச் சொன்ன ஏகாம்பரேஸ்வரரின் பக்தர் ஒருவர் "இன்னமும் இருக்கிற குறுகிய காலகட்டத்தில், எடுத்துக்கொண்ட திருப்பணிகள் முடி

"192 அடி உயரத்துடன் ஒன்பது நிலைகளைக் கொண்டது ராஜகோபுரம். திருப்பணி செய்ய ஒரு முறை சாரம் கட்டி அது மழை, வெயிலில் உளுத்துப்போய் வீணாகி விட்டது. மறுபடி சாரம் கட்டியிருக்கிறார்கள். வேலை துவங்கவில்லை. ஆயிரம்கால் மண்டபத்தின் மேல், பதினாறு கால் கல்யாண மண்டபம் அமைக்க வேண்டும். பங்குனி உத்திரத்தின் போது ஸ்வாமி திருக்கல்யாணம் இங்குதான் நடக்கும். நந்தி மண்டபத்தில் இன்னமும் வேலைகள் துவங்கவில்லை. புதிய கொடிமரம் வைத்து ஓராண்டாகியும் செப்புத்தகடு போடாததால் மரம் வீணாகிக் கொண்டிருக்கிறது. ஸ்தல விருட்சமான மாமரத்தைச் சுற்றி சிமெண்ட் தரை போட்டதால்தான் 3000 ஆண்டுகள் பழைமையான மாமரம் பட்டுப்போயிற்று. இப்போது புதிய மாமரம் வளர்ந்து வருகிறது. சுற்றிலும் சிமெண்ட் தரைகள் சீர் செய்யப்பட்டு பூமிக்குள் நீர்போக வழி செய்ய வேண்டும். சிவகங்கை குளத்தில் இதுவரை எந்தப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை. கருவறை திட்டப்பணிகள் நிறைவேற மட்டும் இரண்டு மாதங்கள் ஆகும். கருவறை தங்க விமானம் சரி

● சரிந்த நிலையில் மேலக்கோபுரம்...



செய்யப்பட வேண்டும். இன்னமும் சுற்றுப்பிராகாரங்கள், அதில் உள்ள சன்னதிகள், வெளிப்புற மதில் ஆகியவற்றிலும் திருப்பணிகள் நடைபெற வேண்டியுள்ளன. செய்த திருப்பணிகளிலும் பல குறைகள் உள்ளன. ரிஷி கோபுரம் பல அழகிய சிலைகளைக் கொண்டது. அதில் சிமெண்ட் கரைசலை ஊற்றி வர்ணம் அடித்துவிட்டார்கள். கலை நுணுக்கம் அறவே போயிற்று. அதுவும் மூன்றாண்டுகள் ஆகிவிட்டன. மேலக் கோபுரம், கல் சாரம் விரிசல் விட்டுச் சரிந்திருக்கிறது! இந்த நிலையில் கோபுரத்தை மட்டும் சரி செய்தால் போதாது. கோபுரத்தின் உறுதி கேள்விக்குரியதாக ஆகிவிட்டது'' என்று அடுக்கிக் கொண்டே போனார், அந்த பக்தர்.


நாம் கோயிலுக்குச் சென்றபோது ராஜகோபுரத்தை அடுத்த கோயில் வாசல் வெளி மண்டபத்தில் மட்டும் சுத்தம் செய்யும் பணி நடைபெறுவதைப் பார்த்தோம். கட்டுமானத்தை வலுப்படுத்தாவிட்டால் மேலக் கோபுரம் விழுந்து விடும் நிலைதான். அப்புறம் ஆயிரங்கால் மண்டபத்திலும், இரண்டாம் பிராகாரத்திலும் திருப்பணிகள் நடக்கின்றன. கொடிமரத்திற்கு செம்புக்காப்பு தயாரிக்கும் வேலை நடக்கிறது. மொத்தத்தில் நடக்கும் வேலைகளைப் பார்த்தால் ஆகஸ்ட் 31ம் தேதிக்குள் முழு வேலைகளும் நடந்து முடியுமா என்ற சந்தேகமே நமக்கும் ஏற்பட்டது. நமது சந்தேகத்தைக் கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் பஞ்சாட்சரம் அவர்களிடம் கேட்டோம்.

"நீங்கள் சந்தேகப்படும்படி எதுவும் நடக்காது. திட்டமிட்டபடி எல்லாம் குறிப்பிட்ட கால கட்டத்தில் நடந்து முடியும். நிதிப்பிரச்னை எதுவும் கிடையாது. ராஜகோபுரமும், மதில் சுவரும், அறநிலையத்துறையின் மூலமாகவே ஒப்பந்தத்தில் நடக்கிறது. அந்த வேலைகளும் முடிந்துவிடும். குறைகள் ஏதும் சுட்டிக்காட்டப்பட்டால் திருத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஏகாம்பரேஸ்வரர் அருளால் எல்லாப் பணிகளும் குடமுழுக்குக்கு முன்னரே முடிந்துவிடும். இரட்டைத் திருமாளிகைப் பகுதியில் அரங்கம் கட்டி, ஆன்மிக மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடத்தும் திட்டமும் இருக்கிறது'' என்றார் பஞ்சாட்சரம்.

அறங்காவலர் குழுத் தலைவர் இப்படி நம்பிக்கை தெரிவித்தாலும் பக்தர்களின் சந்தேகம் தீர்ந்தபாடில்லை. எனவே அறநிலையத்துறை அமைச்சர் இந்த விவகாரத்தில் தனிக்கவனம் செலுத்தி, பக்தர்கள் முழு திருப்தி அடையும்வகையில் திருப்பணிகளை முடித்துக் கும்பாபிஷேகம் நடத்த ஏற்பாடு செய்வதே முறையாக அமையும்.

- ஸ்ரீநி

குறிப்பு: படங்கள் 9.07.06 அன்று எடுக்கப்பட்டவை.



● பராமரிக்கப்படாத கம்பா நதிக்குளம்...



அந்த நான்கு பேர்...!

விஜய் டீ.வி.யின் சூப்பர் டூப்பர் ஹிட் நிகழ்ச்சிகளில் ஒன்று ஏர்டெல் சூப்பர் சிங்கர். மொத்தம் 24 ஆயிரத்து 36 பேர் இந்தப் போட்டிக்கு விண்ணப்பித்தார்கள். பல்வேறு கட்டத் தேர்வுகளையும் தாண்டி கௌதம் பரத்வாஜ், மாயா, அனிதா, நிக்கில் மேத்யூ ஆகிய நான்கு பேர் தேர்வாகியுள்ளனர். அவர்களின் அனுபவத்தைக் கேட்டோம்...

கௌதம் பரத்வாஜ்: கடைசி பரீட்சையன்று எனக்கு இரண்டாம் சுற்று. ஏகப்பட்ட டென்ஷன், புத்தகத்தைத் திறந்தால், மனசுக்குள் பாட்டு ஓடியது. பிராக்டீஸ் பண்ணினால், பாடம் என் மனத்தை ஆக்கிரமித்தது. பரீட்சையைப் பதினைந்து நிமிடம் முன்னாலேயே எழுதி முடித்து விட்டு வெளியே வந்தால், விஜய் டீ.வி. யிலிருந்து கார் காத்துக் கொண்டிருந்தது.

மாயா: என் சக மாணவி ஒருத்தி சூப்பர் சிங்கர் போட்டியில் கலந்துகொள்ள விரும்பினாள். விண்ணப்பம் வாங்க என்னைச் சும்மா கூட அழைத்துக் கொண்டு போனாள். போகிற வழியில் நாமும் ஏன் பங்கேற்கக்கூடாது என்ற எண்ணம் ஏற்பட்டது. ஆனால் நாங்கள் சென்றபோது அப்ளிகேஷன் கொடுப்பது முடிந்துவிட்டது. இருந்தாலும் திரும்பிப் போக மனசு இல்லை. அங்கேயே கால் கடுக்க ஐந்து மணி நேரம் நின்று என் ஆர்வத்தை எடுத்துச்சொல்லி, பாடிக் காட்டி விண்ணப்பம் பெற்றேன்.

அனிதா: ஒரு சுற்றில், மலையாளப் பாடல் ஒன்றைக் கொடுத்து பிராக்டீஸ் செய்யச் சொன்னார்கள். எனக்கு மலையாளம் தெரியாது என்றாலும், இரவு முழுக்க பிராக்டீஸ் பண்ணினேன். மறுநாள் காலையில், அந்தப் பாட்டின் மலையாள வரிகளுக்கு, தமிழ் வரிகளைக் கொடுத்து இதைப் பாடுங்கள் என்று சொல்லி விட்டார்கள். எனக்கு ரொம்பவே டென்ஷனாகிவிட்டது.

நிகில் மேத்யூ: ஒரு பாடல், சினிமாவில் எந்த உணர்ச்சியில் பாடப் பட்டதோ, அதற்கு முற்றிலும் மாறுபட்ட ஓர் உணர்ச்சியில் அந்தப் பாட்டைப் பாடும் சுற்று ஒன்று இருந்தது. என்னை கமல்ஹாசனின் 'இளமை இதோ இதோ' பாட்டை, ஒரு குடிகாரன் பாடுவதைப் போல பாடச் சொன்னார்கள். நன்றாக பாடிப் பழகினாலும் எனக்கு என்னவோ போட்டியில் நடுவர்கள் முன்னால் பாடியபோது என் முழுத் திறமையையும் காட்டிப் பாடவில்லை என்ற எண்ணம். ஆனால் நடுவர்கள், 'நீங்கள் மிக நன்றாகப் பாடினீர்கள்' என்றபோது வானத்தில் மிதந்தேன்.

- கௌதம்ராம்

அஜினோமோட்டோ என்கிற ஒரு சமையல் பொருள் நல்லதா, கெட்டதா என்கிற விவாதம் இன்றும் நம் ஊரில் நடந்து வருகிறது. அஜினோமோட்டோ கலந்த உணவு என்றாலே வாயைப் பொத்திக்கொள்கிறவர்கள் உண்டு. உண்மையில் இதன் பின்னணியில் பல உண்மைகள் கொட்டிக் கிடக்கின்றன. அஜினோமோட்டோ என்பது ஒரு சமையல் பொருளே கிடையாது. ஒரு பிராண்ட்தான். இன்னும் இது பற்றிய பல தகவல்களை நம்மிடையே பகிர்ந்து கொண்டார், ஜப்பான் கம்பெனியான அஜினோமோட்டோவின் இந்தியக் கிளை நிர்வாக இயக்குநர் மனோகர்.

"நாங்கள் முதலில் ஒன்றைத் தெளிவு படுத்த விரும்புகிறோம். அஜினோ மோட்டோ என்பது மசாலாபோல உணவின் சுவையைக் கூட்டும் மோனோ சோடியம் குளுடமேட் என்கிற பொருளைத் தயாரிக்கும் கம்பெனிதான். ஆனால் ஜெராக்ஸ், டால்டாபோல கம்பெனியின் பெயரே பொருளுக்கும் நிலைத்துவிட்டது. அஜினோமோட்டோ என்பது ஜப்பானிய வார்த்தை. முதல் சுவை என்று அதற்கு அர்த்தம். பொதுவாக காளான், தக்காளி, கடல் பாசிகளில் ஒரு தனிச் சுவை இருக்கும். காரணம் அதிலுள்ள மோனோ சோடியம் குளுடமேட் என்கிற புரதச்சத்துதான். இதைக் கொண்டு தனியாக ஓர் உணவுப் பொருளைத் தயாரிக்கலாம் என்று 1909-ல் ஜப்பானியப் பேராசிரியர் ஒருவரால் ஆரம்பிக்கப்பட்டது தான் அஜினோமோட்டோ நிறுவனம்.



அப்போது கடல் பாசியிலிருந்து குளுடமேட் பிரிக்கப்பட்டு, உணவுப் பொருளாக ஜப்பானில் முதன்முத லாக விற்கப்பட்டது. சிறிதளவு தூளை குழம்பு, ஃப்ரைட் ரைஸில் கலந்து மக்கள் உண்டபோது புதுச் சுவையை உணர்ந்தனர். 1960-களில் சைனீஸ் ஹோட்டல்கள் இந்தியாவில் தோன்ற ஆரம்பித் தன. அஜினோமோட்டோ தூளைக் கலப்பதால் உணவில் சுவை கூடுவதாக மக்கள் உணர்ந்தனர். 1970களில் அமெ ரிக்காவில் ஒரு குழப்பம் நிகழ ஆரம் பித்தது. சைனீஸ் உணவகங்களில் அஜினோமோட்டோ கலந்த உணவை உண்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் உடல் உபாதைகளால் அவதிப்படுவ தாக புகார் கூற, இந்தச் செய்தி உல



அஜினோமோட்டோ...

ஆபத்தா? அருஞ்சுவையா?

கம் முழுக்கப் பரவ ஆரம்பித்தது.

அதிலிருந்து அஜினோமோட்டோ என்றால் ஏதோ அபாயமுள்ள உணவாகக் கருத ஆரம்பித்தனர். எங்களின் கடும் முயற்சியால் இறுதியாக 1987ஆம் ஆண்டு அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்துக் கழகமான எஃப்.டி.ஏ., அஜினோமோட்டோவைக் கலப்படமற்ற சுகாதாரமான உணவு நிறுவனம் என்று சான்றிதழ் வழங்கி அவப் பெயரை நீக்கியது.



• மனோகர்

ஆனால் இந்தியாவுக்கு இந்தச் செய்தி சரியாக வந்து சேரவில்லை. சைனா மற்றும் தைவானிலிருந்து கலப்படப் பொருள்கள் பல அஜினோமோட்டோ என்கிற பெயரில் வந்திறங்கி எங்களுக்கு மேலும் சிக்கலைக் கொடுத்தன. இதையெல்லாம் தகர்த்தெறியவே 2003-ல் சென்னையில் அஜினோமோட்டோவின் இந்தியக் கிளை தொடங்கப்பட்டது. ஜப்பானிலிருந்து மோனோ சோடியம் குளூடமேட்டை இறக்குமதி செய்து புதிய பாக்கெட்டுகளில் விற்க ஆரம்பித்தோம். மக்களிடம் விழிப்புணர்வுப் பிரசாரம் நடத்தினோம். 'அஜினோமோட்டோ கெமிக்கலிலிருந்து தயாரிக்கப்படுகிறது; மாட்டு எலும்பைச் சேர்க்கிறார்கள்' என்கிற வதந்தியைப் பொய்யாக்கினோம். 'இது முழுக்க முழுக்க ஒரு சைவப் பொருள். முன்பு எப்படி கடல் பாசி மற்றும் பின்னர் சோயாவிலிருந்து குளூடமேட்டைப் பிரித்தெடுத்தோமோ, அதேபோல இப்போது மரவள்ளிக் கிழங்கு மற்றும் கரும்புச் சாற்றைக் கொண்டுதான் தயாரிக்கிறோம் என்று மக்களுக்குப் புரிய வைத்தோம். இதற்கு நல்ல பலன் கிடைத்தது.

அஜினோமோட்டோவை சர்க்கரை, மசாலாத்தூள் போல கூடுதல் சுவைக்கு மட்டுமே பயன்படுத்தலாம். கார உணவுகள் எதுவாகயிருந்தாலும் அதில் சில சிட்டிகை கலந்து பாருங்கள். அப்புறம் புரியும் இதன் மகிமை. திருவண்ணாமலையில் கரும்புத் தோட்டங்களும் அதற்கு அருகிலுள்ள ஆத்தூரில் மரவள்ளிக் கிழங்கின் விளைச்சல்களும் அதிகம். ஆகவே அடுத்ததாக திருவண்ணாமலை அருகில் ஒரு தொழிற்சாலை அமைக்கவுள்ளோம். மைசூரிலுள்ள மத்திய உணவுத் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிலையம் எங்களுக்குத் தரச் சான்றிதழ் அளித்துள்ளது. இப்போது இந்தியாவில் ஆயிரத்து ஐந்நூறு டன்னுக்கு அஜினோமோட்டோ விற்பனையாகிறது. முன்பிருந்த புரளிகளெல்லாம் தற்போது களையப்பட்டுவிட்டன என்பதற்கு இதுவே சான்று"

- செந்தில்

நீங்கள் கேட்டவை-தராசு

● கே. தெய்வசிகாமணி, ஆவடி

? தெரியாத மொழிப் படங்களில் நடிக்க மாட்டேன் என்கிறாரே விஜய்?

! புரியாத பாடல் வரிகளுக்கு ஆட மாட்டேன் என்றும் சொன்னால் புண்ணியமாகப் போகும். சொல்வாரா?

● செ. சத்தியசீலன், கிழவன் ஏரி

? "மத்திய அரசின் ரிமோட் சென்னையில்தான் இருக்கிறது" என்ற அத்வானியின் குற்றச்சாட்டு மீண்டும் ஒருமுறை நிரூபணமாகியிருக்கிறதே?

! மற்றொரு தேர்தலில், தமிழகத்தின் ரிமோட் மத்திய அரசின் கைக்குப் போய்விடக்கூடும் என்பதை உணர்ந்து, இரு தரப்பும் சுமுகமாக ஒத்துழைப்பது நல்லது.





• புலி வாலைப்..... • ... பிடித்தபடி!

● கன்னிக்கோயில் இராஜா, சென்னை-18

? "விடுதலைப்புலிகளை பகிரங்கமாகவே சந்திப்பேன்" என்கிறாரே வைகோ?

! திருமாவளவனோ, தமிழ் ஈழத்தை இந்தியா அங்கீகரிக்க வேண்டும் என்கிறார்! புலி வாலைப் பிடிக்கிற இந்த முயற்சியால் தமிழகம் அபாயத்துக்கு உள்ளாகிறது. அதைவிடப் பெரிய அபாயம், இந்தப் போக்குக்கு மத்திய கூட்டணி அரசோ, மாநில தி.மு.க அரசோ கண்டனம் தெரிவிக்காதது தான்.

● எம். சம்பத், வேலாயுதம்பாளையம்

? 'உயிர்' போன்ற உறவுகளைக் கொச்சைப்படுத்தும் திரைப்படங்களை, சென்ஸார் போர்டு எப்படி அனுமதிக்கிறது?

! சென்ஸார் போர்டு என்பது சில வழிகாட்டல் நெறிகளின் அடிப்படையில்தான் இயங்குகிறது. கருத்துச் சுதந்திரம் அரசியல் சாசனத்தில் உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், ஆபாசம், வன்முறை, வக்ரம் போன்ற பலவற்றுக்கு மனசாட்சி, உயர் ரசனை ஆகியவைதான் உரைகல்லாக முடியும். சினிமா தயாரிப்போர் - இயக்குவோரிடம் இவை இல்லாதபோது, இத்தகைய படங்கள் வெளிவருகின்றன.



• அபராத காணிக்கை!

● வே. முருகேசன், சென்னை - 88★

? மீரா ஜாஸ்மின் கோயிலுக்குச் சென்றதால் புனிதம் கெட்டுப் போயிற்று;

☐ ரூ. 100 பரிசு பெறுபவர்:
எஸ். சரஸ்வதி,
க/பெ. ஆர். சம்பத்,
78/35, பெருமாள் கோயில் தெரு,
வேலப்பாடி அஞ்சல், வேலூர் - 1

அதைச் சரிகட்ட பத்தாயிரம் ரூபாய் கொடுத்தாராமே? பத்தாயிரம் ரூபாயால் இழந்த புனிதம் மீண்டு வந்து விடுமா?

! புனிதம் கெட்டது கோயிலுக்கு அல்ல. அது ஒரு போதும் கெடாது. இழப்பு, பொய் சொல்லி ஏமாற்றிய மீரா ஜாஸ்மினுக்குத்தான். அதற்கான அபராதமே பத்தாயிரம் ரூபாய். □

● எஸ். சரஸ்வதி, வேலப்பாடி

? தங்களால்தான் என்.எல்.சி தனியார்மய திட்டம் நிறுத்தப்பட்டது என்று கருதும் கருணாநிதி அன்ட் கோவினர், ஏன் பெட்ரோல் - டீசல் விலை உயர்வை எதிர்த்துக் குரல் கொடுக்கவில்லை?

! குரல் கொடுக்கவில்லை என்று சொல்ல முடியாது; ஆனால் அது குறைந்தபட்ச செயல்திட்டத்தில் அடங்காத விஷயம். அதனால் தம் பங்குக்குக் கூடுதல் விற்பனை வரியைத் தள்ளுபடி செய்தார். நெய்வேலி விவகாரம் குறைந்தபட்ச செயல்திட்டத்தில் வருவது. அதனால் வலிமையாகக் குரல் எழுப்ப முடிந்தது; அவசியமாயிற்று.

● தங்கம், சென்னை - 61


? கால்பந்து போட்டியில் இறுதி வரை வந்த ஃபிரான்ஸ் வீரர்கள் பற்றி...?

! காப்டன் ஜிடேன், தலையால் எதிர் அணி வீரரை முட்டியதன் மூலம் இந்தச் சாதனையில் சரிவு ஏற்பட்டுவிட்டது. இத்தாலி உலகக் கோப்பையைப் பெற்ற போதிலும் மாட்டராஸி, தாம் ஜிடேனை ஏசியதாக ஒப்புக் கொண்டதில் கோப்பையில் நசுங்கல்!

● ஆர்.எம்.சு. மலை, நல்லான்பட்டி

? 35 ஆண்டுகளுக்குப் பிறகு, ராஹுல் டிராவிட் தலைமையிலான இந்திய அணி, மேற்கிந்திய தீவுகள் அணியை வென்று சாதனை படைத்திருப்பது பற்றி...?

! ஒருநாள் தொடரில் ஏற்பட்ட தோல்வியை ஈடு செய்த மகத்தான வெற்றி. உலகக் கோப்பை கால்பந்து சுவாரஸ்யத்தில் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டது. இன்றைய கேப்டன் - கோச் - டீம் ஒத்துழைப்பு தொடர்ந்து மேலும் பல வெற்றிகளைக் குவிக்கட்டும். ○



• 'ரிமோட்' குற்றச்சாட்டு!



• வெற்றித் தலைமை!



• பாட்டும் படமும்!

விடுதலைப்புலிகளைச் சந்திப்பாராமே வைகோ?

* ரூ. 50 பரிசு பெறுபவர்:
வே.முருகேசன்,
'சம்பத் நிலையம்'
45, பெரியார் நகர் முதல் தெரு,
ஆதம்பாக்கம்,
சென்னை - 600 088



ஆச்சார்யா

காமெடி இல்லை... டூயட் இல்லை. ஆனா என்கவுன்ட்டர், பழிக்குப்பழி, டமால் டுமீல் எல்லாமிருக்கு. ரௌடியிஸத்துக்குக் கொம்பு சீவுற இன்னொரு படம்னாலும் ஆச்சார்யாவுல ஆச்சர்யங்கள் ஏராளம். பாலாவோட சிடரான இயக்குநர் ரவி, தன் குருவோட பாதிப்பு விலகாம படம் எடுத்திருக்காரு (பாலாபோல இவருடைய முதல் படத்துக்கும் மார்க்கெட் இல்லாத ஹீரோ!). படம் முழுக்க ஒரு இறுக்கம். சந்தோஷக் காட்சிகள் குறைவு. 'குத்து புகழ்' ஸ்ரீகாந்த்தேவாவோட பாடல்கள்லகூட சோகம் இழையோடுது. ஆனா அடுத்து என்ன, அதற்கடுத்து என்னங்கிற தேடலை ரசிகர்கள் மனசுல விதைச்சதுதான் இயக்குநரோட பெரிய வெற்றி. யதுநந்தனா வர்ற விக்னேஷ், பிறவியிலேயே சபிக்கப்பட்டவர். வரிசையா அப்பா, அம்மா, இளமை வாழ்க்கைன்னு எல்லா சுகங்களையும் இழக்கறாரு. விதி அவரை ஒரு இன்ஸ்பெக்டரோடு சகவாசம் ஏற்படுத்திக் கொடுத்து ஆட்டத்தையே மாத்துது. உள்ளூர் ரௌடிகளோட ஸ்நேகம் கிடைச்சு தானும் களத்துல இறங்கி, என்கவுன்ட்டருக்குப் பயந்து... படத்தோட பின் பாதியில எல்லா கேமும் நடக்குது.

மாயக்காவா வர்ற வடிவுக்கரசி அதகளம் பண்ணியிருக்காங்க நடிப்புன்னா இதுதான்னு இளம் நடிகைகளுக்கான டியூஷன் அவங்களை எதிரிகள் சுத்தி வளைச்சு பலி போடறது திக்திக். தமிழ் திரையுலகமும் விக்னேஷ்ும் ஒரு வரையொருவர் ரொம்பவே மிஸ் பண்ணியிருக்காங்க. ஏழை பிரா மணனான அவர் மேலே எல் லோருக்கும் ஏற்படற பரிதாபமும் நேசமும் அழகா சொல்லப்பட் டிருக்கு. ஆனா ஃபுல் டைம் ரௌடி யான நாசரை இந்த எல்.கே.ஜி ரௌடி மிரட்டறது.. நம்ப முடியல

ஒப்புக்கு ஹீரோயின் மற்றும் சொல்லாத/செல்லாத ஒரு காதல் இவங்க போலீஸாகி தன் சொந்த ஊருக்கே வேலைக்கு வர்றது விக்னேஷைப் பிடிப்பதற்கான சூழல் உருவாகறதும் தியேட்டர்ல டிக்கெட் வாங்கும்போதே தெரிஞ் சுடுது. விக்னேஷ் ரௌடியா உரு மாறுறதை ஒரு துண்டு சீன்லயாவது தெளிவா காண்பிச்சிருக்கலாம்.

இயக்குநரும் எடிட்டரும் படத்தை அழகான வடிவத்துக்குக் கொண்டு வந்திருக்காங்க. ச பத்துல வந்த ரௌடி படங்கள் ஆச்சார்யாவை தாராளமா மெ சிக்கலாம். எல்லாஞ் சரி, அடுத் ரெண்டு வருஷத்துக்கு இந் ரௌடி படங்களையெல்லா என்கவுன்ட்டர் பண்ணின என்ன?

- லஜ்ஜாவ

Registered with the Registrar of Newspaper of India under No. 041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 06 - 08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 06 - 08* Registered as a Newspaper in Srilanka

